விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ராம்கோ சீமெந்தைப் பயன்படுத்துங்கள்; உங்கள் பணத்தை மீதப்படுத்துங்கள்.

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆவணி 10 திங்கட்கிழமை (26.08.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 250

# இலங்கை வந்தார் நவநீதம்பிள்ளை!

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை நேற்று காலை 9.50 மணியளவில், ஜேர்மனியிலிருந்து யுஎல் 558 என்ற விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

இவருடன் நான்கு பிரதிநிதிகளும் வருகை தந்தனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை எதிர்வரும் 31ஆம் திகதி வரை 7 நாட்கள் இங்கு தங்கியிருப்பதோடு வடக்குக்கு இரண்டு நாள் பயணத்தை மேற்கொள்ள உள்ளார்.

முன்னாள் போர் வலயப் பகுதிகளுக்கும் நவிபிள்ளை சென்று மக்களைச் சந்திக்கவுள்ளார்.

இலங்கையின் உள்நாட்டுப் போரின்போது நடந்துள்ள மனித உரிமை மீறல்கள்ள விசாரிக்க



இலங்கை தவறியுள்ளதாக சர்வதேச மட்டத்தில் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் உள்ள நிலையில், நவநீதம்பிள்ளை (19ஆம் பக்கம் பார்க்க)

## சிற்றூர்திகள் இன்று பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இன்று தனியார் சிற்றூர்தி உரிமையாளர் சங்கம் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளது.

வட பிராந்திய போக்குவத்துச் சபையின் பணியாளர்களுடன் ஏற்பட்ட முரண்பாட்டையடுத்து அதற்கான தீர்வு கிடைக்கும்வரை பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாக தனியார் சிற்றூர்தி உரிமையாளர் சங்கத் தலைவர் கெங்காதரன் தெரிவித்தார்.

நேற்று அதிகாலை போக்குவரத்துச் சபைப் பணியாளர்களுக்கும் தனியார் சிற்றூர்திச் சேவையாளர்களுக்கும் (20ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.போதனா வைத்தியசாலைக்கு நவநீதம்பிள்ளை இன்று விஜயம்

(யாழ்ப்பாணம்)

இன்று மாலை யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இன்று மாலை 6.30 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு விஜயம் செய்யவுள்ளார் என நம்பத்தகுந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வருகைதரும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை வைத்தியசாலை பணிப்பாளரை சந்திப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அதேவேளை யாழ். போதனா வைத்தியசாலையின் வைத்திய நிபுணர்களேயோ அல்லது மருத்துவ பிரதிநிதிகளையோ சந்திப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை எனவும் தெரியவருகிறது.

இதேவேளை ஜப்பானின் உதவியுடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தொகுதியையும் நவநீதம்பிள்ளை பார்வையிடுவார். (ந)

# இலங்கையை விமர்சிக்க நான் வருகை தரவில்லை

## நவநீதம் அம்மையார் தெரிவிப்பு

**இலங்கையை விமர்சிப்பதற்காக தாம் இங்கு வருகை தரவில்லை என தெரிவித்துள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை, நாட்டில் சர்வதேச மனித உரிமை சட்டங்கள் மீறப்பட்டிருந்தால் அது தொடர்பில் கவனம் செலுத்துவதற்காகவே வந்துள்ளதாகவும் தெரிவித்தார்.**

இலங்கையில் அவரது பணிகளுக்கு எதிராக முன்வைக்கப்படும் விமர்சனங்கள் பற்றி சர்வதேச ஊடகம் ஒன்றின் செய்தியாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை அரசாங்கத்தின் அழைப்பை அடுத்தே தாம் இங்கு வருகை தந்துள்ளேன்.

முன்னரே என்னை இலங்கைக்கு வருமாறு அழைத்தனர். எனினும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை வெளியாகும் வரை காத்திருந்தேன். நான் இலங்கையில் பல இடங்களுக்கு விஜயம் செய்ய இருக்கின்றேன். இலங்கையின் (19ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்த முல்லை. வருகிறார்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அடுத்த மாதம் 14-ம் திகதி தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக முல்லைத்தீவிற்கு விஜயம் செய்யவுள்ளார் என சுற்றாடல் துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு நகரின் மத்தியில் அமைந்துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அலுவலகத்தில் நேற்று மதியம் இடம்பெற்ற வேட்பாளர்களுடனான சந்திப்பின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் முல்லைத்தீவு மக்களுக்காக பாரிய அபிவிருத்தி பணிகளை செய்து வருகின்றது. இவ் அபிவிருத்தியின் பயன்களை எமது (19ஆம் பக்கம் பார்க்க)

## ஒக்ரோபரில் இலங்கை வருகிறார் இந்திய வெளிவிவகார அமைச்சர்

(சென்னை)

இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

கொழும்பில் எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள பொதுநலவாய அரசியல் தலைவர்களின் உச்சி மாநாட்டில் பங்கேற்குமாறு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் நேரடியாக அழைப்பு விடுக்க இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கடந்த 18-ம் திகதி புதுடில்லி சென்றிருந்தார்.

இவ்விஜயத்தின்போது இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்தை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்த பீரிஸ், அவரை கொழும்பு வருமாறு அழைப்பு விடுத்திருந்தார்.

இதன்போது, எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நிச்சயம் கொழும்பு வருவதாக சல்மான் குர்ஷித் பீரிஸுக்கு வாக்குறுதி அளித்துள்ளார்.

இலங்கையில் அடுத்த மாதம் 21ஆம் திகதி இடம்பெறவுள்ள வட மாகாண சபைத் தேர்தலை இந்தியா உன்னிப்பாக அவதானித்து வரும் நிலையில், இந்தத் தேர்தல் முடிவடைந்த பின்னர் இலங்கை சென்று அது தொடர்பாக ஆராய சல்மான் குர்ஷித் (19ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் மக்களின் ஒற்றுமையை உலகறிச் செய்ய சந்தர்ப்பம்!

## தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் விக்னேஸ்வரன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

புதியதொரு பரிமாணத்தில் எமது போராட்டத்தை எடுத்துச் செல்ல வல்லவர்கள் நாங்கள் என்பதை ஊரறிய, உலகறிய செய்ய ஒரு சந்தர்ப்பம் எங்களுக்குக் கிடைத்துள்ளது.

எதிர்வரும் 21ஆம் திகதி நடக்கப்போகும் வட மாகாணத தேர்தல் வட இலங்கையில் தமிழ் பேசும் மக்களின் வாழ்வில் ஒரு முக்கியமான மைல்கல் எனத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

இலக்கிய மேடைகளில், சமய மேடைகளில், சட்ட மேடைகளில், சமூகவியல் சார்ந்த (19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இராணுவத்தின் மீதான குற்றச்சாட்டை மறுக்கிறார் இராணுவப் பேச்சாளர்

ஊடகவியலாளர் மந்தனா இஸ்மையில் அபேவிக்ரமவின் வீட்டில் இடம்பெற்ற சம்பவத்துடன் இராணுவத்தை சம்மந்தப்படுத்தி சுமத்தும் குற்றச்சாட்டை நிராகரிப்பதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித் தார்.

பம்பலப்பிட்டிய டிகமன் வீதியில் உள்ள சண்டே லீடர் பத்திரிகையின் ஊடகவியலாளரின் வீட்டிற்குள் சென்ற கொள்ளையர்கள் இராணுவத்தின் கூலி படையினர் என சுமத்தப்பட்டு வரும் குற்றச்சாட்டு தொடர்பில் பதிலளிப்பதற்காக கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த சம்பவத்துடன் தொடர்புபட்ட சாமரகுமார், அசங்க உதயசிறி ஆகிய சந்தேக நபர்கள் இராணுவத்தில் பணியாற்றிய முன்னாள் உறுப்பினர்கள். அவர்கள் தற்போது இராணுவத்தில் பணியாற்றவில்லை.

அவர்களில் மூன்று வருடங்களுக்கு முன்னர் இராணுவத்தை விட்டு சென்றவர் ஒருவரும் உள்ளார். மற்றைய நபரும் இராணுவத்தில் இருந்த தப்பிச் சென்றவர் என்பது விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்தவர் இராணுவத்தில் இருந்து சட்டரீதியாக விலகாமல் தப்பிச் சென்ற நபர். உயிரிழந்த நபரும் இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்ற அவரது சகோதரரும் மற்றுமொரு சகோதரரும் இந்த கொள்ளை குழுவில் உள்ளனர்.

சில ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்திகளின்படி இவர்கள் அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் பணியாற்றிய இராணுவத்தினர் அல்ல. இது முற்றிலும் பொய்யான செய்தி.

இச்சம்பவம் தொடர்பில் கவலை தெரிவிக்கும் அதேவேளை இராணுவத்தின் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டை முற்றாக மறுக்கின்றோம் என்றார். (எ-8)

## வீதிகளில் தேர்தல் சின்னம்; நிறுத்துமாறு ஐ.ம.சு.மு. கோரிக்கை

வீதிகளில் தேர்தல் சின்னங்களை வரைந்து பிரசாரங்களை மேற்கொள்ளுவதை உடனடியாக நிறுத்துமாறு சகல ஐ.ம.சு.மு. வேட்பாளர்களுக்கும் அதன் முதன்மை வேட்பாளர் தவராசா அறிவுறுத்தியுள்ளார். அது தொடர்பில் தேர்தல் ஆணையாளரால் யாழ்.நூல்நிலைய கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்ட தேர்தல் நடைமுறை விளக்கக் கூட்டத்தில் பிரதான வீதிகளில் வேட்பாளர்களினால் மேற்கொள்ளப்படும் இலச்சினைகள் மற்றும் விருப்பு இலக்கங்களை வரைந்து மேற்கொள்ளும் பிரசார நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துமாறு கோரப்பட்டுள்ளது. இவ் வேண்டு கோளை முழுமையாக நடைமுறைப்படுத்தும் வகையில் சகல ஐ.ம.சு.மு. வேட்பாளர்களும் இதனை கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும்.

ஐ.ம.சு.முன்னணியில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களையும் கேட்டுக்கொண்டுள்ளதுடன் பிரதான வீதிகளில் இவ்வாறான பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்வதை தவிர்க்க வேண்மென வும் அவர் கோரியுள்ளார். (எ-1)

## இலங்கைக்கு நேராக சூரியன் கடும் உஷ்ணம் நிலவலாம்

இலங்கைக்கு நேராக சூரியன் உச்சம் கொடுக்கவுள்ளதால் அதிக உஷ்ணத்தை எதிர்பார்க்கலாமென வளிமண்டளவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வட அரைக்கோளத்திலிருந்து தென் அரைக்கோளத்திற்கு நாளை 27ஆம் திகதி முதல் செப்டெம்பர் 8 ஆம் திகதிவரை சூரியன் பயணிக்கவுள்ள இக்காலப்பகுதியில் இலங்கையில் குறிப்பிட்ட சிலபகுதிகளில் அதிக உஷ்ணமாக இருக்குமென வளிமண்டளவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

27 தொடக்கம் 31 வரை வட கிழக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம், சாவகச்சேரி, முகமாலை, குமுழமுனை, கொக்காவில், முல்லைத்தீவு, மன்னார், புளியங்குளம், புல்மோட்டை, மறிச்சுக்கட்டி, தந்திரிமலை, ஹொரவப்பொத்தனை, திருகோணமலை பகுதிகளில் அதிக உஷ்ணமாயிருக்கும்.

அதேபோல் செப்டெம்பர் ஒன்று தொடக்கம் எட்டு வரை தென், மேல், கிழக்கு மாகாணங்களில் கலாஓயா, தலாவ, அளுத்ஓயா, காரைதீவு, கதிரவெளி, மங்களவெளி, தம்புள்ளை, திம்முலாகல, மாதம்பை, குருநாகல், மாத்தளை, சீதுவ, உலப்பனை, வலப்பனை, திருக்கோவில், தங்காலை, காலி, யால, கதிர்காமம் ஆகிய பகுதிகளிலும் அதிக உஷ்ணமாக காணப்படும் என வளிமண்டலத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ-8)

## ஆலய கதவினை உடைத்து சுவாமிசிலை திருட்டு

ஆலயத்தின் கதவினை உடைத்து உள்நுழைந்த திருடர்களினால் அங்கிருந்த சுவாமிசிலை ஒன்று திருடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு சுட்டிபுரம் கண்ணகி அம்மன் ஆலயத்தில் இடம்பெற்றுள்ளது.

இத்திருட்டுச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ஆலயத்தின் பிரதான வாயிற் கதவினை தாண்டிச் சென்ற திருடர்கள் மூலஸ்தானத்தின் கதவினை உடைத்துள்ளனர்.

பின்னர் அங்கு வைக்கப்பட்டிருந்த ஐம்பொன்னிலான அம்மன் சிலையை திருடிக் கொண்டு தலைமறைவாகியுள்ளனர்.

காலைவேளையில் பூசகர் நித்திய பூசைக்காக ஆலயத்திற்கு வந்த போதே சுவாமிசிலை திருடப்பட்டமை தெரியவந்துள்ளது.

உடனடியாக இது தொடர்பில் கொடிகாமம் பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் ஆலயத்தின் பிற பாகங்களிலும் சோதனை மற்றும் தடயங்களை பதிவு செய்து நேற்று மதியம்வரை விசாரணை நடத்தியுள்ளனர்.

இதே வேளை இவ் ஆலயத்தில் கடந்த சில தினங்களிற்கு முன்னரும் ஆலயத்தின் பிரதான வாயின் கதவு உடைக்கப்பட்டு திருட்டு முயற்சி ஒன்றுஇடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-8,85)

## அருணகிரிநாதர் பூசை வழிபாடு

நல்லூர் கந்தன் ஆலயத்தில் இன்று இரவு 7 மணிக்கு அருணகிரிநாதர் பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளது.

நல்லூர்க் கந்தன் உற்சவத்தின் 15-வது நாளில் இடம்பெறும் இவ் வழிபாட்டில் அருணகிரிநாதரின் விக்கிரகம் அர்த்தஜாம பூசை முடிவுற்ற பின் வழிபாட்டிற்காக தெற்கு வீதியில் உள்ள ஸ்தலத்திற்கு வீதியுலாவாக அடியார்களால் எடுத்துச் செல்லப்படும். (8)

## இறுவட்டு வெளியீடு

யாழ்.சின்மய மிஷன் வட மாகாண கல்வித்திணைக்களத்தின் ஆதரவுடன் நடத்தும் திருப்புகழ் இறுவட்டு வெளியீடு இன்று திங்கட்கிழமை 3 மணிக்கு நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள மகேஸ்வரன் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இவ் இறுவட்டிற்கான பாடல் இசையினை யாழ்.மாவட்ட இசை ஆசிரியர்களும் மாணவர்களும் ஆக்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-8)

## குழந்தையை பணயம் வைத்து 10 பவுண் நகைகள் கொள்ளை

தென்மராட்சி, கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வரணி வடக்குப் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நள்ளிரவு வீடு ஒன்றினுள் உட்புகுந்த திருடர்கள், குழந்தையை கொல்லப்போவதாக மிரட்டி சுமார் 10 பவுண் தங்க நகை யைக் கொள் ளையடித்துச் சென்றுள்ளனர்.

இவ் விடயம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கொடிகாமம் வரணி வடக்கு பகுதியில் வீடு ஒன்றினுள் நள்ளிரவு வேளையில் உட்புகுந்த கொள்ளையர்கள் அவ் வீட்டில் வசித்த குழந்தையைக் கொல்லப்போவதாக குழந்தையின் கழுத்தில் கூரிய கத்தியை வைத்து மிரட்டியுள்ளனர்.

குழந்தையை விட வேண்டுமாயின் சகல நகைகளையும் தருமாறு அச்சுறுத்தியுள்ளனர்.

குழந்தையின் உயிரைக் காப்பாற்றும் நோக்குடன் இவ் வீட்டில் வசித்தவர்கள் சுமார் 10 பவுண் தங்க நகைகளை கொள்ளையர்களிடம் ஒப்படைத்துள்ளனர்.

இக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-8)

## யாழ்ப்பாணத்தில் நாளை கவனயீர்ப்பு போராட்டம்

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதப்பிள்ளை அம்மையார் யாழ்ப்பாணம் வருகைதரவுள்ள நிலையில் நாளை 27-ம் திகதி 10மணிக்கு காணாமல் போனோரை கண்டறியும் குழுவினால் கவனயீர்ப்பு நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யுத்தகாலத்தில் காணாமல் போனவர்கள் மற்றும் யுத்தத்தின் இறுதியில் இராணுவத்தினரிடம் சரணடைந்த பின்னர் காணாமல் போனவர்களை கண்டறிதல் தொடர்பாகவும், சிறைகளில்வாடும் தமிழ் அரசியல் கைதிகளதும், புனர்வாழ்வு முகாம்களிலுள்ள முன்னாள் போராளிகளதும், விடுதலை தொடர்பாகவும், இராணுவம் மற்றும் அரசினால் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலப்பறிப்பு, சிங்கள-பௌத்தமயமாக்கல் தொடர்பாகவும் மற்றும் தமிழ் மக்கள் மீது புரியப்பட்ட இன அழிப்புத் தொடர்பாக சர்வதேச பக்கச் சார்பற்ற விசாரணையை வலியுறுத்தியும்.

நவநீதம்பிள்ளை அம்மையாரின் கவனத்தை ஈர்க்கும் முகமாகவும் நடைபெறவுள்ள மேற்படி கவனயீர்ப்பு நிகழ்வுக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முழுமையான ஆதரவை வழங்குகின்றது. இவ் நிகழ்வுக்கு காணாமல் போனவர்களது குடும்பங்கள், நிலப்பறிப்பினால் பாதிக்கப்பட்டவர்கள், அரசியல் கைதிகளது குடும்பங்களைசார்ந்தவர்கள் உட்பட அனைத்துப் பொது மக்களையும் கலந்து கொள்ளுமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அழைப்பு விடுத்துள்ளது. (எ-1)


## காணி தேவை

கிளிநொச்சியில் கரடிப்போக்குச் சந்திக்கும் கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்குமிடையில் 4 பரப்பு அல்லது அதற்கு கூடுதலான காணி தேவை.

ஏ-9 வீதியில் இருந்து 2-ம், 3-ம் காணியும் கட்டிடம் உள்ள காணியும் ஏற்றுக் கொள்ளப்படும்.

விற்பனை செய்யவுள்ளோர்.

**0776341216**

எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(C-4448)

## காணி விற்பனை

• நவிண்டில் றோட்டில் பொலிகண்டி கந்தவனக் கோவிலுக்கு அருகாமையில் (100M க்கு உட்பட்ட) 2 பரப்பும் 15 குளியும் கொண்ட சற்சதுரக்காணியொன்று விற்பனைக் குண்டு.

மேலதிக விபரங்களுக்கு 0752427606 என்ற இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும் தரகர் தேவையில்லை.

(சி-4470)

## பிள்ளையார் இன்

சனி, ஞாயிறு தினங்களில் புஃவே (Buffet) முறையில் இந்திய சமையற்கலை வல்லுநர்களால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் வழங்கப்படும். 6 - 10 pm - 250 /=

தினமும் **12 மணிமுதல் 3 மணிவரை** மிகச் சிறந்த சைவ, அசைவ உணவு வகைகள் வழங்கப்படுகின்றன.

சைவ உணவு: 150/- அசைவ உணவு 180/-

தொடர்புகளுக்கு: இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

(C-4454)

## வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணத்தில் அரச பணிபுரியும் குடும்பம் ஒன்றுக்கு வீட்டில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை.

தொடர்பு :

(இ) **0776631655**

## வீடு வாடகைக்கு உண்டு

திருநெல்வேலி கிழக்கு இராமலிங்கம் வீதி, இல. 56-ல் (பூங்கனிச் சோலைக்கு முன்னால்) உள்ள வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு:- 0716311519 (இ)



வட்டக்கச்சி - கிளிநொச்சி

ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோவில்

## பிரமோற்சவம் - 2013

இன்று வட்டக்கச்சி ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோவிலில் 7-ம் திருவிழா. இன்று எம் பெருமான் குழந்தைக் கண்ணனாக குருவாயூரப்பனாகத் தரிசனம் தரும் நாள். பகல் திருவிழா காலை 9 மணிக்கு பகல் பூசை ஆரம்பமாகி 12 மணிக்கு நிறைவுறும். மாலைத் திருவிழா மாலை 5 மணிக்கு ஆரம்பமாகி இரவு 8 மணிக்கு நிறைவுறும்.

(C-4459) —பரிபாலன சபையினர்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சுத்திகரிப்பு ஆலையில் தீ விபத்து; ஒருவர் பலி, 35 பேர் படுகாயம்!

(விசாகப்பட்டினம்)

எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் ஊழியர் ஒருவர் உடல் கருகி உயிரிழந்தார். 35பேர் படுகாயத்துடன் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் ஆந்திர மாநில விசாகப்பட்டனத்தில் அண்மையில் நிகழ்ந்துள்ளது. இது தொடர்பாக தெரிய வருவதாவது. வழக்கம் போல் 50இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் சுத்திகரிப்பு ஆலையில் வெல்டிங் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

மாலை சுமார் 4 மணியள வில் திடீரென ஆலை தீப்பிடித்து எரியத் தொடங்கியது. ஆலையிலிருந்து கரும்புகை வெளியேறியமையால் ஆலையை அண்மித்த பகுதியைச் சேர்ந்த பொதுமக்களிடம் பதற்றம் ஏற்பட்டது. என்ன நடப்பது என்பதை அறிந்து கொள்ளும் ஆவலில் பொதுமக்கள் ஆலை வளாகப் பகுதியில் திரண்டதால் பரபரப்பு ஏற்பட்டது. பலர் தங்களது உடைமைகளை விட்டுவிட்டு அவசரம் அவசரமாக அப்பகுதியை விட்டு வெளியேறினர்.

தகவல் தெரிந்ததும் தீயணைப்பு வண்டிகள் சுத்திகரிப்பு ஆலைக்கு விரைந்தன. தீயை அணைக்கும் தீயணைப்புப் படை வீரர்கள் துரிதகதியில் செயலில் ஈடுபட்டனர். இதனால் தீ உடனடியாக அணைக்கப்பட்டு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

ஆலையின் குளிரூட்டும் பிரிவில் ஏற்பட்ட மின் கசிவால் தீப்பிடித்துள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. தீ விபத்தில் சிக்கி மேலும் பலர் உயிரிழந்துதிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. (அ-2)

# தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடாத உறுப்பினர்கள் மீது நடவடிக்கை

## ஐ. தே. க தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு, வடமேல் மற்றும் மத்திய மாகாண சபைத் தேர்தலில் பிரசார நட வடிக்கைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ளவர் களில் இந்த வார இறுதி வரையில் அதில் கலந்து கொள்ளாத பிரதேச சபை, மாகாண சபை மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்க ளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் தீர்மானித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசாரத்திற்கு பொறுப்பான அதிகாரிகளிடம் இது தொடர்பிலான தகவல்களை கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கோரியுள்ளார்.

கிடைத்துள்ள தகவல்களின் படி தேர்தல் பிரசார பணிகளுக்காக நியமிக்கப்பட்ட ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதுவரை தேர்தல் பிரசாரங்களில் கலந்து கொள்ளவில்லை என கூறுப்படுகிறது.

அண்மையில் மத்திய மாகாண தேர்தல் பிரசாரங்கள் தொடர்பிலான மீளாய்வு கூட்டம் கண்டியில் நடைபெற்ற போது தேர்தல் பிரசாரங் களில் கலந்து கொள்ளாதவர்களை ரணில் கடுமையாக சாடியதாக தெரியவருகின்றது.

தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடாத உறுப்பினர்களுக்கு எதிராக தேர்தலின் பின்னர் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். (அ)

# சமுர்த்தி உத்தியோகத்தர் நிர்வாகத் தெரிவு

யாழ்.மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான புதிய நிர்வாக சபை அங்கத்தவர் தெரிவு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நல்லூர் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இதில் புதிய நிர்வாகத் தலைவராக ச.செந்தூரன் (சாவகச்சேரி பிரதேச செயலகம்) ,உப தலைவர் சு.சுபநாதன் (நல்லூர் பிரதேச செயலகம்), செயலாளர் க.விமல்ராஜ் (நல்லூர்பிரதேசசெயலகம்), உப செயலாளர் ச.பாஸ்கரன் (உடுவில் பிரதேச செயலகம்) ,பொருளாளர் எஸ்.சிவகுமார் (சங்கானை பிரதேச செயலகம்) ஆகியோருடன் 15 பிரதேச செயலகங்களைச் சேர்ந்த பதினைந்து நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.எதிர்வரும் ஆண்டிற்கான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் நலன்கள் தொடர்பாக ஆராயப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன .

(அ-9-60-246)

# இளநீருக்குள் மயக்க மருந்து

# பருகியவர்கள் மயக்கம்; பணம்,நகை கொள்ளை

இந்தியாவிலிருந்து இலங்கை பயணித்த இரண்டு தமிழர்களை ஏமாற்றி இலட்சக் கணக்காண தங்கம், பணம் மற்றும் பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

குறித்த நபர்களை ஏற்றிச் சென்ற வாடகை வாகனத்தின் சாரதி வீதியின் இடைநடுவில் அவர்களுக்கு விஷம் கலந்த இளநீரை கொடுத்து மயக்கமடைய செய்த நிலையில் இலட்சக் கணக்கான தங்கம், பணம் மற்றும் பொருட்களை கொள்ளையிட்டு அவர்களை வெல்லவ மடகமுவ காட்டில் அநாதரவாக விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

மட்டக்களப்பை சேர்ந்தவர்கள் எனக் கூறப்படும் சகோதரர்கள் இருவர் கடந்த 18 ஆம் திகதி இரவு கட்டுநாயக்க விமானத்தில் இருந்து வாடகை கார் ஒன்றில் தாம் கொண்டு வந்த பொருட்களுடன் மட்டக்களப்பு நோக்கி புறப்பட்டுள்ளனர்.

இவர்கள் பயணித்துக் கொண்டிருந்த போது கிரியுல்ல பிரதேசத்தில் வாகனத்திற்கு எரிபொருள் நிரப்பப்பட்டுள்ளது டன் இடைநடுவில் இள நீர் கடையொன்றில் இளநீர் அருந்திய பின்னர் சகோதரர்கள் மயக்கமடைந்துள்ளனர்.

இவர்கள் கண்விழித்து பார்த்த போது தாம் காட்டில் இருப்பது தெரியவந்துள்ளது.

இவர்கள் மதுபோதையில் விழுந்து கிடப்பதாக பொலிஸார் பிடித்து விசாரித்த போதே உண்மை தெரியவந்துள்ளது. இவர்களிடம் இருந்த தங்க ஆபரணங்கள், வெளிநாட்டு பணம், மூன்று பயண பொதிகளுடன் சாரதி தலைமறைவாகியுள்ளார்.

மேலதிக பாதுகாப்புக்காக இவர்கள் வாடகை வாகனத்தில் ஏறும் முன்னர் வண்டியின் சாரதியை தமது கையடக்க தொலைபேசியில் படம் பிடித்துள்ளனர். சாரதி அந்தக் கையடக்க தொலைபேசியையும் எடுத்து கொண்டு தப்பிச் சென்றுள்ளார்.வெல்லவ பொலிஸார் இச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

## ஜோதிலிங்க இரதபவனி

வடமராட்சி – காசி விஸ்வநாதர் –காலை 9.00–பி.ப. 1.00
வாய்க்கால் தரவை பிள்ளையார் கோயில்–பி.ப. 2.00– இரவு
நீர்வேலி காளி கோயிலில் தரிசனம்
இளைஞர் நிகழ்வு
1. மாலை 3.00–4.30, 2.மாலை 6.00–7.30
வலிகாமம் – ஸ்ரீ சோமநாதர்
செல்லத்துரை பாடசாலை, 25 ஆம் கிளைச்சங்கம் வழியே
மு.ப. 10.00– பி.ப. 2.00
ஆலடிச் சிவன் கோயில்– பி.ப. –3.00– பி.ப. 6.00
உடுவில் முருகமூர்த்தி கோயிலில் தரிசனம்
மருதனார்மடம் பிள்ளையார் ஆலய வழியே
இரவு ஆஞ்சநேயர் கோயில்
கிளிநொச்சி/ தென்மராட்சி– இராமேஸ்வரன்–மு.ப.–7.00–11.00
கைதடி வயோதிபர் இல்லாம்– பி.ப. 1.30– மாலை –6.00
கைதடி கயிற்றசிட்டி கந்தசுவாமி கோயில் இளைஞர் நிகழ்வு
மாலை –3.00 –4.30
இரவு– வெள்ளெருவைப் பிள்ளையார் கோயில்

வடமாகாண சபைத் தேர்தல் 2013
கிளிநொச்சி மாவட்டம்

ஆசானாய் இருந்து
மாணவர்களுக்கு சிறந்த
கல்வியை புகட்டிய கிளிநொச்சி
மாவட்டத்தின் சிற்பி
வீ.ஆனந்தசங்கரி
தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு (இலங்கைத் தமிழரசுக் கட்சி)
X 2
(CE-4911)

வடமாகாண சபைத் தேர்தல்-2013
யாழ். மாவட்டம்
இரத்தினலிங்கம் ஜெயசேகரன்
(வர்த்தக சங்கத் தலைவரும் சமூக சேவையாளரும்)

தமிழ் மக்களின் உரிமைகளை
ஜனநாயக முறையில் பெற்றிட
தமிழ் மக்களின் பொருளாதாரத்தினை
மேம்படுத்திட, தமிழ் மக்களின்
கலை, கலாசார விழுமியங்களை
பாதுகாத்திட, தமிழ் மக்களின்
தனித்துவத்தினை பேணிட
ஓர் அணியில் திரள்வோம்!
இலங்கை தமிழரசுக் கட்சி
X 6
(EC-4913)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

வடக்கு மாகாணசபைத் தேர்தல்- 2013
தமிழர் தாயகத்தில்
சமஷ்டியுடன் கூடிய
பூரண சுயாட்சித் தமிழ்
அரசை நிறுவுவோம்.
யாழ்.மாவட்டம்

எம்.கே.சிவாஜிலிங்கம் 9
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி X
1 2 3 4 5 6 7 8 9 10
11 12 13 14 15 16 17 18 19
(E-011)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு சுற்றுலா அபிவிருத்திக்கு ஹோட்டல் பாடசாலை அமைக்க முடிவு

(யாழ்ப்பாணம்)

வடக்கில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு ஹோட்டல் பயிற்சிப் பாடசாலை ஒன்றினையும் அமைக்க வட மாகாண சுற்றுலாத்துறை ஒன்றியம் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.கிறீன் கிறாஸ் ஹோட்டலில் கடந்த 23-ம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போதே அவ் ஒன்றியத்தின் தலைவர் ரி.திலகராஜ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் சுற்றுலாத்துறை ஒன்றியத்தின் செயலாளர் கிசோர் அன்ரன், இலங்கை உல்லாச பிரயாண சபையின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் ஆர். கலைச்செல்வம் ஆகியோரும் கலந்துகொண்டு கருத்துரை வழங்கியிருந்தனர்.

இந்தச் சந்திப்பில் மேலும் தெரிவிக்கப்படடதாவது,

வடக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்ய பல தடைகள் உள்ளன. இருப்பினும் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவையுள்ளது.

வடக்கில் பல வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள் உள்ளன. குறிப்பாக யாழ்.நல்லூரிலுள்ள மந்திரிமனை, யமுனா ஏரி உட்பட பல இடங்கள் உள்ளன.

ஆனால் இவை தற்போது சுற்றுலாத்துறைக்கு ஏற்ற இடங்களாக காணப்படவில்லை.

வடக்கு மாகாணத்தின் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்யவும், அதில் முதலீடுகளைச் செய்யவும் வெளிநாட்டவர்கள் ஆர்வமாகவுள்ளனர்.

இதனைப் புரிந்து கொண்டு வடக்கில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்ய பொருளாதார ரீதியில் முன்னேற்றங்களை காண்பதற்கும் அனைவரதும் ஒத்துழைப்புகளும் தேவைப்படுகின்றன.

மேலும் வடக்கு மாகாணத்தில் ஹோட்டல் துறையினையும் அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவையுள்ளது.

குறிப்பாக ஹோட்டல்களில் பணிபுரிபவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட வேண்டிய தேவை அதிகளவில் உணரப்பட்டுள்ளது.

இதன் காரணமாக வடக்கில் யாழ்.மாவட்டத்தில் ஹோட்டல் பயிற்சிநெறிகளை வழங்குவதற்கென பயிற்சி நெறிகளை வழங்குவதற்கென ஹோட்டல் பயிற்சிப் பாடசாலை ஒன்றினை அமைப்பதற்கான நடவடிக்கையினை வட மாகாண சுற்றுலாத்துறை ஒன்றியம் மேற்கொண்டு வருகின்றது.

அத்தோடு இந்தப் பாடசாலையினை யாழ்.மாவட்டத்தில் அமைபபதற்கான வேண்டுகோள் மற்றும் திட்டத்தினையும் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவிடம் அண்மையில் கையளித்ததாகவும் தெரிவித்தனர்.

இதனைவிட வடக்கு மாகாண சபைத் தேர்தல் இடம்பெற்று அதனூடாக சுற்றுலாத்துறைக்கு அமைச்சு நியமிக்கப்படும்போது வடக்கின் சுற்றுலாத்துறையை விரைவாக அபிவிருத்தி செய்ய முடியும் எனவும்,

வடக்கு மாகாணம் தவிர்ந்த நாட்டின் ஏனைய எட்டு மாகாணங்களிலும் தற்போது சுற்றுலாத்துறை அமைச்சின் ஊடாக அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை ஹோட்டல்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு இலவசமாக பயிற்சிப் பட்டறைகளை நடத்தி வருவதாகவும் ஹோட்டல் மற்றும் உணவகங்களில் பணிபுரிபவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட வேண்டியுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இதுதவிர வட மாகாண சுற்றுலாத்துறை ஒன்றியத்தில் இதுவரை 35 ஹோட்டல் மற்றும் உணவகங்கள் பதியப்பட்டுள்ளதாகவும் இதில் 25 யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவை எனவும் தெரிவித்ததோடு அரசாங்கம் எல்லாத்துறையினையும் அபிவிருத்தி செய்ய முடியும் என எதிர்பார்க்க முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (6)

# அந்நிய செலாவணியை 7 பில்லியனாக்க திட்டம்

வருட இறுதிக்குள் அந்நிய செலாவணியை 7 பில்லியன் ரூபாவாக அதிகரிப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் நலபுரி அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

அந்நிய செலாவணி மூலம் கிடைக்கும் வருமானம் நாட்டின் அபிவிருத்திக்கு செலவிடப்படுவதுடன், கூடுதலான தொகை பெற்றோல் இறக்குமதி செய்வதற்கே செலவிடப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்-

2012ஆம் ஆண்டு நாட்டுக்கு அந்நிய செலாவணியாக ஆறு பில்லியன் ரூபா கிடைத்துள்ளது.

இத்தொகையை இவ்வருட இறுதிக்குள் 7 பில்லியனாக அதிகரிப்பதே அரசின் நோக்கமாகும். இதற்கான நடவடிக்கைகளை அரசு முன்னெடுத்து வருகின்ற அதேவேளை, அந்நிய செலாவணியை நாட்டின் அபிவிருத்திக்கே கூடுதலாக செலவிட்டு வருகிறது என அவர் தெரிவித்தார்.

# கொமர்ஷல் வங்கியின் வரிக்கு முந்திய இலாபம் 6.5 பில்லியன்



Dinesh Weerakkody, Chairman — Ravi Dias, Managing Director / Chief Executive Officer

கொமர்ஷல் வங்கி இவ்வாண்டின் இரண்டாவது காலாண்டில் மொத்த வருமானமாக 34.720 பில்லியன் ரூபாவை ஈட்டியுள்ளது.

இதில் வட்டி வருமானம் 30.168 பில்லியன் ரூபாவாகும். இவை இரண்டும் முறையே 12.10% மற்றும் 22.58% வளர்ச்சியை பதிவு செய்துள்ளன.

2013 யூன் 30-ல் முடிவடைந்த அரையாண்டில் மிக உறுதியான வளர்ச்சி செயற்பாடுகள் மூலம் இந்த சாதனை எட்டப்பட்டுள்ளது.

இந்தக் காலப் பகுதியில் வங்கியின் வரிக்கு முந்திய இலாபம் 6.508 பில்லியன் ரூபாவாகும். வரிக்குப் பிந்திய இலாபம் 4.472 பில்லியன்களாகும். கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியில் இந்த இலாபங்கள் முறையே 7.507 பில்லியன் மற்றும் 5.173 பில்லியன் ரூபாய்களாகப் பதிவாகியிருந்தது.

இந்தக் காலப் பகுதியில் வெளிநாட்டு நாணயமாற்று வருமானம் இலாபங்களுக்குப் பங்களிப்புச் செய்த பிரதான காரணியாக இருந்தது. இதற்கு மாறாக 2013 இன் முதல் காலாண்டு காலப்பகுதியில் வெளிநாட்டு நாணயமாற்று வருமானம் மிகவும் பாதிப்படைந்து காணப்பட்டது.

இக்காலப் பகுதியில் வங்கியின் கடல் கடந்த பேரம்பேசி மாற்றிக் கொள்ளல் நடவடிக்கைகளின் போது இடம்பெற்ற சந்தை இழப்புக்களே இதற்கு காரணமாகும்.

குறிப்பிட்ட காலப்பகுதியில் வங்கியின் தேறிய வட்டி வருமானம் 6.24% த்தால் அதிகரித்து 11.932 பில்லியன் ரூபாய்களாக உள்ளது. எவ்வாறாயினும் வட்டிச் செலவு 36.30% த்தால் அதிகரித்து 18.236 பில்லியன்களாக உள்ளது என வங்கி அறிவித்துள்ளது.

வங்கியின் மொத்த சொத்துக்கள் 2012 டிசம்பர் 31-ல் 9.06 வீதத்தால் அதிகரித்து 511.7 பில்லியன் ரூபாய்களாகக் காணப்பட்டதோடு 2013 யூன் 30-ல் அது 558.1 பில்லியன்களாகக் காணப்படுகின்றது.

இந்த பெறுபேறுகள் பற்றி கருத்து வெளியிட்ட கொமர்ஷல் வங்கி தலைவர் திணேஷ் வீரக்கொடி,

செயற்பாட்டு ரீதியாக நாம் பெரும் மகிழ்ச்சி அடையவேண்டி உள்ளது. சீரான மூலதன நிலையை விருத்தி செய்யும் அதே வேளை வைப்புக்களை திரட்டல் மற்றும் கடன் வளர்ச்சி என்பனவற்றையும் நாம் பேணி வந்துள்ளோம்.

வங்கித்துறையின் எல்லைகள் பொதுவாக சுருங்கி வருகினற நிலையில் ஏனைய விகிதங்களையும் எம்மால் பேண முடிந்துள்ளது என்றார்.

ஒரு குழுமமாக எடுத்துக் கொள்ளுகின்ற போது கொமர்ஷல் வங்கி அதன் கிளை மற்றும் இணை நிறுவனங்கள் மீளாய்வுக்கு உட்பட்ட இந்த 6 மாத காலத்தில் வரிக்கு முந்திய இலாபமாக 6.548 பில்லியன் ரூபாய்களை ஈட்டியுள்ளன.

இதே காலப் பகுதியில் வரிக்குப பிந்திய இலாபமாக அவை 4.490 பில்லியன்களை ஈட்டியுள்ளன.

கொமர்ஷல் வங்கியே இலங்கையின் மிகப் பெரிய தனியார் வங்கியாகும். உலகில் உள்ள தலை சிறந்த ஆயிரம் வங்கிகளுள் தொடர்ந்து கடந்த 3 வருடங்களாக இடம் பிடித்துள்ள இலங்கையின் ஒரேயொரு வங்கியும் இதுவேயாகும்.

232 சேவை நிலைய வலையமைப்புக்களுடனும் 570 ATM நிலைய வலையமைப்புடனும் இந்த வங்கி செயற்படுகின்றது. பங்களாதேஷிலும் வங்கி 18 கிளைகளைக் கொண்டுள்ளது.




# வரிக்கு முன் இலாபமாக 43 வீதம் சிடிபியால் பதிவு

சிட்டிசன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் பிஎல்சி (CDB) நிறுவனமானது 2013/14 நிதியாண்டின் முதல் காலாண்டின நிதி முடிவுகளின் பிரகாரம் வரிகது முன்னரான இலாபமாக 169 மில்லியன் ரூபாவை பதிவு செய்துள்ளது.

இது கொழும்பு பங்குச்சந்தையின் இடைக்கால முடிவுகளின் படி தொடர்புபட்ட முன்னைய காலாண்டுடன் ஒப்பிடுகையில் 43% அதிகரிப்பை பிரதிபலிக்கிறது.

வரிக்கு பின்னரான இலாபமான 135 மில்லியன் ரூபாவில் 30% வளர்ச்சியை பதிவு செய்துள்ளது. விரிவான மொத்த வருமானம 220 மில்லியன் ரூபாய் ஆகும்.

காலாண்டில் பதிவு செய்யப்பட்ட வருமானம் 1,383 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. முன்னைய காலாண்டுடன் ஒப்பிடுகையில் 54% வளர்ச்சியை எட்டியிருந்தது. ஒரே அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட 541 மில்லியன் ரூபாவுடன், தேறிய மொத்த வருமானம் 52% வளர்ச்சியை அடைந்திருந்தது.

காலாண்டில், கடந்த 2013 மார்ச் 31 திகதி முடிவடைந்த நிதியாண்டில் சொத்து தளமானது பதிவு செய்யப்பட்ட ரூ.26 பில்லியனை விட 8.5% வீதம் வளர்ச்சி கண்டது.

## சி.இ.ஓ பதவிக்கு 20 விண்ணப்பம்

கொழும்பு பங்குப்பரிவர்த்தனையில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதல் வெற்றிடமாகவுள்ள பிரதம நிறைவேற்று அதிகாரி பதவிக்காக விண்ணப்பிப்பதற்கான இறுதி திகதி கடந்த 15-ம் திகதியுடன் நிறைவடைந்ததை தொடர்ந்து, தமக்கு மொத்தமாக 20 விண்ணப்பங்கள் இந்த பதவிக்காக கிடைத்துள்ளதாக கொழும்பு பங்குப்பரிவர்த்தனையின் மனித வளங்கள் பிரிவு அறிவித்துள்ளது. இந்த பதவியில் தற்போது உள்ள சுரேகா செல்லஹேவா, தனது பதவியை இராஜினாமா செய்வதாக அறிவித்ததை தொடர்ந்து, எதிர்வரும ஒக்டோபர் மாதம் முதல இந்த பதவியில் புதிய ஒருவர் நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## வவுனியாவில் முதலீட்டாளர் தினம்

இலங்கை பங்குச்சந்தை பொது மக்களுக்கு பல்வேறுபட்ட முதலீட்டு வாய்ப்புக்களை வழங்குகின்றது.

இந்த வகையில் முதலீட்டாளர் தினம் 2013 நிகழ்வு வவுனியாவில் இடம்பெற ஏற்பாடாகியுள்ளது.

நீங்கள் ஒரு துறைசார் முதலீடுகளில் தங்கியிருக்காது பல்வேறுபட்ட முதலீடுகளை அறிந்து கொள்ளவும், தெரிவுசெய்யவும் முதலீட்டாளர் தினம் உங்களுக்கு களம் அமைக்கின்றது.

குறிப்பாக இத்தினத்தில் முதலீட்டு ஆர்வலர்கள் இலவசமாக பங்குச்சந்தை முதலீடுகள் தொடர்பாக தெளிவான ஆலோசனைகளைப் பெற, முதலீட்டுக் கணக்கினை ஆரம்பிக்க, பல்வேறு முதலீட்டு ஆலோசகர்களின் தொடர்பினைப் பெற்று எதிர்காலத்தில் முதலீடுகளை ஆரம்பிக்க தகுந்த நிகழ்வாக இந்த முதலீட்டாளர் தினம் அமையும்.

இந்நிகழ்வில் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை, இலங்கையில் உள்ள முன்னணிப் பங்குத்தரகர்கள் மற்றும் நம்பிக்கை அலகு நிதி முகாமைத்துவக் கம்பனிகளின் முதலீட்டு ஆலோசகர்கள் கலந்து கருத்துரை வழங்குவார்கள்.

இந்நிகழ்வானது எதிர்வரும் 31-ம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு, வவுனியா ரோயல் கார்டின் ஹோட்டல் வரவேற்பு மண்டபத்தில் நடைபெறுகின்றது. அனுமதி இலவசம்.

மேலதிக தகவல்களை கொழும்பு பங்குப்பரிவர்த்தனை யின் இணையத்தில் (www.cse.lk) அல்லது 0777 822 014 / 021222 1456 தொலைபேசி இலக்கத்தினூடாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 130.45 | 133.65 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 202.76 | 208.70 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 173.26 | 179.06 |
| சுவிஸ் பிராங் | 140.08 | 145.51 |
| கனேடிய டொலர் | 123.07 | 127.55 |
| அவுஸ்திரேலிய டொலர் | 116.83 | 121.39 |
| சிங்கப்பூர் டொலர் | 101.32 | 104.86 |
| ஜப்பான் யென் | 1.31 | 1.35 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.04 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.89 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் காங்கிரஸுக்கு ஜனாதிபதி நன்றிக்கடனுள்ளவராக இருப்பார்

## அமைச்சர் ஹக்கீம் நம்பிக்கை



(கொழும்பு)

**ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு நன்றிக் கடன் உள்ளவராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இருப்பார் என நம்புவதாக அக் கட்சியின் தேசிய தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.**

18 வது திருத்தச் சட்டத்திற்கு தேவையான மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்கி பலமுள்ள அரசாங்கமொன்றை அமைக்க உதவியதற்காகவே ஜனாதிபதி எமக்கு நன்றிக்கடன் உள்ளவராக இருக்கிறார் என அவர் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

மாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடும் நோக்கங்களில் ஒன்று தன்னைப் பாது காத்துக் கொள்வது என்பதில் ஐயமில்லை. மத்திய மாகாணத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தனித்து போட்டியிடுகின்றது.

இவர்களை எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி விமர்சிப்பதில்லை. எதிர்காலத்தில் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சி அமைக்க வேண்டுமானால் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் உதவி தேவைப்படும் என்பதால் இலங்கை தொழிலாளர் காங்கிரசை விமர்சிப்பதில்லை.

இதே நிலை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் உண்டு. இத்தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரசை விமர்சனத்திற்குட்படுத்தாத ஆளும் தரப்பும் மற்றும் எதிர்க் கட்சிகள் எம்மை விமர்சிப்பது பொருத்தமானதா? என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

2001 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியமைக்க முஸ்லிம் காங்கிரஸ் உதவியது. 2004 இல் ஆட்சியை பறிகொடுத்த ஐக்கிய தேசியக் கட்சிக்கு 2014 இல் 10 வருடங்களை அடைந்தாலும் மீண்டும் ஆட்சிக்கு வர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் ஆட்சிக்கு வர வேண்டுமானால் பெரும்பான்மை மக்களின் வாக்குகளை ஐக்கிய தேசியக் கட்சி உள்வாங்கிக் கொள்ள வேண்டும் என்பது யதார்த்தமாகும். ஆனால் பெரும்பான்மை வாக்குகளை கவர்ந்து அரசாங்கத்தை அமைப்பதற்கான நகர்வுகளை எடுக்க வேண்டிய ஐக்கிய தேசியக் கட்சி அதனை செய்யாது எம்மை


மனத் தளர்வா? தனிமையா?

**வாழ்கையில் வெறுப்பா?**

உங்களுக்காக நாங்கள் இருக்கிறோம். உடனே அழையுங்கள். ரகசியங்களை முழுமையாகப் பாதுகாப்போம்.

**கை கொடுக்கும் நண்பர்கள்**

**021 222 8117**



## இந்தியத் திருத்தல யாத்திரை

நாட்கள்: 18+02 யாத்திரிகர்கள்: 10 ஆரம்பம் 10.09.2013

நிறைவு: 30.09.2013

மலைக்கோட்டை விநாயகர், பிள்ளையார்பட்டி, தஞ்சாவூர், திருப்பதி, ஆறுபடை வீடுகள், மாங்காடு, வேற்காடு புவனேஸ்வரி, காஞ்சி காமாட்சி, காஞ்சி வரதர், பஞ்சபூதத் திருத்தலங்கள், 9 நவக்கிரக ஆலயங்கள், வேளாங்கண்ணி, அஷ்டலெட்சுமி, அலமேலுமங்கா, சீரடிபாபா சென்னை, திருநாரையூர், சரஸ்வதி கோவில், வலஞ்சுழி விநாயகர், திருக்கடையூர் அபிராமி, சக்தி அம்மன் கோவில், மீனாட்சி சுந்தரேஸ்வரர், இராமேஸ்வரம் சோட்டாணிக்கரை, கொடுங்கலூர், குருவாயூர், பொற்கோவில், தோணியப்பர், சிதம்பரம், சீர்காழி, மருத்தீஸ்வரர், பட்டீஸ்வ ரம் துர்க்கா, சுசீந்திரம் ஆஞ்சநேயர், கன்னியாகுமரி, கபாலீஸ்வரம், கானகஸ்திரி, பார்த்தசாரதி, குபோலிங்கேஸ்வரர், உத்திரகோச மங்கை, திருப்புவானி, நவபாஷாணம், சுசீந்திரம் திருக்கோவில், வனத்திருப்பதி, உவரிசிவன், தாராசுரம்சிவன், ஊட்டி, பாண்டிச்சேரி, மெரீனா பீச்சும் காணலாம், ரிஷி வந்தியம் பாகம் பிரியாள் அம்மன் தரிசிக்கலாம்.

வரதப்பாளையம் ஸ்ரீ அம்மா பகவான் (கல்கி பகவான்) ஞாயிற்றுக்கிழமை 10.00 மணிக்கு தரிசனம் காணலாம்.

தங்களிடம் பெற்றுக் கொள்ளும் ரூபாவிற்கு எமது சேவை...

இருவழி விமான ரிக்கெட், ஏயார் போட் செல்லவும் திரும்ப வரவும் வாகன வசதி, காலையும் இரவும் கோப்பி, ரிபன், தரமான சைவ மதிய உணவு, ஹோட்டல்களில் சாதம், நாளொன்றுக்கு ஒவ்வொருவருக்கும் ஒரு லீற்றர் மினரல் வோட்டர் (குடிநீர்), தங்குமிடங்கள், 2 பேருக்கு 2 கட்டில் மெத்தையுடன் குளியல் அறையுடன் கூடிய அறைகள் எடுத்துத் தங்க வைக்கப்படுவார்கள்.

யாத்திரை தொடங்கி முடியும் வரை AC, Audio, Vedeo, உள்ள சொகுசு வாகன வசதி,

**கட்டண விபரம் கேட்டு அறிக!**

விருப்பமுடையோர் கீழுள்ள தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு முற்பதிவு செய்யுங்கள்.

தொடர்புகளுக்கு: கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன்,

**இன்னும் 3 ஆசனங்கள் மட்டுமே உள்ளன**

No: 66/2-3/2 JOSEPH DIAS LANE
COLOMBO-15
T.P:0777680102, 0724222989
Web:www.Sridevipilgrims.com

இந்த யாத்திரைகள் அனைத்தும் 05.01.2000 ஆம் ஆண்டு காலமான என் மனைவியின் வேண்டுகோளுக்கமைய சேவைநலன் கொண்டு குறைந்த செலவில் நடத்தப்படுகிறது.



## கல்யாண மாலை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1978 இந்து(V)
நட்சத்திரம்: மூலம் 1
கி.பா :65.50 செவ் 7
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: O/L
Post Office In charge
Norway Citizen
தொ.இ:B2290

பிறப்பு: 1982 இந்து(V)
நட்சத்திரம்: அவிட்டம் 2
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: O/L
வியாபாரம்
தொ.இ:B2293

பிறப்பு: 1983 இந்து(V)
நட்சத்திரம்: பூரம் 2
உயரம்: 5'10" செவ் 12
தகைமை/தொழில்: A/L
பிரான்ஸ் PR
தொ.இ:B2295

பிறப்பு: 1987 இந்து(V)
நட்சத்திரம்: பூரட்டாதி 4
கி.பா :20
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: A/L
Front Officer Customer Care
தனியார்
தொ.இ:B2299

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1984 இந்து(DO)
நட்சத்திரம்: புனர்பூசம் 4
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: MA
ஆசிரியை
தொ.இ:G2288

பிறப்பு: 1981 இந்து(V)
நட்சத்திரம்: சதயம் 3 செவ் 8
தகைமை/தொழில்: A/L
எழுதுநர் தனியார்
தொ.இ:G2289

பிறப்பு: 1984 இந்து(V)
நட்சத்திரம்: திருவாதிரை 1
கி.பா :28
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: MBBS
வைத்தியர்
தொ.இ:G2291

பிறப்பு: 1980 இந்து (குருகுலம்)
நட்சத்திரம்: கேட்டை
கி.பா : 2
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L
தொ.இ:G2292

சகல தொடர்புகளுக்கும்:-

**கல்யாண மாலை**

(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி






**புதிய சுவை! புதிய அனுபவம்! புதிய தொழில்நுட்பம்!**

அதிநவீன Pasteurized And Homogenized முறைப்படி தயாரிக்கப்பட்ட 100% சுகாதாரமான ஊட்டச்சத்துக்கள் நிறைந்த ஐஸ்கிறீம் வகைகள் எமது அறிமுக விலையில் நல்லூர் விற்பனை நிலையத்தில் சுவைத்து மகிழலாம். பெறுமதி மிக்க பரிசில்கள் உங்களுக்காக காத்திருக்கின்றன.

**ஷைலோ ஐஸ்கிறீம்**

No.231 , Temple Road, Nallur, Jaffna.
T.P. 021 4926003

(3587)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## கத்தியும் புத்தியும்

ஒரு வீட்டிலே திருடுவதற்குத் திருடனொருவன் திட்டமிட்டான். இருட்டியபின், வீட்டிலுள்ளவர்கள் தூங்கியபின்தான் திருட வேண்டும். ஆனால் இரவில் படுக்கப்போகும் போது கதவைச் சாத்தி உட்பக்கம் தாழ்ப்பாள் போட்டு விடுவார்களே... என்ன செய்வது என அந்த திருடன் யோசித்தான். பகல் நேரத்தில் யாருக்கும் தெரியாமல் அந்த வீட்டினுள் நுழைந்து ஒழிந்து கொள்வோம்... இராத்திரி எல்லோரும் தூங்கியபின் வீட்டிலிருக்கும் பெறுமதியான பொருட்களை எடுத்துக் கொண்டு ஓடிவிடுவோம் எனத் திட்டமிட்டான்.

அதற்கமைய ஒருநாள் பகல் நேரத்தில் அந்த வீட்டுக்காரர் வெளியே புறப்பட்டுச் சென்றபின் வீட்டுக்கார அம்மா சமையல் வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த நேரம் மெதுவாக உள்ளே நுழைந்து விட்டான். ஒழிந்து கொள்வதற்குப் பொருத்தமான இடத்தைத் தேடினான். வலது பக்கத்தில் ஒரு அறை இருந்தது. மெதுவாக அதைத் திறந்து பார்த்தான் – அது படுக்கை அறை. உள்ளே ஒரு பெரிய கட்டில் இருந்தது. திருடன் அந்தக் கட்டிலுக்கு அடியில் பதுங்கிக் கொண்டான். இரவில் எல்லோரும் தூங்கியதும் வேலையை ஆரம்பிக்கலாமென இரவு வரும்வரை காத்திருந்தான்.

இரவு நேரத்தில் வெளியே சென்றிருந்த வீட்டுக்காரன் திரும்பி வந்தான். சாப்பாட்டை முடித்துக் கொண்டு லைற்றை நிறுத்தி விட்டுப் படுத்துக் கொண்டான். வீட்டுக்கார அம்மாவும் தனது வேலைகளையெல்லாம் முடித்துக் கொண்டு வந்து படுத்துக் கொண்டார். நடு இராத்திரி. விடிவிளக்கு லேசாக எரிந்து கொண்டிருந்தது. வீட்டுக்காரன் கண்விழித்தான். கட்டிலுக்கு நேர் எதிரில் ஒரு கண்ணாடி. அதிலே கட்டிலுக்குக் கீழே ஒழிந்து கொண்டிருந்த திருடனின் உருவம் தெரிந்தது. உடனே "திருடன்... திருடன்" என்று சத்தம் போடலாமா? மேசையில் இருக்கிற கத்தியை கையில் எடுத்துக் கொள்ளலாமா? என்று யோசித்தான். இந்த நேரத்திலே கத்தியை உபயோகப்படுத்துவதை விடப் புத்தி யை உபயோகிப்பதுதான் புத்திசாலித்தனம் என்று நினைத் தான். அதன்படியே செயற்பட ஆரம்பித்தான். தூங்கிக் கொண்டிருந்த மனைவியை மெதுவாக தட்டி எழுப்பினான்.

மனைவியுடன் ரொம்ப சாதாரணமாகப் பேச ஆரம்பித்தான். மனைவியும் புத்தசாலி. அதனாலே கணவன் ஏதோ காரணத் துடன் தான் பேசுகிறான் என்பதை உணர்ந்து அதற்கேற்றபடி பதில் சொல்ல ஆரம்பித்தாள். கணவன் கேட்டான் இதோபார்... எங்களுக்குக் குழந்தை பிறந்தால் அதற்கு கிருஷ்ணமூர்த்தி என்று தான் பெயர் வைக்க வேண்டும்.

"அதெல்லாம் முடியாது... ஆண் குழந்தையாக இருந்தால் ஏகாம்பரம்... பெண் குழந்தையாக இருந்தால் பங்கயவல்லி. இதுதான் உங்கள் மாமனார், மாமியார் பெயர். இதைத்தான் வைக்க வேண்டும்" என்றாள் மனைவி. அதெல்லாம் முடியாது. நான் தீர்மானித்து விட்டேன்... கிருஷ்ண மூர்த்தி தான் எனக்கத்தினான் கணவன். "இல்லை... ஏகாம்பரம், பங்கயவல்லி என்று கத்தினாள் மனைவி. வாதம் பலத்து விட்டது. "கிருஷ்ண மூர்த்தி... கிருஷ்ண மூர்த்தி... என்று இவன் கத்த ஏகம்பரம்–பங்கயவல்லி... ஏகாம்பரம்–பங்கயவல்லி என்று அவள் கத்த ஒரே சத்தம். இந்த சத்தத்தைக் கேட்டதும் பக்கத்து வீடு, எதிர் வீடுகளில் இருந்தவர் கள் எல்லோரும் எழுந்திருந்து ஓடிவந்து இவன் வீட்டு கதவைத் தட தட என்று தட்டினார்கள். இவன் சாவகாசமாக எழுந்து போய் கதவைத் திறந்தான்... என்ன நடந்தது? இந்த அர்த்த இராத்திரி யிலே ஏன் எங்களை எல்லாம் கூப்பிட்டீர்கள்? என்று கேட்டார்கள். பக்கத்து வீட்டு கிருஸ்ண மூர்த்தி, எதிர் வீட்டு ஏகாம்பரம், பங்கயவல்லி எல்லோரும் உங்களைக் கூப்பிடவில்லை. எங்களுக்குப் பிறக்கப்போகும் குழந்தைக்கு என்ன பெயர் வைப்பது என்பது பற்றி எனக்கும் மனைவிக்கும் வாக்கு வாதம் ஏற்பட்டு விட்டது. இதுதான் விடயம். உங்களுக்குச் சந்தேகம் என்றால் கட்டிலுக்கு கீழே இருப்பவரிடம் கேட்டுப் பாருங்கள்" என்றார். உடனே எல்லோரும் விடயத்தை புரிந்து கொண்டு கட்டிலுக்கு அடியில் ஒழிந்திருந்த திருடனைப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தார்கள்.

நெருக்கடியான நேரங்களில் பதறாமல் புத்திசாலித்தனமாக செயற்படவேண்டும் என்பதைத் தெரிந்து கொள்வதற்காகத்தான் இந்தக் கதை.

புத்திசாலித்தனமாகச் செயற்படும் ஒரு குடும்பத் தலைவி இருந்தார். அவர் என்ன செய்வார் தெரியுமா? இராத்திரியானால் எல்லோரும் வீட்டை உட்புறமாகப் பூட்டிக்கொண்டுதானே தூங்குவார்கள். ஆனால் அந்த அம்மா பக்கத்து வீட்டுக்காரரிடம் சொல்லி கதவை வெளிப்புறமாக பூட்டுப்போட்டு பூட்டும்படி செய்துவிடுவார். "ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? வெளியே பூட்டினால் திருடன் சுலப மாகப் பூட்டை உடைத்துக் கொண்டு உள்ளே வந்து விடுவனே?" என்று கேட் டேன் "அதற்காக இல்லை. உள்ளே இருப்பவர் சுலபமாக வெளியே போய்விடக் கூடாது அல்லவா? அதற்காகத்தான் இந்த ஏற்பாடு" என்றார் அந்த அம்மா! என்ன சொல்கிறீர்கள் என்றேன். "ஆமாங்க.. இவருக்கு அந்தப் பழக்கம் உண்டு" என்று தன் வீட்டுக்காரரை காட்டினார் அவர்.

பக்கத்து வீடுகள் பத்திரமாக இருக்க வேண்டும் என்பதற்காக தன் வீட்டைப்பூட்டி வைப்பது ஒரு பெரிய விடயம் இல்லையா?

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# சர்வதேசத்தை ஏமாற்றும் நோக்கில் புதிய அமைச்சு உருவாக்கப்பட்டுள்ளது

## ஆசிய மனித உரிமை ஆணைக்குழு குற்றச்சாட்டு

சட்டம் மற்றும் ஒழுங்கை பாதுகாக்க ஜனாதிபதியினால் ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய அமைச்சுக்கு இராணுவ அதிகாரி ஒருவர் நியமிக்கப்படாதிருந்தால் சிறந்ததாக இருந்திருக்கும் என்று நீதியமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

பொலிஸ் உட்பட சிவில் நிறுவனங்களை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ள ஜனாதிபதி அதற்கான தனியான அமைச்சை ஏற்படுத்தியதுடன் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சியை செயலாளராக நியமித்தார்.

இது தொடர்பில் சர்வதேச ஊடகம் ஒன்றிடம் மேலும் தெரிவித்த ஹக்கீம், புதிய அமைச்சுக்கு சிவில் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும்.

பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்சவின் செயற்பாடுகள் சம்பந்தமான அதிருப்தி புதிய அமைச்சை ஏற்படுத்துவதற்கான நோக்கமாக இருக்கவில்லை.

சர்வதேசத்தில் தொடர்ந்தும் கொடுக்கப்பட்டு வந்த அழுத்தங்களே பொலிஸ் துறைக்கான தனியான அமைச்சை ஏற்படுத்தியமைக்கான காரணமாக இருக்கலாம் என்றார்.

திருப்திப்படுத்துவதற்காக அரசாங்கம் இந்த புதிய அமைச்சை ஏற்படுத்தி உள்ளதா என்று அமைச்சர் ஹக்கீமிடம் கேட்ட போது,

இது தொடர்பில் அப்படியான கோணத்தில் நோக்குவதைவிட காலம் கடந்தேனும் இப்படியான நடவடிக்கை எடுக்கப்பட்டதை பாராட்ட வேண்டும் என்றார்.

எனினும் இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள ஆசிய மனித உரிமை ஆணைக்குழு சர்வதேச சமூகத்தை ஏமாற்றவும் இலங்கை சமூகத்தை இராணுவமயப்படுத்துவதற்கு மான மற்றுமொரு நடவடிக்கையாகவே புதிய அமைச்சு ஏற்படுத்தப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளது. (அ)

# நிதி நிறுவனங்கள் பலவீனமாகி வருகின்றன

## ஐ.தே.க தெரிவிப்பு

இலங்கையின் நிதி நிறுவனங்கள் பலவீனமாகி வருகின்றன என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரான் விக்ரமரத்ன தெரிவித்தார்.

இந்நிலையில் பத்திரிகைகளில் வெறுமனே எச்சரிக்கை விடுப்பதோடு நின்று விடாமல் மத்திய வங்கி செயலில் இறங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

பயமுறுத்திக் கொண்டிருக்கும் நிதிக்கம்பனி நெருக்கடி பற்றி விபரிக்க மறுத்த அவர் நிதி நிறுவனங்களின் வைப்பாளர்களைப் பாதுகாப்பு அரசாங்கத்தின் பொறுப்பென கூறினார்.

தொழில்வாண்மையாளர் சங்கத்தின் ஆரம்ப கூட்டத்தில் எதிர்க் கட்சியை சந்தியுங்கள் எனும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (அ)

# தோட்டுடன் காதும் அறுப்பு

(கரணவாய்)

மந்துவில் கிழக்கு பிரதேசத்தில் வீடொன்றிற்குள் புகுந்த திருடர்கள் அங்கிருந்த வயோதிபப் பெண்மணியின்காதை அறுத்து தோட்டினை எடுத்துச் சென்றுள்ளனர். இச்சம்பவம் கடந்த வாரம் பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி பிரதேசத்திலுள்ள வீடொன்றில் வயோதிப தம்பதியர் இருவரும் வீட்டிலிருந்த போது புகுந்த திருடர்கள் தயாநிதி கமலேஸ்வரி (வயது 65) என்ற பெண்ணின் காதை அறுத்துக் கொண்டு 1/2 பவுண் பெறுமதியான தோட்டை அபகரித்துச் சென்றுள்ளனர். இது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது. (அ-9-60)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 | 50 |
| உருளைக்கிழங்கு | 90 | 90-160 | 120 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 100 |
| தக்காளி | 60 | 60-80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 |
| கோவா | 60 | 80 | 100 |
| கரட் | 100 | 100 | 120 |
| பூசணி | 30 | 40 | 40 |
| புடோல் | 30 | 30 | 40 |
| வாழைக்காய் | 70 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 170 | 120-140 | 160-200 |
| பெரிய வெங்காயம் | 160 | 130 | 180 |
| பாகற்காய் | 60 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | 80 |
| பயற்றங்காய் | 40 | 60 | 60 |
| லீக்ஸ் | 80 | 110 | 120 |
| பீற்றூட் | 20 | 30 | 40 |
| கறிமிளகாய் | 60 | 60 | 80 |
| முருங்கைக்காய் | 40 | 80 | 120 |
| போஞ்சி | 90 | 120 | 200 |
| கீரை – 1 பிடி | 10 | 25 | 20 |
| தேசிக்காய் | 350 | 190 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 40-50 | 35-40 |
| இராசவள்ளி | 100 | 90 | 120 |

# இராசி பலன்

26.08.2013
(ஆவணி 10, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
சஷ்டி பின்னிரவு 4.16 மணிவரை
அச்சுவினி பிற்பகல் 1.03 மணிவரை
இராகுகாலம் 7.35-9.05 மணிவரை
சுபநேரம் 12.05-1.35 மணிவரை

**மேடம்** கனவு பலிதமுண்டு, பணியில் சில மனஉளைச்சல்கள் ஏற்படலாம், ஆதாயத்தை எதிர்பாராமல் செய்த வேலை ஒன்றில் கணிசமான இலாபம் கிடைக்கலாம், உடல் நலனில் கவனம் தேவை.

**இடபம்** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், சேமிப்பில் சிறிது கரையலாம், குடும்பத்தினருடன் குதூகலப் பயணங்கள் செல்லும் வாய்ப்புண்டு, சயனசுகக் குறைவான நாள்.

**மிதுனம்** எதிர்கால வெற்றிக்கு அடித்தளமிடுவீர்கள், மற்றவர்கள் பாராட்டும் வகையிலான செயலொன்றைச் செய்து காட்டுவீர்கள், உறவினர் வருகையால் குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**கடகம்** எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வீட்டை அழகுபடுத்தும் முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி மூலம் சுபதகவல்கள் வந்து சேரலாம்.

**சிங்கம்** கடன்களை கொடுத்து தீர்க்கும் எண்ணம் உருவாகும், பேச்சில் இனிமை ஏற்படும், போட்டியாக இருந்தவர்கள் விலகுவர், ஆன்றோர் சந்திப்புண்டு, தேவையற்ற பயம் உருவாகும்.

**கன்னி** குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், திடீர் செலவுகள் ஏற்படலாம், போசன சுகமுண்டு, மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடலாம்.

**துலாம்** நண்பர்கள் சந்திப்புண்டு, குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், பயணங்களால் பலனுண்டு, கௌரவமான நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் ஏற்படும், போசன நன்மையுண்டு.

**விருச்சிகம்** திட்டமிட்ட காரியங்களை திட்டமிட்டபடியே செய்து முடிக்கும் நாள், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், மனக் குழப்பம் அகலும், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள்.

**தனுசு** கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, சில காரிய இடையூறுகள் ஏற்படலாம்.

**மகரம்** பெற்றோரின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், கல்வியில் சேர்க்கையுண்டு, மனச்சஞ்சலங்கள் உருவாகும், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், சுப செலவுகள் செய்து மகிழும் நாள்.

**கும்பம்** முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், குடும்ப பொறுப்புக்கள் கூடும், உடன்பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்டும் நாள், அந்நியர் சந்திப்புண்டு.

**மீனம்** தொழிலை விரிவுபடுத்தும் முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை கூடும், வருமானம் திருப்திகரமாக அமையும், வார்த்தைகளால் பிறரைக் கவர்வீர்கள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞான பட்டமாணி நிகழ்ச்சி திட்டத்திற்கான விண்ணப்பம் கோரல்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் விஞ்ஞானப் பட்டமாணி நிகழ்ச்சித்திட்டத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. க.பொ.த. உயர்தரத்தில் உயிரியல் மற்றும் கணிதவியல் பிரிவுகளில் 3 சித்திகளைக் கொண்டுள்ளவர்கள் இப்பட்டமாணிக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 14 ஆம் திகதிக்கு முன்னராக யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 இற்கு யாழ்.பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ள இலவசக் கருத்தரங்கில் கலந்து கொள்வதன் மூலமாக இப்பட்டமாணி நெறி பற்றிய மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என யாழ். பிராந்திய நிலைய இணைப்பாளர் அறிவித்துள்ளார். (அ-20)

# நாங்கள் புதுமையான மனிதர்கள் அல்ல

## ஆதிவாசிகள் தெரிவிப்பு

(கொழும்பு)

புதுமையான மனிதர்களைப் போல் தம்மைப் பார்க்கவே பலர் வருவதாக ஆதிவாசிகளின் தலைவர் ஊருவரிகே வன்னில'அத்தே குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தங்களுக்கு தொந்தரவாக மாறியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தங்களது பரம்பரை தொடர்பாக தெரிந்து கொள்ள எதனையாவது கற்கும் நோக்குடன் வருவார்களாயின் அது பரவாயில்லையெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆதிவாசிகளுக்கும் பல்வேறு பிரச்சினைகள் உள்ளதாகவும் இன்று சூழல் மாறிப்போயுள்ளதாகவும் காடுகள் குறைவடைந்துள்ளதாகவும் இதனால் தமது சுதந்திரம் குறைந்துள்ளதுடன் விவசாயம் மேற்கொண்டே வாழ்ந்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# பேருந்து விபத்தில் ஒருவர் பலி; பலர் காயம்!

(கொழும்பு)

தனியார் பேருந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்ததுடன் 40 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு கண்டி குருநாகல் வீதியில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

பேருந்து வேகக்கட்டுப்பாட்டை இழந்து தலைகீழாக கவிழ்ந்ததனால் இவ் விபத்து இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

23 வயதான இளைஞனே இவ் விபத்தில் உயிரிழந்துள்ளார். படுகாயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ் விபத்து தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-2)

# போர்க்குற்றங்கள் குறித்து விசாரிக்க ஆணைக்குழு

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

(கொழும்பு)

வடமாகாணசபையில் போர்க்குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்த ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படவுள்ளதாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

வட மாகாணசபையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியதன் பின்னர் இவ்வாறு, ஆணைக்குழுவொன்று நிறுப்படவுள்ளது.

போர்க்குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காகவே வட மாகாண சபையின் கீழ் இந்த ஆணைக்குழு நிறுவப்படும்.

இதன் அறிக்கை எதிர்வரும் மனித உரிமைப் பேரவை அமர்வுகளின் போது சமர்பிக்கப்படவுள்ளது.

இந் நிலையில் 13 ஆவது திருத்தச் சட்டத்தை இரத்து செய்யும் தமது கட்சியின் போராட்டம் தீவிரப்படுத்தப்படும் என சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். இந்தப் போராட்டத்திற்கு எதிராக எவராலும் தடை ஏற்படுத்த முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)


## 49ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மண்ணில் 10 11 1937

விண்ணில் 09 07 2013

அமரர் தில்லையம்பலம் இராசலிங்கம்

முடிவில்லா வேதனையைத் தந்துவிட்டு அமைதியானாய்
முன்னாக உன் நினைவுகள் எம்மனதில் குத்துதையா
விழிமூடித் தூங்குகின்ற போதெல்லாம் உங்கள்
நினைவலைகள் எம்மை நெருப்பாய் வாட்டுதே
கடமையே கண்ணியமென கடைசிவரை பணிசெய்து
கண்ணிமைக்கும் பொழுதினிலே காவியமாய் போனதேனோ?
விநாயகரின் பாதக் கமலத்தில் சாந்தி பெறுக
ஓம் சாந்தி! சாந்தி !!சாந்தி!!!

கடந்த 09/07/2013 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தோருக்கும் வெளிநாடு, உள்நாட்டிலிருந்து தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரம், மலர் வளையம் வைத்து துயர் பகிர்ந்தோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.
இன்று (26/08/2013) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

நீதிமன்ற ஒழுங்கை,
மல்லாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(இ)

## ஓராண்டு நினைவு அஞ்சலி

அமரர் செல்வி முருகர்- சோதிமலர்



தோற்றம் 1960 09 24

மறைவு 2012 09 06

பார்போற்றும்
எம் செல்வமே
சீர் பெற்ற
உம் வாழ்வு சிறகொடிந்து
போனதேனோ
ஓராண்டு கழிந்ததம்மா
ஆனாலும் பேரோறாய்
கண்ணீர் வடிக்கின்றோம்
ஓடோடி வருவாயம்மா

தகவல்:
குடும்பத்தினர்.

(3681)

## 31ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அமரர் பூச்சி மாரிமுத்து



தோற்றம் 25.09.1941

மறைவு 28.07.2013

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 27.08.2013 செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் காலை 6.00 மணியளவில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி/4453)

றெட்பானா, இளங்கோபுரம்
உ ஆம் திட்டம், முல்லைத்தீவு

தகவல்:
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்பாதம்



ஆன்மீகம் 97

என்ன இது மேலைநாட்டுக் கதை என்கிறார். புகழ் வாய்ந்த மேலைநாட்டு நாத்தீகரின் சொன்ன கதை என்கிறார். இவர் பள்ளிக்கூடமே போகாதவர். எப்படி இந்த ஆங்கிலத்தில் எழுதப்பட்ட கதையைக் கூறுகிறார். எனக்கும் ஒன்றும் புரியவில்லை. இவருக்குத் தெரியாதது எதுவுமே இருக்காது போலிருக்கே? என்ற விந்தை உணர்வுடன் அவரைப் பார்த்து சாமி உண்மையிலே நீங்கள் யார்? என்றுகேட்டேன். அதைக் கேட்டு என்னை உற்று நோக்கினார். என்னை போகர் என் பார்கள் என்று கூறிவிட்டு கண்களை மூடிக்கொண்டார். அவர் தலை ஆடத் துவங்கியது. அதோடு என் மனமும் ஆடிக்கொண்டிருந்தது. நான் கொங்கணர் என்றார் முன்பு- இன்று போகர் என்கிறார். நான் எந்த முடிவுக்கும் வராமல் மௌனமாக மற்றவர்கள் அமர்ந்திருந்த இடத்திற்குச்சென்று அமர்ந்தேன்.

எங்களுடன் வந்தவர்களில் பலர் அந்த காடுகளைச் சுற்றிப் பார்த்து ஆராய்ச்சியில் ஈடுபட்டனர். அதில் ஒருவர் விரைந்து வந்து ஆசானிடம், சாமி இங்கே உள்ள பாதையில் ஒரு உரல் குடையப்பட்டிருக்கிறது என்றார். சாமி சற்று தொலைவில் ஒரு பெரிய குகையிருக்கிறது. அந்த குகைக்குள் இன்னொரு குகை இருக்கிறது. உள்ளே செல்ல பயமாய் இருந்தது என்றார். இதைக் கேட்ட தலையாட்டிச் சித்தர் பெருமான் புன்னகை தவழ இந்தப் பகுதியில் முன்பொரு காலத்தில் நாங்கள் பதினெட்டு சித்தர்களும் ஒன்றாக வசித்தோம். அந்த குகைகள் நாங்கள் தங்கியவை. அந்த உரல் நாங்கள் உபயோகித்தது. இந்த காடுகள் 2010 க்கு முன் தீயால் அழிந்து இப்போதுதான் துளிர்க்கிறது. நாங்கள் இவ்விடம் விட்டகன்றோம். அப்போது அழிந்த காடுகள்தான் மீண்டும் உருவாகி இன்று இங்கே காணப்படுகின்றது என்றவர் எழுந்து மெல்ல நடந்தார். மற்றவர்கள் அமர்ந்து கொள்ள அடியேன் மட்டும் ஆசானைத் தொடர்ந்தேன். மௌனமாகச் சென்றுநடந்துகொண்டே ராஜா! இந்த இடத்துக்கு இந்த கலியுகத்தில் வேறு யாரும் உங்களை அழைத்து வரமுடியாது. ஏன் அழைத்து வந்தேன் என்றால் அதுவும் குறிப்பாக உன்னை அழைத்து வந்தது இந்த இடங்களை உனக்கு காட்டுவதற்காக வரப்போகும் அழிவிலிருந்து ஒரு கோடி மக்களைக் காப்



தாய்பாதம் போகும் பாதையில் மலைக்கு மேல் இளைப்பாறுதல்

பாற்ற தெய்வீகப் பொருட்களை எடுத்துவர் என்று ஆணையிடுவேன்.

அந்தப்பொருளை நீ எடுக்க வேண்டுமெனில் இடங்களை இப்போது பொதுவாக காட்டினால் தானே தெய்வீகக் காலத்தில் இடத்தை குறிப்பிட்டுச் சொன்னால் உனக்குப் புரியும். அதற்குப் பின்னர்தான் இந்த உலகமும் நீ யார் என்பதை அறியும். நீ அதிசயங்களை நிகழ்த்தும்போதுதான் உனக்கு உன்னையே யார் என்று விளங்கும் என்றவர் சற்றுநேரம் பேச்சை நிறுத்தினார். மிக விரைவில் தமிழகத்தில் வரப்போகும் ஒரு பெரிய பூகம்பத்திலிருந்து மக்களைக் காப்பாற்ற வேண்டிய அவசியம் வந்துவிட்டது. ஆதலால் நான் எப்போது வேண்டுமானாலும் இந்த உடலை விட்டு விலகுவேன் என்று முடித்தார். இதைக் கேட்டு நான் திகைத்துப் போய் கலங்கி நின்றேன்.

அன்றுமாலை மூன்று மணியிருக்கும் திடீர் என்று முடிவுக்கு வந்ததாற்போல் என்னை அழைத்து மதிய உணவில் உள்ள மீதியை இங்கு கொண்டு வாருங்கள் என்றார். கொண்டு போய் அவர் முன்னிலையில் உணவிருந்த பாத்திரத்தை வைத்தேன். அதிலிருந்து ஒவ்வொரு உருண்டையாக ஒவ்வொருவருக்கும் கொடுத்தார். எங்களை எல்லோரையும் ஒருமுறை பார்த்துவிட்டு இதுதான் நீங்கள் என்னிடம் கேட்ட தீட்சை சாப்பிடுங்கள் என்றார். எல்லோரும் மௌனமாய் சாப்பிட்டார்கள். நானும் சாப்பிட்டேன். அது மதியம் சாப்பிட்ட உணவுதான் ஆனால் இம்முறை மிகவும் ருசித்தது. அந்த ருசியில் என் உயிரும் ஊனும் உருகியது. ஆனால் திருப்தியடையாத சிலர் இந்த சோத்துருண்டையா தீட்சை என முணுமுணுத்தனர்.

மறுநாள் காலையில் எல்லோரும் தாய் பாதத்தை பூசை செய்து பயபக்தியுடன் வணங்கிக்கொண்டிருந்தபோது அங்கு வந்த சித்தர் நேற்று தீட்சை கேட்டீர்கள். அதை உண்ணக்கொடுத்தேன். இப்போது எல்லோரும் இந்த தாய் பாதத்தை மும்முறை வலம் வந்து ஓம் என் ஜெய்குருவே துணை என்று மும்முறை பக்தியுடன் கூறி வணங்குங்கள் இதுவே என் உபதேசம் என்றார். அடுத்த வினாடி எல்லோரும் தாய்பாதத்தை வலம் வரத்துவங்கி குருவணக்கம் சொல்லி தாய் பாதத்தில் வீழ்ந்து வணங்கினோம். ஆசான் சொல்படி நடந்து முடித்த எங்களிடம் இதுதான் மிக உயர்ந்த தீட்சை என்று கூறி புன்னகை செய்ய எல்லோரும் அவர் பாதத்தில் வீழ்ந்து வணங்கினோம்.

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

தொடரும்

# தமிழ் தனி ஈழ அரசு என்ற தீர்வுக்கு மாற்று...?

## இலங்கை ஒருமைப்பாட்டை வலியுறுத்துபவர்கள் யார்?

இந்து ஏட்டின் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டிருப்பதானது, சிங்கள- தமிழ் மக்கள் இருவருமே, தங்களுக்கு இந்திய அரசு உதவ வேண்டும் என்று அதன் ஆதரவை நாடி நிற்பதாகவும் அதனால் இரு தரப்பையும் நிறைவு செய்ய வேண்டிய சிக்கலில் இந்திய அரசு இருப்பதாகவும் கூறி சிங்களத்தின்



Shutterstock/Ilegend

இனப்படுகொலைக் குற்றத்தையும் அதற்கு இந்திய அரசு துணை நின்றதையும் தனது கோயாபல்ஸ் பிரச்சாரத்தால் மறைக்கிறது.

தனது நாட்டின் உள்ளடங்கியுள்ள ஒரு மாநில அரசின் பங்கேற்புடனும் ஒப்புதலுடனுமே சம்பந்தப்பட்ட வெளியுறவுக் கொள்கையை அமைத்துக்கொள்ள வேண்டுமென்று கூட்டாட்சி நாடுகளில் அரசியலமைப்பு சட்டத்திற்கு முன்னுதாரணமாக உள்ள சுவிட்ஸர்லாந்து அரசமைப்புச் சட்டம் கூறுகிறது.

ஆனால், இந்திய அரசு தமிழ்நாடு அரசின் பங்கேற்பை அனுமதிப்பதிருக்கட்டும், தமிழ்நாட்டு மக்களின் கருத்திற்கோ சட்டமன்றத்தின் தீர்மானத்திற்கோ மதிப்பளிப்பதுண்டா? இதிலிருந்து இந்திய நடுவண் அரசின் வெளியுறவுக் கொள்கை மற்றும் செயற்பாட்டின் சட்ட லட்சணம் தெரியவரும்.

உண்மை இவ்வாறு இருக்க இலங்கை குறித்த கொள்கையில் தமிழ்நாட்டின் கருத்தினை புறந்தள்ளு என்று தலைப்பிட்டு இந்து ஏடு சில நாட்களுக்கு முன்பு எழுதியுள்ளது. தமிழ்நாட்டு மக்களின் மற்றும் அரசியல் கட்சிகளின் கருத்துக்களை கேட்டுத்தான் இதுநாள் வரை இந்திய அரசு இலங்கை குறித்த கொள்கையினை வகுத்துசெயற்பட்டு வந்திருப்பது போன்று பொய்யுரைப்பது ஒரு புறம் இருக்கட்டும் அவர்களின் கருத்துக்களையே கவனத்தில் கொள்ளாமல் அக்கொள்கையினை வகுக்க வேண்டும் என்று கூறும் கருத்தை கவனிக்ககூடியதாகவுள்ளது.

எனவே, தமிழ்நாட்டு மக்களும் கட்சிகளும் [illegible] தங்களது பிரதிநிதியாக காட்டிக்கொண்டு இந்திய அரசு செயற்படுவதை எதிர்க்க வேண்டும். ஈழ மக்கள் மீதான இனப்படுகொலைக் குற்றத்திற்குத் துணைபோன இந்திய அரசே ஈழமக்களின் அரசியல் போராட்டத்தில் தலையிடாதே! என்பதே தமிழ்நாட்டு மக்களின் முழக்கமாக இருக்கவேண்டும்.

உலகின் வேறு ஏதேனும் ஒரு மூலையில் ஈழத்தமிழர்கள் தங்களது போராட்டத்தினை நடத்தியிருந்தால் தெற்கு சூடான் மக்களைப்போன்று இந்நேரம் தனி நாட்டுரிமை பெற்றிருப்பர். ஆனால், அவர்கள், தங்களது தொப்புள்கொடி உறவுகளான தமிழ்நாட்டுத் தமிழர்களின் தாயகத்திற்கு அருகாமையில் இருந்து அந்த உரிமைப் போராட்டத்தினை நடத்தியதால்தான் இந்தளவிற்கு அவர்கள் கொடுமைகளுக்கு உள்ளானதுடன் அந்த கொடுமைகளைத் தொடர்ந்தும் எதிர்கொண்டு வருகின்றனர்.

அவர்களது உரிமைப்போராட்டம், தமிழ்நாட்டு தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை எழச்செய்துவிடும் என்ற பச்சை உண்மைதானே சிங்கள- இந்திய அரசுகளின் கூட்டு முயற்சிகளினால் நசுக்கப்படுவதற்கான முக்கியமான காரணமாக அமைகிறது?

ஈழ மக்களின் படைப்பலமாக இருந்த விடுதலைப்புலிகள் அழிக்கப்பட்ட பிறகும் ஒரு கூட்டாட்சி- மாநில அரசுரிமைகூட ஈழத்தமிழர்களுக்கு ஏன் கிடைக்கவில்லை? இதற்கான விடை, அமெரிக்க உள்ளிட்ட மேற்கத்திய ஏகாதிபத்தியங்களின் நலன்களும் இந்திய ஏகாதிபத்தியத்தின் நலன்களும் இணக்கம் கண்டதற்கான காரணத்தை அறிவதில் உள்ளது.

விடுதலை பெற்ற தேசங்களின் இறையாண்மையையே மறுக்கும் உலகமயம் உருவாக்கியுள்ள உலக அரசியல், பொருளாதார சூழலில், இன்றும் அடிமைப்பட்டுக்கிடக்கும் தேசங்களின் இறையாண்மையை மீட்டெடுக்கும் போராட்டங்களை ஏகாதிபத்தியங்கள் அழித்தொழிக்க ஆதரவளிப்பதில் வியப்பென்ன இருக்க முடியும்? தங்களது நாட்டில் தேசிய இனங் களை ஒடுக்கிவரும் ரஷ்யா, சீனா, பாகிஸ்தான் முதலிய நாடுகள் அத்தகைய அழித்தொழிப்புக்கு துணைநின்றதிலும் வியப்பென்ன இருக்க முடியும்?

தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்கள்தான் உலகமயத்தினை எதிர்க்கும் உண்மையான போராட்டங்கள்! அவைதான் உண்மையான சமத்துவ உலக அரசியல் ஒழுங்கினை உருவாக்குவதற்கான போராட்டங்களுமாகும். இதனை தெளிவாக ஏகாதிபத்தியங்கள் அறிந்தே செயற்படுகின்றன. இந்த உண்மையைத்தான் ஈழ இனப்படுகொலை உலகிற்கு உரத்துக் கூறுகிறது. ஏகாதிபத்தியங்களைக் கண்டு அஞ்சாமல் பாலஸ்தீனம், குர்து, காசுமீர் போன்ற போராட்டங்கள் அரை நூற்றாண்டுகளைக் கடந்தும் பல கொடுமைகளுக்குப் பிறகும் தொடரவே செய்கின்றன.

முற்றும்

ஆய்வாளர் சு. அருணாச்சலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

557

## தலைவரின் தீர்ப்பு



...அப்பொழுது சத்திரத்தில் மீன் வறுத்துக்கொண்டிருந்தார்கள். அதன் இனிய மணம் எங்கும் பரவியது.

அந்த மணத்தை மூக்கால் இழுத்தேன். அதை முகர்ந்து கொண்டே புளிச் சோற்றை உண்டு முடித்தேன்.

சிறிது நேரத்தில் சத்திரத்துக்காரர் என் அறைக்கு வந்தார். "இரவு உணவு முடிந்ததா?" என்று அன்புடன் கேட்டார்.

சமையல் அறையில் இருந்து மீன் வறுத்த மணம் வீசியது. அதை முகர்ந்து கொண்டே இருந்தேன்.

நான் கொண்டு வந்த புளிச் சோற்றை உண்டேன். அந்த மணம் இல்லாவிட்டால் ஒரு பருக்கையும் உண்டிருக்க மாட்டேன். பட்டினிதான் கிடந்து இருப்பேன் என்று பதில் சொன்னேன்.

அவர் அங்கிருந்து சென்றுவிட்டார்.

மறுநாள் காலையில் சத்திரத்து அறையைக் காலி செய்தேன்.

தங்கியதற்கான வாடகையைச் சத்திரத்துக்காரரிடம் தந்தேன்.

அவர் அதை எண்ணிப் பார்த்தார். "காசு குறைகிறதே" என்றார்.

"உங்களிடம் பேசியது போல பணத்தைத் தந்து உள்ளேனே" என்றேன் நான்.

"வாடகை சரியாகத்தான் உள்ளது. சமையல் அறையிலிருந்து மீன் மணத்தை நுகர்ந்து இருக்கிறீர்களே. அதற்காக மேலும் ஒரு காசு தந்து விட்டுச் செல்லுங்கள்" என்றார்.

"வேடிக்கை செய்கிறீர்களா? மணம் நுகர்ந்ததற்கு யாராவது பணம் தருவார்களா?" என்றேன் நான்.

"நான் வேடிக்கை பேசவில்லை. அந்த மணம் இல்லாவிட்டால் உங்

### பரமார்த்த குரு கதைகள்

களால் சாப்பிட்டிருக்க முடியாது. இதை நீங்களே ஒப்புக் கொண்டீர்கள். மரியாதையாக ஒரு காசை வைத்துவிட்டுச் செல்லுங்கள்" என்றார்.

"மீன் மணம் நுகர்ந்ததற்கு யாராவது பணம் தருவார்களா? அடாவடியாகப் பேசுகிறீர்களே வழக்கு மன்றத்துக்குச் செல்வோம். நீதிபதி என்ன சொல்கிறாரோ அதன்படி நடப்போம்" என்றேன் நான்.

அவரும் ஒப்புக்கொண்டார்.

நாங்கள் இவரும் வழக்கு மன்றத்தை அடைந்தோம். எங்கள் வழக்கை விசாரித்தார் நீதிபதி.

சத்திரத்துக்காரனைப் பார்த்து அவர், "உணவு உண்டால் பணம் தர வேண்டும். மீன் மணத்தை நுகர்ந்ததற்கு பணம் கேட்கிறாரே அவருக்குக் கிடைத்ததுபோல உமக்கும் கிடைக்கச் செய்கிறேன்" என்றார்.

காவலர்களை அழைத்தார் அவர். என் பணப்பையை அவர்களிடம் தரச்சொன்னார். நானும் தந்தேன்.



"காவலர்களே சத்திரத்துக்காரரின் முகத்தில் இந்தப் பையை அழுத்தித் தேயுங்கள்" என்று கட்டளை இட்டார் அவர்.

காவலர்களும் அப்படியே செய்தார்கள்.

"ஐயோ என் மூக்குப் போயிற்றே. வலி தாங்க முடியவில்லையே" என்று அலறினார் சத்திரத்துக்காரர்.

"உம் சமையலின் மணத்தை இவர் நுகர்ந்தார். இவர் பணத்தின் மணத்தை நீர் நுகர்ந்தீர். இதற்கும் அதற்கும் சரியாகப் போயிற்று. ஏன் அலறுகிறீர்?" என்று கேட்டார் நீதிபதி.

"நான் செய்தது தவறுதான். என்னை மன்னியுங்கள்" என்று கெஞ்சினார் அவர்.

"முதல்முறை என்பதால் உம்மை மன்னிக்கிறேன்" என்றார் நீதிபதி.

நானும் அவருக்கு "நன்றி" சொல்லிவிட்டு அங்கிருந்து புறப்பட்டேன்.

"அதேபோல இங்கும் நான் தீர்ப்பு வழங்கப் போகிறேன்" என்றார்.

"அப்படியே தீர்ப்பு வழங்குங்கள்" என்று எல்லோரும் குரல் கொடுத்தார்கள்.

குதிரைக்காரனைப் பார்த்து அவர் "குதிரையின் வாடகையாக ஐந்து காசைப் பெற்றுக்கொள். குதிரையின் நிழலில் தங்கியதற்காக மூன்று காசு கேட்டாய். அதனால் மூன்று காசின் நிழலைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த இரவில் உன்னால் காசின் நிழலைப் பார்க்க முடியாது. அதனால் காசின் ஓசையைப் பெற்றுக்கொள்" என்றார்.

குருவிடமிருந்து பணப்பையை வாங்கினார் அவர். அதைக் குதிரைக்காரனின் காதில் வைத்து அழுத்தித் தேய்த்தார்.

"காசின் ஓசை கேட்கிறதா?" என்று கேட்டார்.

வலி தாங்க முடியாமல் அலறினான் அவன்.

"ஐயா! பேசிய கூலியை மட்டும் தரச் சொல்லுங்கள். என்னை விட்டு விடுங்கள்" என்று கெஞ்சினான்.

"இனி உன் குதிரையே வேண்டாம். கூலியைப் பெற்றுக்கொள்.

இந்தா ஐந்து காசு" என்று அவனிடம் தந்தார் குரு.

பணத்தைப் பெற்றுக் கொண்ட அவன் குதிரையுடன் அங்கிருந்து சென்றான்.

"நல்ல தீர்ப்பு வழங்கினீர்கள்.

நீங்கள் நலமாக வளமாக வாழ்வீர்கள்" என்று ஊர்த் தலைவரை வாழ்த்தினார் குரு.

அன்றிரவு குருவும் சீடர்களும் அங்கேயே மடத்தில் தங்கினார்கள்.

"குதிரைக்காரன் ஒருவன் நம்மை ஏமாற்ற முயன்றானே.

என்னை வணங்குபவர்கள் முன்னால் விசாரிக்கப் பட்டேனே" என்று புலம்பியபடி படுத்திருந்தார் குரு.

அங்கிருந்த சீடர்களிடம் "காலம் கலிகாலம். இந்தக் காலத்தில் யாரையும் நம்ப முடியாது. குதிரையால் பட்ட துன்பங்கள் போதும். இனி எங்கே சென்றாலும் நடந்தே செல்வோம்" என்றார்.

"எல்லாம் உணர்ந்தவர் நம் குரு. அவருக்கு நல்ல குதிரையை ஏற்பாடு செய்ய முடியவில்லையே. ஏமாற்றுக்காரரை அழைத்து வந்



தோமே" என்று வருந்தினார்கள் சீடர்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர்களிடையே பேச்சுவார்த்தை நடைபெற முதல்வர் ஜெயா உதவ வேண்டும்

(கொழும்பு)

**தமிழக மீனவர்களுக்கும் இலங்கை மீனவர்களுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடைபெற தமிழக முதல்வர் ஜெயலலிதா ஒத்துழைக்க வேண்டும் என இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் கூறினார்.**

இது தொடர்பாக டில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேசிய ஊடக மையத் திறப்பு விழாவில் பங்கேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது,

தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை சிறைபிடிக்கும் சம்பவங்கள் தொடர்ந்து வருவதாக தமிழகத்தைச் சேர்ந்த சில அரசியல் கட்சிகள் கூறுகின்றன. குறித்த விடயத்தில் சுமுகமான தீர்வு ஏற்பட வேண்டும் என மத்திய அரசு விரும்புகிறது. கடந்த மாதம் என்னையும் மத்திய அரசின் உயரதிகாரிகளையும் தமிழக மீனவர்கள் குழு சந்தித்துப் பேசியது.

அப்போதே அவர்களிடம் நீடித்து வரும் பிரச்சினைக்கு தீர்வுகாண இலங்கை மீனவர்களுடன் பேச்சு நடத்துங்கள். அதற்கு தேவையான உதவியை மத்திய அரசு வழங்கும் என்று உறுதியளித்தேன்.

இந்த விவகாரத்தில் தமிழக அரசும் மத்திய அரசுடன் சேர்ந்து செயற்பட வேண்டும் என எதிர்பார்க்கிறோம். தமிழகத்தைச் சேர்ந்த மீனவர்கள் குழு மாநில அரசின் ஆதரவுடன் இலங்கை சென்று திரும்ப வேண்டும் என விரும்புகின்றனர்.

ஆனால், இதுவரை அவர்களுக்கு உரிய அனுமதியை தமிழக அரசு கொடுக்கவில்லை என்று எனக்குத் தெிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக முதல்வர் ஜெயலலிதாவும் இந்த விடயத்தில் தனிக் கவனம் செலுத்தி தமிழக மீனவர்கள் இலங்கை சென்று திரும்ப ஒத்துழைக்க வேண்டும்.

தமிழக அரசு ஒப்புதல் தெரிவித்த உடனேயே இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகம் மூலம் தமிழக-இலங்கை மீனவர்கள் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்யப்படும். இந்த பேச்சுவார்த்தை நடைபெற வேண்டும் என இலங்கை அரசும் எதிர்பார்க்கிறது.

பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் இந்தியா பங்கேற்பது குறித்து இன்னும் உத்தியோகபூர்வமாக மத்திய அரசு முடிவு செய்யவில்லை. அக்கூட்டம் நடைபெற இன்னும் சில மாதங்கள் உள்ளன.

இந்த விவகாரத்தில் குரல் எழும்பும் தமிழக அரசியல் கட்சிகளின் உணர்வுகளை மத்திய அரசு மதிக்கிறது. ஆகவே எல்லா அம்சங் களையும் ஆராய்ந்து முடிவு எடுக்கப்படும் என்றார். (அ-2)

# வாஸின் மனைவியிடம் துருவித்துருவி விசாரணை

(கொழும்பு)

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபரான வாஸ் குணவர்த்தனவின் மனைவியான சாமலி பிரியதர்ஷனி பெரேரா குற்றத்தடுப்புப் பிரிவினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இவர் நேற்றுமுன்தினம் முற்பகல் 11 மணி முதல் மாலை 5 மணி வரை ஆறு மணித்தியாலங்கள் குற்றத் தடுப்பு பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

வாஸ் குணவர்த்தனவிடமிருந்த இரு கைத்தொலைபேசிகள், அவற்றைப் பெற்றுக் கொடுத்த நபர்கள், அந்தத் தொலைபேசி ஊடாக இடம்பெற்ற உரையாடல்கள் தொடர்பில் அவரது மனைவியிடம் குற்றத் தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர் என தெரியவருகிறது.

சாமலி பிரியதர்ஷனி பெரேராவுடன் சட்டத்தரணிகளான ஆநுர செனவிரத்ன, ரசிக சமரவிக்கிரம ஆகியோரும் குற்றத்தடுப்புப் பிரிவுக்குச் சென்றிருந்தனர். (அ-2)

# இலங்கை பணியாளர்கள் 7200 பேர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

சட்டவிரோதமாக சவுதிஅரேபியாவில் தங்கியிருந்த இலங்கைப் பணியாளர்கள் 7 ஆயிரத்து 200 பேர் இதுவரை நாட்டிற்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

சவுதிஅரேபிய அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த பொதுமன்னிப்புக் காலத்தை பயன்படுத்தி இலங்கைப் பணியாளர்கள் நாடு திரும்பியுள்ளதாக பணியகத்தின் ஊடகப் பேச்சாளரும் பொது முகாமையாளருமான மங்கல ரந்தெனிய தெரிவித்துள்ளார். (அ-2)

## நரகாசுரன் இதிகாச இசைநாடக ஆற்றுகை

(பொன்னாலை)

வலிகாமம் மேற்கு கலாலயம் நாடக மன்றத்தினர் வரலாற்றுப் புகழ்மிக்க பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தின் 16ஆம் திருவிழாவாகிய வேட்டைத் திருவிழாவை முன்னிட்டு நாளை செவ்வாய்க்கிழமை இரவு 9 மணிக்கு ஆலய முன்றிலில் செ.உதயச்சந்திரன் நெறியாள்கையில் உருவான நரகாசுரன் என்னும் இதிகாச இசை நாடகத்தை ஆற்றுகை செய்ய உள்ளனர்.

அத்துடன், சுவாமி ஊர்வலத்தின் போது கிராமிய கலைகளும் ஆற்றுகை செய்யப்படவுள்ளதாக கலாலயம் அறிவித்துள்ளது. (அ)

**யாழ்ப்பாணத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை எழுதிய பின்னர் மகிழ்ச்சியுடன் வெளியேறிய மாணவர்கள்...**



# ஹெரோயின் போதை பக்கற்றுகளை விழுங்கிய பெண் வைத்தியசாலையில்

(திருகோணமலை)

திருகோணமலை ஆண்டான் குளம் பகுதியில் ஹெரோயின் போதைப் பொருள் பக்கற்றுகளை விழுங்கிய பெண்ணொருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண் போதைப் பொருளை வைத்திருப்பதாக கிடைத்த தகவலின் படி நேற்று முன்தினம் மாலை அவரை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்ததாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதன்போது தன்னிடமிருந்த சில ஹெரோயின் போதைப் பொருள் பக்கற்றுகளை சந்தேகநபரான பெண் விழுங்கியதாக தெரியவந்துள்ளது.

இதனையடுத்து அந்த பெண் திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திருகோணமலை துறைமுக பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, மாளிகாவத்தை பகுதியில் 500 கிராமுக்கும் அதிகமான ஹெரோயின் போதைப் பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேல் மாகாண மோசடி ஒழிப்பு பிரிவினரால் சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

சந்தேக நபர் மாளிகாவத்தை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். (அ-2)

## வெளிநாட்டவர்களை நாடு கடத்த முடிவு

இலங்கையின் மிரிஹான பகுதியில் அமைந்துள்ள வெளி நாட்டுப் பிரஜைகளை தடுத்து வைக்கும் முகாமில் 100இற்கும் மேற்பட்டவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை நாடு கடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

படகு மூலம் மியன்மாரிலிருந்து இலங்கையில் புகலிடம் கோரியவர்களே அதிகளவில் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## சந்தேகத்தின் பேரில் ஐவர் கைதாகினர்

(கொழும்பு)

சண்டேலீடர் பத்திரிகையின் ஊடகவியலாளர் பாராஸ் சவுகத்தலியின் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய சந்தேகத்தின் பேரில் ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஊடகவியலாளர் சவுகத்தலியை கொலை செய்யும் நோக்கில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருந்தது. சந்தேக நபர்களை விளக்க மறியலில் வைக்குமாறு கல்கிஸை நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

வடமேல் மற்றும் சபரகமுவ மாகாணங்களில் மேற்கொள்ளப்பட்ட தொடர் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரிலேயே குறித்த கும்பலை பொலிஸார் கைது செய்திருந்தனர்.

கடந்த பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி சவுகத்தலி மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருந்தது. இந்த சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-2)

# பாக்.தீவிரவாத அமைப்பு யாழ்ப்பாணத்தில் இல்லை

## பாதுகாப்புச் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)



இலங்கையிலிருந்து கொண்டு பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபட எவருக்கும் இடமில்லை என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டின் எந்தப் பகுதியிலும் பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபட எவருக்கும் இடமளிக்கப் போவதில்லை.

பாகிஸ்தான் தீவிரவாத அமைப்பு ஒன்று யாழ்ப்பாணத்திலிருந்து இந்தியா மீது தாக்குதல் நடத்தவிருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் படையினர் நிலைநிறுத்தப்பட்டுள்ளனர்.

பயங்கரவாதம் தலைதூக்காமல் இருப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை படையினர் எடுப்பார்கள்.

யாழ்ப்பாணத்தில் 99 வீதமானவர்கள் தமிழர்களே வாழ்ந்து வருகின்றனர். படையினர் மற்றும் புலனாய்வுப் பிரிவினர் நிலை நிறுத்தப்பட்டுள்ளனர்.

எனவே, பாகிஸ்தான் தீவிரவாதிகளினால் ஊடுருவி தாக்குதல் நடத்தக் கூடிய சாத்தியம் கிடையாது. எவ்வாறெனினும் இந்திய கரையோரங்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய தெரிவித்துள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளிவாசல் தாக்கப்பட்டமை தொடர்பில் விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

## பிரதியமைச்சர் முஸ்தபா தெரிவிப்பு

(கொழும்பு)

**கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் விடயத்தில் தான் சமாதானத்தை ஏற்படுத்த முயற்சித்தேனே தவிர பிரச்சினையை உருவாக்க எந்த வகையிலும் முயற்சிக்கவில்லை. புதிய பள்ளிவாசலில் தொடர்ந்தும் சமயக் கடமைகளை மேற்கொள்வதற்கு நான் புத்தசாசன அமைச்சின் செயலாளரிடமிருந்து அனுமதி பெற்றதனாலேயே பள்ளிவாசல் தாக்கப்பட்டது என்பது தவறு. இல்லையேல் பழைய பள்ளிவாசலையும் நாம் இழந்திருப்போம் என்று பிரதியமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.**

கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் 1994 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகின்றது. இதனை நகர அபிவிருத்தி அதிகார சபையினால் வெளியேற்றப்பட்டதன் காரணமாக புதியதொரு இடத்தை முஸ்லிம்கள் பள்ளிவாசலாக மாற்றினர்.

அதன்பின் இப்பள்ளிவாசல் தாக்குதலுக்கு உள்ளானது. என்னை பொறுத்தவரை சிங்கள, முஸ்லிம் ஐக்கிய சக வாழ்வே முக்கியம். இதற்கு பின் புத்தசாசன அமைச்சில் நடந்த கலந்துரையாடலின் போது தொடர்ந்து அனைவரும் பழைய பள்ளிவாசலில் தொழுவது என முடிவெடுக்கப்பட்டது.

தனது மத ஸ்தலத்துக்கு ஒருவர் செல்வது என்பது சிறந்த செயல். எனினும் நடைபெற்ற சம்பவத்தைப் பற்றி சரி, பிழை பார்ப்பதில் அர்த்தமில்லை. மாறாக அனைவரும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதே பிரதான விடயமாகும்.

எந்த மதஸ்தலமாயினும் தனிநபர் சொத்தாயினும் அதனை தாக்க யாருக்கும் உரிமை இல்லை. தனி நபரின் சொத்தை தாக்குவது என்பதைவிட சமயஸ்தலத்தை தாக்குவது என்பது பாரதூரமான விடயமாகும். இதற்கு கட்டாயமாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒருசில அரசியல்வாதிகள் நான் இவ்வாறு அமைச்சின் செயலாளரிடமிருந்து அனுமதியைப் பெற்று சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அனுப்பி வைத்ததனாலேயே பிரச்சினை உருவாகி பள்ளிவாசல் தாக்குதல்களுக்கு உள்ளானது என என்மீது பழி சுமத்துகிறார்கள். நான் எனது சொந்த நலனுக்காக அரசியல் செய்யவில்லை. சமுதாய நலனுக்காகவே அரசியலில் இறங்கினேன் என்றார். (அ-2)

# நல்லூர் ஆலய சூழலில்...

நல்லூர் முருகன் மஹோற்சவத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்குமாலை 6.45 மணி முதல் 8.15 மணி வரை நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது. இதற்கமைய இன்று திங்கட்கிழமை திருமதி பங்கயற்செல்வி முகுந்தன் வழங்கும் பாடலுடனான இசையரங்கம் இடம் பெறவுள்ளது. இந்நிகழ்விற்கு அணிசெய் கலைஞர்களாக வயலின் எ.ஜெயராமன், மிருதங்கம் கானகோகுலம் ஜெயம், கெஞ்சிரா ரி.சண்முக சுந்தரம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

• • • • • • • • • • • • • • • • • • • •

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் ஆன்மீக சிந்தனை, சமய சொற்பொழிவு, கலை நிகழ்வுகள் என்பன பிற்பகல் 3 மணி முதல் 6 மணி வரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது. இன்றைய நிகழ்வுகளாக மதுரகவி காரை எம்.பி அருளானந்தன் வழங்கும் சைவத்தமிழர் கலாசாரம் எங்கே போகிறது...? என்னும் விடயப் பொருளிலான சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. தொடர்ந்து சங்கானை மாவடி ஸ்ரீ ஞான வைரவர் அறநெறிப் பாடசாலை, சுன்னாகம் கதிரமலைச் சிவன் தேவஸ்தான அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்வும் இடம்பெறும்.மேலும் விசேட நிகழ்வாக வசந்தகுமார் கஜானன் வழங்கும் பண்ணிசைக் கச்சேரி இடம்பெறவுள்ளது.

• • • • • • • • • • • • • • • • • • • •

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை முன்னிட்டு சைவத் தமிழ் பண்பாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் தெய்வீக பேருரை, கலை நிகழ்வு, மாணவர் சொற்பொழிவு, கலைஞர் கௌரவிப்பு நிகழ்வுகள் என்பன பிற்பகல் 6.30 மணிமுதல் இரவு 8 மணி வரை நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள நடராஜா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் நடைபெறும். இதன்படி இன்று திங்கட்கிழமை விகடகவி மு. திருநாவுக்கரசு வழங்கும் அன்பே சிவம் என்னும் விடயப் பொருளிலான சொற்பொழிவு இடம்பெறும்.

• • • • • • • • • • • • • • • • • • • •

நல்லூர் கந்தன் கோயில் மஹோற்சவத்தை முன்னிட்டு சர்வதேச இந்துகுருமார் ஒன்றியத்தின் ப்ரம்மகான சபா நடத்தும் தெய்வீக இசைச் சங்கமம் நிகழ்வு மாலை 6.30 மணிக்கு நல்லை ஆதீன புதிய மணி மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது. இதன்படி இன்று துன்னாலை சுதாத்மிகா கேதீஸ்வர சர்மா வழங்கும் நர்த்தனாஞ்சலி இடம்பெறவுள்ளது.

• • • • • • • • • • • • • • • • • • • •

நல்லூர் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கானகதா வாரிதி பிரம்ம ஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா வழங்கும் பாரத வம்சம் பற்றிய இசைப் பேருரை பக்க வாத்திய சகிதம் இடம்பெறவுள்ளது. இந் நிகழ்வில் இன்று திங்கட்கிழமை அரக்கு மாளிகை என்னும் விடயப் பொருளிலான இசைப் பேருரை இடம்பெறவுள்ளது.

• • • • • • • • • • • • • • • • • • • •

நல்லூர் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு தினமும் மாலை 7.15 மணி தொடக்கம் 7.45 மணி வரையும் யாழ். சின்மயாமிஷன் ஆச்சிரம வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்கிரத சைதன்ய சுவாமிகள் நல்லூர் மகேஸ்வரன் மணி மண்டபத்தில் சொற்பொழிவு ஆற்றி வருகின்றார். இதில் இன்று திங்கட்கிழமை ஆலய வழிபாடு என்னும் விடயப் பொருளிலான சொற்பொழிவை ஆற்றவுள்ளார்.

# பொதுநலவாய அமைப்பை சேர்ந்த 150 பிரதிநிதிகள் இலங்கை வருகை

பொதுநலவாய நாடுகள் அமைப்பைச் சேர்ந்த 30 நாடுகளின் 150 பிரதிநிதிகள் இலங்கை வந்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டிற்கான ஆரம்பக்கட்ட ஏற்பாடுகளை கண்காணிக்கும் நோக்கில் வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் வருகை அமைந்துள்ளதாக அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகம குறிப்பிட்டார்.

இம்மாநாட்டின் நிகழ்வுகள் நடைபெறும் கொழும்பு, ஹிக்கடுவ, அம்பாந்தோடை ஆகிய பிரதேசங்களுக்கு குறித்த பிரதிநிதிகள் விஜயம் செய்யவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு மேலும் கூறியுள்ளது. (அ-2)

# நல்லூரான் திருவடிக்கு அருணகிரிநாதர் உற்சவம்



## யாரடா நீ என்ற ஞானம் நம்முள் தோன்ற

உலகமுய்ய வந்தான் எங்கள் உலகம் போற்றும் வேலன்
பழகும் தமிழின் இறைவன் எங்கள் பார்வதியின் மைந்தன்
அழகன் முருகன் என்று இங்கு அனைவரும் போற்றும்
அழகுடனே நகைகள் சூடி அசைந்து அசைந்து வருவான்
(உலகமுய்ய.......)
தேரடியின் மண்ணை நாங்கள் மிதித்துவிட்டாள் போதும்
யாரடா நீ என்ற திருஞானம் எம்முள் தோன்றும்
தண்ணீர் தினமும் வீசி தெருவில் தகரப் பந்தல் போட்டு
வண்ணமான சேவை இங்கே வலியச் செய்ய வைத்தான்
(உலகமுய்ய......)

கவிமணி அன்னைதாஸன்,
ஊரெழு.

## புள்ளி மயில் வாகனா



வெள்ளிமலை ஆண்டி பெற்ற
வேல் முருகன் ஆண்டியப்பா
புள்ளி மயில் வாகனனே எங்கள்
நல்லூர்க் கந்தவேலே – உன்னை
நாடி வந்து நாம் தொழுதோம்
ஓடி வந்து காருமய்யா
புள்ளி மயில் மீதினிலே
வள்ளி தெய்வானையுடன்
வெள்ளி வேல் ஏந்திவந்த
நல்லூர்க் கந்த வேலே – உன்னை
நாடி வந்த பக்தர்கட்கு
நல்ல துணையாயிரையா

ஆர்.எஸ்.ஆனந்தன்,
தும்பளை.

## பல்லாண்டு வாழ்ப்பணி



ஆயிரம் ஆயிரமாய் அடியார்கள் திரண்டுன்
கோயிலை நாடிக் கும்பிட்டே – தாயினும்
மேலான வுன்னருள் வேண்டுவார் அவர்க்கே
வேலாவுன் னருளை விதை
நல்லையில் அமர்ந்து நல்லாட்சி நல்கும்
வல்லவேற் குமராவில் வுலகில் – எல்லோரும்
எல்லாமும் பெற்று இன்பமே கண்டு
பல்லாண்டு வாழப் பணி

செ.சுதாகரன்,
மட்டுவில் வடக்கு.

## நல்லூர் கந்தன் அநுபூதி



அஞ்சித் துயர்கொண் டுழலும் அடியேன்
செஞ்சொற் கவிகேட் டெனையா ளுவனே
வஞ்சித் திடுவோ ருமெனைப் பணிய
நெஞ்சப் பகைநீக் கிடுநல் லூரா!

கலாபூஷணம், சந்தக் கவிஞர். நவ.பாலகோபால்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற் போனோர்கள் பற்றிய இலங்கையின் 9-வது ஆணைக்குழு



அரச படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இடையே போர் நடைபெற்ற காலத்தில் காணாமற்போனோர்கள் தொடர்பாக ஆராய அரசாங்கம் ஆணைக்குழுவொன்றை நியமித்துள்ளது.

போர் முடிவடைந்து எவ்வளவு காலம் கடந்துவிட்டது என்ற விடயத்தையும் இலங்கையின் ஆணைக் குழுக்களினதும் ஏனைய விசாரணைக் குழுக்களினதும் வரலாற்றையும் மறந்துவிட்டு இந்த ஆணைக் குழு நியமனத்தை நோக்கினால் மிகவும் பாராட்டக்கூடிய விடயமாகவே அதனைக் கருத வேண்டும்.

ஆனால், இந்த இரண்டு விடயங்களையும் மறக்க முடியுமா? போர்க் காலத்து சம்பவங்களைப் பற்றி விசாரணை செய்வதற்கென போர் முடிவடைந்து நான்காண்டுகளுக்கும் பின்னரே அரசாங்கம் இந்த ஆணைக்குழுவை நியமித்துள்ளது. இவ்வளவு காலம் இல்லாத தேவை இப்போது எவ்வாறு ஏற்பட்டது என்ற கேள்வி எவர் மனதிலும் எழுவதை தவிர்க்கவே முடியாது.

சில அமைச்சர்களிடம் இந்தக் கேள்வியைக் கேட்டால் இவ்வளவு காலம் நியமிக்காததை இப்போதாவது நியமித்ததைப் பற்றி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைப் பாராட்ட வேண்டும் என்பார்கள். பாராட்டவும் செய்வார்கள். ஒருவகையில் அதுவும் உண்மைதான் என அதைக் கேட்ட மேலும் பலர் அப்போது நினைக்கலாம்.

உண்மையிலேயே அரசாங்கம் எதற்காக இந்த ஆணைக்குழுவை நியமித்தது என்பது பலராலும் ஊகிக்க முடிகிறது. இது ஜெனீவாவில் இவ்வருடமும் கடந்த வருடமும் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமை பேரவையின் கூட்டங்களின் போது இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட இரண்டு பிரேரணைகளின் விளைவாகும். அவ்விரண்டும் இலங்கை அரசாங்கம் தாமே நியமித்த கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை நிறைவேற்ற வேண்டும் என்ற வலியுறுத்துகிறது. இந்த சிபார்சுகளில் காணாமற்போனோர்களின் விடயமும் வருகிறது.

தாம் மனித உரிமை பேரவையின் பிரேரணைகளை நிராகரிப்பதாக அரசாங்கம் எவ்வளவுதான் பகிரங்கமாக கூறிய போதிலும் அப்பிரேரணைகளின் நெருக்குதலுக்கு அமைய சில நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. இந்த நெருக்குதலினாலேயே 2006 ஆம் ஆண்டு திருகோணமலையில் சுட்டுக்கொல்லப்பட்ட ஐந்து மாணவர்களின் மரணங்கள் தொடர்பாக அரசாங்கம் இப்போது மீண்டும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. சம்பவம் இடம்பெற்று ஏழு ஆண்டுகளுக்குப் பின்னர் அது தொடர்பாக பொலிஸ் அதிரடிப்படையைச் சேர்ந்த 12 பேர் சில வாரங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டனர்.

அதேவேளை 2006 ஆம் ஆண்டு மூதூரில் பிரேஞ்சு அரசு சார்பற்ற நிறுவனமொன்றின் 17 பணியாளர்கள் கொலை செய்யப்பட்டமை தொடர்பாகவும் விசாரணை நடத்துவதாக அரசாங்கம் கூறுகிறது. 2006 ஆம் ஆண்டு இடம்பெற்ற இவ்விரண்டுபடுகொலை சம்பவங்கள் தொடர்பாகவும் மீண்டும் விசாரணை நடத்துவதாக அரசாங்கம் கடந்த வருடம் ஐ.நா. மனித உரிமை பேரவையிடம் வாக்குறுதியளித்து இருந்தது. இவ்விரண்டு சம்பவங்களும் பல்வேறு காரணங்களைக் கூறி சமாளித்து காலத்தால் மூடி மறைக்கப்பட்ட சம்பவங்களாகும்.

அதேபோல் போர்க் காலத்தில் காணாமற்போனோர்கள் தொடர்பாக விசாரணை நடத்த வேண்டும் என நல்லிணக்க ஆணைக்குழு சிபாரிசு செய்திருந்தது. ஆனால், அது தொடர்பாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முன்வரவில்லை. அவ்வாறு முன்வராதது மட்டுமல்லாது பாதுகாப்புத் துறையினர் அவ்வாறு எவரும் போர்க்காலத்தில் காணாமற் போகவில்லை என அடித்துக்கூறினர்.

இவ்வருடம் ஜனவரி மாதம் பாதுகாப்புச் செயலர் டெய்லி மிரர் பத்திரிகையுடன் நடத்திய பேட்டியொன்றின் போதும் போர்க் காலத்தில் எவரும் காணாமற் போகவில்லை என்று கூறினார். அக்காலத்தில் கைது செய்யப்பட்டோர் மற்றும் சரணடைந்தோர் அனைவருமே ஒன்றில் இந்திய அதிகாரிகள் அல்லது சர்வதேச செஞ்சிலுவை சங்க அதிகாரிகளின் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டதாகவும் எனவே, எவரும் காணாமற் போக முடியாது என்றும் அவர் இந்த பேட்டியின் போது கூறியிருந்தார்.

காணாமற்போனோர்களாகக் கூறப்படும் பலபேர் களத்தில் கொல்லப்பட்ட விடுதலைப்புலிகள் என்றும் மேலும் சிலர் வெளிநாடுகளில் வாழ்வதாகவும் அவர் கூறியிருந்தார்.

அதற்கு முன்னர் நல்லிணக்க ஆணைக்குழுவின் இராணுவம் சம்பந்தப்பட்ட சிபாரிசுகள் தொடர்பாகவும் சனல் 4 தொலைக்காட்சி சேவையினால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகவும் விசாரணை செய்வதற்காகவென ஆறுபேர் கொண்ட இராணுவ நீதிமன்றம் ஒன்று நியமிக்கப்பட்டது. அதன் அறிக்கை கடந்த ஏப்ரல் மாதம் வெளியிடப்பட்டது. அதிலும் போரின் போது எவரும் காணாமற்போகவில்லை என்றே கூறப்பட்டது.

பாதுகாப்புச் செயலாளர் போரின் போது எவரும் காணாமற் போகவில்லை என்று ஜனவரி மாதம் கூறியிருக்கையில் ஏப்ரல் மாதம் இராணுவ நீதிமன்றமும் அதனையே தீர்ப்பாக வழங்குவதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை. ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய இராணுவ நடவடிக்கைகள் பொது மக்கள் எவரும் பாதிக்கப்படாத வகையில் மேற்கொள்ளப்பட்டதாகவும் அந்நீதிமன்றம் தெரிவித்து இருந்தது.

அவ்வாறு உத்தியோகபூர்வ அறிக்கை ஒன்று இருக்கும் நிலையில் தான் போர்க்காலத்தில் [illegible] பகுதிகளில் எவரும் காணாமற் போயுள்ளனரா? அவ்வாறாயின் அதற்குப் பொறுப்பானவர்கள் யார் என்பனவற்றை விசாரணை செய்வதற்காக ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்றை நியமித்துள்ளார். வேறு விதமாக கூறுவதாயின் ஜனாதிபதியின் பணிப்புரையின் பிரகாரம் பாதுகாப்புப்படையினர் பொதுமக்கள் எவரும் பாதிக்கப்படாத வகையில் போரின் போது நடந்துகொண்டனர் என இராணுவம் கூறுவதை ஜனாதிபதியே நம்புகிறார் இல்லை போலும்.

புதிதாக நியமிக்கப்பட்ட இந்த ஆணைக்குழு நேர்மையாகவே நியமிக்கப்பட்டாலும் உலகத்தாரின் பார்வைக்காக நியமிக்கப்பட்டாலும் உலகம் எந்தளவு அதனை நம்பும் என்பது சந்தேகமான விடயமாகும். ஏனெனில் அதற்கு முன்னர் 2010 ஆம் ஆண்டு அரசாங்கம் நல்லிணக்க ஆணைக்குழுவை நியமித்த போதும் சர்வதேச அமைப்புக்கள் அதனை ஏற்கத் தயங்கின. சர்வதேச நெருக்குதல்கள் வரும் போதெல்லாம் இலங்கை அரசாங்கம் ஆணைக் குழுக்களை நியமிப்பது வழக்கமாக இருக்கிறது என ஹியூமன் ரைட்ஸ் வொச் நிறுவனம் அப்போது கூறியது.

எனவே, இப்போது நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழு அவ்வாறு உலகை ஏமாற்றுவதற்கானதோர் தந்திரமல்ல என்பதை நிரூபிப்பதே இந்த விடயம் தொடர்பில் இப்போது அரசாங்கத்தின் முன்னுள்ள பாரிய பொறுப்பாகும். ஏனெனில் இதற்கு முன்னர் இருந்த ஜனாதிபதிகளும் தற்போதைய ஜனாதிபதியும் நியமித்த பல ஆணைக்குழுக்களின் நோக்கம் நிறைவேறவில்லை என்பதே பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலைமையாகும்.

அதிலும் இதுவரை இலங்கையில் பதவிக்கு வந்த ஜனாதிபதிகளில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவை தவிர்ந்த ஏனைய சகல ஜனாதிபதிகளும் காணாமற்போனோர்கள் தொடர்பாக ஆராய்ந்து பரிகாரங்களை சிபாரிசு செய்வதற்காக ஆணைக் குழுக்களை நியமித்துள்ளனர் என்ற விடயமே விந்தையானது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அதிலும் ஜனாதிபதி ரணசிங்ஹ பிரேமதாச இதே விடயத்திற்காக மூன்று ஆணைக்குழுக்களையும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நான்கு ஆணைக் குழுக்களையும் நியமித்தமை குறிப்பிடத்தக்க முக்கியமான விடயமாகும்.

ஜனாதிபதி பிரேமதாச 1991, 1992 மற்றும் 1993 ஆம் ஆண்டுகளில் காணாமற் போனோர்கள் தொடர்பாக ஆராயவென இந்த மூன்று ஆணைக் குழுக்களையும் நியமித்தார்.

அவர் கொல்லப்பட்டதன் பின்னர் பதவிக்கு வந்த ஜனாதிபதி டீ.பி. விஜேதுங்க இந்த மூன்று ஆணைக் குழுக்களையும் ஒதுக்கித்தள்ளிவிட்டு 1993 ஆம் ஆண்டே தாமும் இதே நோக்கத்திற்காக மற்றொரு ஆணைக் குழுவை நியமித்தார்.

ஆட்கள் காணாமற் போவதைப் பற்றி ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியை திட்டிக்கொண்டு பதவிக்கு வந்த சந்திரிகா குமாரதுங்க பதவியேற்ற 1994 ஆம் ஆண்டே அதே நோக்கத்திற்காக தாமும் பிரதேச வாரியாக மூன்று ஆணைக்குழுக்களை நியமித்தார்.

பின்னர் இந்த ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் வெளியானதன் பின்னர் மேலும் விசாரணைக்காகவென திருமதி மனோரி முத்தெட்டுவேகம தலைமையில் நாடு தழுவிய ரீதியில் மற்றொரு ஆணைக் குழுவை நியமித்தார்.

அதன் பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 2010 ஆம் ஆண்டு நியமித்த நல்லிணக்க ஆணைக் குழுவின் அடிப்படை நோக்கம் காணாமற் போனோர்கள் தொடர்பாக ஆராய்வது அல்ல என்ற போதி லும் அவ்ஆணைக்குழுவும் காணாமற் போனோர்கள் தொடர்பாக சிபார்சுகளை செய்துள்ளது. இவ் அத்தனை ஆணைக்குழுக்கள் செயற்பட்ட போதிலும் இலங்கையில் மனிதர்கள் காணாமற் போதல் தடுத்து நிறுத்தப்படவில்லை. மாறாக அதற்காகவென்றே வெள்ளை வான் கலாசாரம் ஒன்றே உருவாகியது.

மேற்படி வரலாற்றின் படி 1991 ஆம் ஆண்டு முதல் இதுவரை காணாமற்போனோர் தொடர்பாக விசாரணை செய்வாதற்காக மூன்று முன்னாள் ஜனாதிபதிகள் எட்டு ஆணைக்குழுக்களை நியமித்துள்ளனர். இந்த நிலையில்தான் ஜனாதிபதி தற்போது மற்றொரு ஆணைக் குழுவை நியமித்துள்ளார். எனவே, இது இந்த நோக்கத்திற்காக நியமிக்கப்பட்ட ஒன்பதாவது ஆணைக் குழுவாகும்.

எனவேதான், இவ்விடயத்தில் சர்வதேச ரீதியாக நம்பிக்கையையூட்டுவது கடினமாக இருக்கும் என்று ஊகிக்க வேண்டியிருக்கிறது. ஆனால், மனம் வைத்தால் இந்த ஆணைக்குழுவை பாவித்தே அரசாங்கத்திற்கு இழந்த நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்பவும் முடியும். அது நடக்குமா என்பதை காலம் மட்டுமே சொல்லும். அதுவரை அவரவர் தத்தமது அறிவின் பிரகாரமும் அனுபவத்தின் பிரகாரமும் உணர்வின் பிரகாரமும் என்ன நடக்கும் என்பதை ஊகிக்க வேண்டியதுதான்.

புதிய ஆணைக்குழுவில் மக்ஸ்வெல் பரணகம, பிரியந்தி வித்தியாரத்ன மற்றும் மனோ ராமநாதன் ஆகியோர் இடம்பெறுகின்றனர். அவர்களில் பரணகமவும் ராமநாதனும் நல்லிணக்க ஆணைக் குழுவிலும் இடம்பெற்றவர்களாவர். தற்செயலாகவோ அவர்கள் சமர்ப்பிக்கும் அறிக்கை நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையின் சிபார்சுகளுக்கு முரணாக அமைந்தால் எப்படியிருக்கும்?

எம்.எஸ்.எம்.ஐயூப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் மக்களுக்கு எதிரான தாக்குதல் தொடர்பில் பேச முடியாதநிலை வரும்

## தே.ஐ.முன்னணி தலைவர் அசாத்சாலி தெரிவிப்பு

(கொழும்பு)

**அரசாங்கத்தில் இருக்கும் அமைச்சர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் தாக்குதல் தொடர்பில் பேச முனைந்தால் அவர்கள் கைது செய்யப்படும் நிலை உருவாகலாம் என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத்சாலி தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றம் சென்ற ரவூப் ஹக்கீமினால் கூட இது குறித்து பேச முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் கவலை வெளியிட்டார்.

புத்தளத்தில் அண்மையில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அசாத் சாலி மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

இலங்கையின் அரசியல் வரலாற்றில் தற்போதைய அரசானது தமது சாதனையினை பதித்துள்ளது. எந்த அரசும் செய்யாத கொடுங்கோல் ஆட்சி இன்றும் இடம்பெறுகின்றது.

குறிப்பாக சிறு பான்மை மக்கள் அச்சம் கொள்ளும் அளவுக்கு தாக்குதல்கள் இடம்பெறுகின்றன.

அண்மையில் வெலிவேரியவில் தண்ணீர் கேட்ட மக்கள் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்த போது அவர்களுக்கு துப்பாக்கி குண்டுகளினால் பதில் கூறப்பட்டுள்ளது.

முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் தாக்கப்பட்ட போதும் வீடியோ காட்சிகள் சீ.சீ.டிவி கமரா மூலம் பதிவு செய்யப்பட்டு பொலிஸாருக்கு வழங்கப்பட்ட போதும் அதற்கான நடவடிக்கைகள் மந்த கதியில் இடம்பெறுவதை காணமுடிகின்றது.

இராவணபலய, சிங்கள ராவய, பொதுபல சேனா போன்ற அமைப்புக்களின் செயற்பாடுகளை கட்டுப்படுத்த முடியாத நிலையில் அரசாங்கம் இருக்கின்றது. இந்த நாட்டில் பாதுகாப்பு தரப்பினருக்கு ஆணையினை வழங்க கூடியவர்கள் ராஜபக்ஷகுடும்பத்தினர்மட்டுமே. ஆனால், ஞானசார தேரர் இப்போது கட்டளை பிறப்பித் துள்ளார். அப்படியாயின் இதனது மர்மம் என்னவென்று புரிந்து கொள்ள முடிகின்றது.

அதேபோன்று கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சவுதி அரசு வழங்கிய வீடுகளை முஸ்லிம்களுக்கு வழங்கக்கூடாது என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க கூறியதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இதெல்லாம் இன வாதிகளின் செயற்பாடு என்பதை மறந்து விட முடியாது. அண்மையில் கிராண்ட்பாஸ் பள்ளி வாசல் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல் தொடர்பில் பொலிஸ்மா அதிபருக்கு ஆதாரங்களுடன் ஒப்படைக்கப்பட்ட சாட்சிகள் குறித்து இதுவரைக்கும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அப்பிரதேசத்தை சாராத சிலர் வந்து இந்த தாக்குதலை நடத்தியுள்ளனர். பொலிஸாரின் பாதுகாப்பிலேயே அதனை செய்துள்ளனர் என்பதற்கான வீடியோ காட்சிகள் வெளியாகி உள்ளன.

இவ்வாறான செயல்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. அவற்றை தொடர விடாது செய்வதற்கு மாகாண ஆட்சி மாற்றம் ஒன்றினை வடமேல் மாகாணத்தில் செய்ய வேண்டும் என்றும் அசாத் சாலி கூறினார். (அ-2)

## திரையரங்குகளில் சிறுவர்

# துஷ்பிரயோகங்களை தடுக்க நடவடிக்கை

(கொழும்பு)

திரையரங்குகளில் சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுக்க புதிய சட்டங்களைக் கொண்டு வர நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் இலங்கையில் திரையரங்குகளில் அமைக்கப்பட்டுள்ள பெட்டி ஆசனங்களில் தமது காதலர்களுடன் இளம் வயது யுவதிகள் (16 வயதுக்குட்பட்டவர்கள்) வருவதால் அதனை தடுக்க புதிய சட்டங்களை கொண்டு வர சிறுவர் மற்றும் பெண்கள் தொடர்பான பொலிஸ் பணியகம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை என்பன நடவடிக்கை எடுத்து வருகின்றன.

பொலிஸ், சிறுவர் மற்றும் பெண்கள் பணியகம், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை என்பன இந்த விடயம் தொடர்பில் கருத்து பரிமாற்றங்களை மேற்கொண்டு வருகின்றன.

கம்பளை திரையரங்கொன்றில் இளம் யுவதி, காதலரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்தை கருத்தில் கொண்டு இரண்டுதரப்பும் இந்தப்புதிய சட்டத்தை கொண்டு வருவது தொடர்பில் கவனம் செலுத்தி வருவதாக சிறுவர் மற்றும் பெண்கள் தொடர்பான பொலிஸ் பணியகத்தின் பணிப்பாளர் ஜயந்த விக்ரமசிங்க தெரிவித்தார்.

தற்போதுதிரையரங்குகளில்உள்ள பெட்டி ஆசனங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகிறது என்றும் அவர் கூறினார். (அ-2)

# சொத்து விபரங்களை வெளியிட வேண்டும்

## வேட்பாளர்களுக்கு அறிவுறுத்தல்

(கொழும்பு)

சொத்து விபரங்களை வெளியிடாத வேட்பாளர்களுக்கு எதிராக வழக்குத்தொடரவுள்ளதாக தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

வடமேல், மத்திய மற்றும் வடக்கு மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு எதிராக இவ்வாறு வழக்குத் தொடரப்படவுள்ளது.

மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 7 ஆம் திகதி வரையில் சொத்து விபரங்களை வெளியிட சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது.

குறித்த காலப்பகுதியில் சொத்து விபரங்களை வெளியிடாதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

மாவட்ட கச்சேரிகளில் சொத்து விபரங்களை வேட்பாளர்கள் ஒப்படைக்க முடியும். எனினும் பெரும் எண்ணிக்கையிலான வேட்பாளர்கள் சொத்து விபரங்களை வெளியிடவில்லை.

தேர்தல் சட்டத்தை பின்பற்றாதவர்களுக்கு எதிராக எவ்வாறான நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனை ஏற்கனவே பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (அ-2)

# யுத்தக்குற்ற தகவல்களை வழங்கியவர்கள் யாவர்?

## நவிப்பிள்ளையிடம் கேட்குமாம் அரசு

இலங்கை இராணுவத்தினரின் யுத்தக்குற்றங்கள் தொடர்பில் ஜெனீவா மனித உரிமைகள் பேரவைக்குத் தகவல்கள் வழங்கியதாகக் கூறப்படுவோரின் விபரங்களை வெளியிட வேண்டுமென மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையை அரசாங்கம் கோரவுள்ளதாகத் தெரியவருகிறது.

இலங்கைக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள எந்தக்குற்றச்சாட்டையும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்பதை நவநீதம்பிள்ளையிடம் அரசாங்கம் திட்டவட்டமாக கூறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மக்களைப் பாதுகாக்கும் மனிதாபிமான ரீதியான இராணுவத்தின் செயற்பாடுகள் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ முப்படைகளின் பிரதானி ஜெனரல் ஜகத் ஜயசூரிய, இராணுவத்தளபதி தயாரத்னாயக்க ஆகியோர் நவிப்பிள்ளையிடம் விரிவாக விளக்கவுள்ளனர் என்றும் கூறப்படுகிறது. (அ-2)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

08.2013 26

- ★1795 - திருகோணமலையின் பிரெடரிக் கோட்டையை ஸ்டுவேர்ட் தலைமையிலான பிரித்தானியப் படையினர் ஒல்லாந்தரிடம் இருந்து கைப்பற்றினர்.
- ★1914 - முதலாம் உலகப் போர்: ஜேர்மனிப் படைகள் ரஷ்யாவை டனென்பேர்க் போரில் தோற்கடித்தன.
- ★1920 - ஐக்கிய அமெரிக்காவில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.
- ★1942 - உக்ரைனில் சோட்கிவ் என்ற இடத்தில் நாசி ஜேர்மனியர் காலை 2.30 மணிக்கு யூதர்களை அவர்களின் வீடுகளில் இருந்து வெளியகற்றி குழந்தைகள், நோயாளிகள் உட்பட 500 பேரை கொன்று குவித்தனர்.
- ★1957 - கண்டம் விட்டுக் கண்டம் பாயும் நீண்டதூர ஏவுகணையைத் தாம் சில நாட்களுக்கு முன் பரிசோதித்ததாக சோவியத் ஒன்றியம் அறிவித்தது.
- ★1972 - 22ஆவது ஒலிம்பிக் போட்டிகள் ஜேர்மனி, மியூனிக்கில் ஆரம்பமானது.
- ★1978 - முதலாவது அருளப்பர் சின்னப்பர் பாப்பரசராக பதவியேற்றார்.
- ★1978 - முதலாவது ஜேர்மனிய விண்வெளி வீரர் சோயூஸ் விண்கலத்தில் விண்ணுக்குப் பயணமானார்.

**பிறப்புக்கள்**

- ★1880 - கியோம் அப்போலினேர், பிரெஞ்சு எழுத்தாளர் (இ. 1918)
- ★1883 - வி. கல்யாணசுந்தரனார், தமிழறிஞர் (இ. 1953)
- ★**1910 - அன்னை தெரேசா, அல்பேனிய உரோமன் கத்தோலிக்க அருட் சகோதரி, நோபல் பரிசு பெற்றவர் (இ. 1997)**
- ★1933 - வி. தெட்சணாமூர்த்தி, ஈழத்து தவில் கலைஞர் (இ. 1978)
- ★1934 - ஏ. ஜே. கனகரட்னா, ஈழத்து இலக்கியவாதி (இ. 2006)
- ★1956 - மேனகா காந்தி, இந்திய அரசியல்வாதி

### அன்னை தெரேசா



அன்னை தெரேசா 1910 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி பிறந்தார். இவர் அல்பேனியா நாட்டைப் பூர்வீகமாகக் கொண்டவரும் இந்திய குடியுரிமை பெற்ற உரோமன் கத்தோலிக்க அருட்சகோதரியும் ஆவார்.

1950 ஆம் ஆண்டு, இந்தியாவின் கொல்கத்தாவில் பிறர் அன்பின் பணியாளர் என்ற கத்தோலிக்க துறவற சபையினை நிறுவினார். நாற்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக ஏழைஎளியோர்களுக்கும், நோய்வாய்ப்பட்டோருக்கும், அநாதைகளுக்கும், இறக்கும் தறுவாயிலிருப்போருக்கும் தொண்டாற்றியவர் இவர். முதலில் இந்தியா முழுவதும் பின்னர் வெளிநாடுகளுக்கும் பிறர் அன்பின் பணியாளர் சபையினை நிறுவினார்.

1970 ஆம் ஆண்டுக்குள் இவரை சிறந்த சமூக சேவகர் எனவும், ஏழைகளுக்கும் ஆதரவற்றோருக்கும் பரிந்து பேசுபவர் என்றும் உலகம் முழுவதும் புகழப்பட்டார்.

இவர் 1979 இல் அமைதிக்கான நோபல் பரிசினையும், 1980 இல் இந்தியாவின் சிறந்த குடிமக்கள் விருதான பாரத ரத்னா விருதினையும் பெற்றார். அன்னை தெரேசாவின் பிறர் அன்பின் பணியாளர் சபை அவரது இறப்பின் போது 123 நாடுகளில் 610 தொண்டு நிறுவனங்களை இயக்கிக்கொண்டிருந்தது. இதில் எய்ட்ஸ், தொழு நோய் மற்றும் காசநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நல்வாழ்வு மையங்கள், இலவச உணவு வழங்குமிடங்கள், குழந்தைகள் மற்றும் குடும்பத்திற்கான ஆலோசனைத் திட்டங்கள், அநாதை இல்லங்கள், பாடசாலைகள் ஆகியவை அடங்கும்.

பல்வேறு நபர்கள், அரசுகள் மற்றும் அமைப்புகள் என பலர் இவரை புகழ்ந்து வந்தாலும், பலவிதமான விமர்சனங்களையும் இவர் சந்தித்தார். இவரின் இறப்புக்குப் பின் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பரால் முக்திபேறு அடைந்தவராக அறிவிக்கப்பட்டு கொல்கத்தாவின் அருளாளர் தெரேசா என்று பட்டம் சூட்டப்பட்டார். இவர் 1997 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 5 ஆம் திகதி இறைபதம் எய்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்தியா-சீனா இடையே

# நவம்பரில் கூட்டுப்பயிற்சி

(புதுடில்லி)

இந்தியா- சீனா இருநாட்டு இராணுவ வீரர்களின் கூட்டுப்பயிற்சி 5 ஆண்டுகளுக்கு பின் மீண்டும் ஆரம்பமாகிறது.

இரு நாடுகளுக்கும் இடையே எல்லைப் பகுதியில் பதற்றம் நீடித்திருக்கும் அதே வேளையில்,பயங்கரவாதத்திற்கு எதிராக இந்தியா - சீனா ஆகியவற்றைச் சேர்ந்த இராணுவ வீரர்கள் பங்கேற்கும் கூட்டுப் பயிற்சி எதிர்வரும் நவம்பர் மாதம் 4ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை சீனாவிலுள்ள செங்டு மாகாணத்தில் நடைபெறவுள்ளது.

இந்தியா - சீனா ஆகிய நாடுகளுக்கிடையிலான இராணுவ கூட்டுப் பயிற்சிக்கு கடந்த 2007ஆம் ஆண்டு ஏற்பாடு செய்யப்பட்டது.

இதன் தொடராக கூட்டுப்பயிற்சிகள் நடைபெற்று வந்த நிலையில் 2010 ஆம் ஆண்டு இந்திய இராணுவ கொமாண்டர் ஒருவருக்கு விசா வழங்க சீனா மறுத்து விட்டது.

இதைத் தொடர்ந்து, சீனாவுடனான கூட்டுப் பயிற்சிக்கு இந்திய அரசு தடை விதித்தது.

மீண்டும் 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற பேச்சுவார்த்தையை அடுத்து இரு நாடுகளும் மீண்டும் ஒன்றிணைந்து தரைப் படை, கப்பற்படை, விமானப்படை வீரர்களுக்கான கூட்டுப் பயிற்சியில் ஈடுபடுவது என்று முடிவு செய்தன.

இதன்படி ஐ.நா. சபையின் வழிகாட்டி நெறிகளுக்கு உட்பட்டு, இரு நாட்டு இராணுவ வீரர்களும் ஒத்திகை பயிற்சி செய்வார்கள்.

(அ-2)




# துனிசிய அரசாங்கத்தை எதிர்த்து பொதுமக்கள் போராட்டம்

## ஒரு வார காலத்திற்கு ஊர்வலம்

**(துனிஸ்)**

**துனிசிய இஸ்லாமியத் தீவிரவாத கொள்கைகளையுடைய ஆளும் கட்சியை எதிர்த்து பொது மக்கள் ஒரு வார கால போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.**

ஆளும் கட்சியை எதிர்த்து ஒரு வாரப் போராட்டத்தை நேற்று முன்தினம் அங்குள்ள போராட்டக்காரர்கள் ஆரம்பித்தனர்.

துனிசியாவின் தேசியக்கொடியை உடலில் போர்த்திக்கொண்டு அந்நாட்டின் தேசிய கீதத்தைப் பாடிக்கொண்டு ஆயிரக்கணக்கான மக்கள் இந்த ஊர்வலத்தில் பங்கேற்றனர்.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூட்டத்தினரிடையே உரையாற்றினார்கள். ஆளும் கட்சியை பதவி விலகக்கூறி கோஷங்களை எழுப்பியபடி சென்ற மக்களின் எண்ணிக்கை 60 ஆயிரம் என ஊர்வலத்தின் ஒருங்கிணைப்பாளர்கள் கூறினர். ஆனால், 10 ஆயிரம் என பொலிஸ் தரப்பில் கூறப்பட்டது.

அரசை வெளியேற்றுவதற்கான வாரம் என்று இதனைக் குறிப்பிட்ட போராட்டக்காரர்கள், ஏழு நாட்களுக்கு இத்தகைய ஊர்வலங்கள் தொடர்ந்து நடைபெறும் என்று குறிப்பிட்டனர். அவமானம் நிறைந்த இந்த அரசாங்கத்தை நாம் வீழ்த்தவேண்டும்.

ஏனெனில் அரசியல் படுகொலைகள், பயங்கரவாதம், அரசியல் செயற்பாட்டாளர்கள் துன்புறுத்தல் மற்றும் மக்களின் வறுமை போன்றவையே இங்குள்ளது என்று மோங்கிரஹோயி என்ற எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் தன்னுடைய உரையில் குறிப்பிட்டார்.

அரசு அலுவலகங்கள் நிறைந்துள்ள கஸ்பா பகுதியை நாம் விரைவில் முற்றுகை இடுவோம் என்று அவர் மேலும் கூறினார். அரசைப் பதவி விலகச்சொல்லும் இசை நாடகங்கள் நேற்று முன்தினம் மாலை கலைஞர்களால் நடத்தப்பட்டன. இந்த மாதமே, இதுபோல் இரண்டு போராட்டங்கள் ஆர்ப்பாட்டக்காரர்களால் நடத்தப்பட்டுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

வடக்கு ஆபிரிக்காவைச் சேர்ந்த துனிசியா நாட்டில் கடந்த மாதம் மதச்சார்பற்ற அரசியல்வாதியான முகமது பிராமி படுகொலை செய்யப்பட்டார்.

கடந்த ஆறு மாதங்களுக்குள் இந்த வகையில் நடைபெற்ற இரண்டாவது படுகொலையான இந்த சம்பவம், துனிசியா அரசுக்கு கடும் எதிர்ப்புகளைப் பெற்றுக் கொடுத்துள்ளது. இது, அந்நாட்டில் கடந்த ஒரு மாதமாக அரசியல் தேக்கத்தை ஏற்படுத்தியிருந்துள்ளது.

(அ-2)

# நைஜீரிய கிராமத்திற்குள் தீவிரவாதிகள் தாண்டவம்

## 44 பேருக்கு கழுத்தறுப்பு

(நைஜீரியா)

வடகிழக்கு நைஜீரியாவின் கிராமத்துக்குள் புகுந்த போகோ ஹரம் தீவிரவாதிகள் கிராமத்தினர் 44 பேரின் கழுத்தை அறுத்து கொடூரமாக கொலை செய்துள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நைஜீரியாவில் இஸ்லாமிய சட்ட திட்டங்களுக்கு உட்பட்ட ஆட்சியை ஏற்படுத்த வேண்டும் என்று கூறிவரும் குறித்த தீவிரவாதிகள், அவ்வப்போது கிராமங்களுக்குள் புகுந்து அதிரடி தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

அப்பகுதியில் தீவிரவாதிகளின் முகாம்கள் பல இருப்பதாகவும், 2010 ஆம் ஆண்டு முதல் இதுவரை சுமார் ஆயிரத்து 700 பேர் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை வடகிழக்கு நைஜீரியாவில் உள்ள போர்னோ மாநிலம் தும்பா கிராமத்திற்குள் புகுந்த தீவிரவாதிகள் அப்பாவி கிராம மக்கள் 44 பேரின் கழுத்தை அறுத்து கொடூரமான முறையில் கொன்று குவித்தனர்.



துப்பாக்கிகளால் சுட்டால் பொலிஸாரின் காதுகளில் கேட்டுவிடும் என்று நினைத்தே மக்களின் கழுத்தை அறுத்துக் கொன்றுள்ளனர் என்று உள்ளூர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொல்லப்பட்டவர்களில் பலரது கண்கள் தோண்டப்பட்டு பிணங்கள் கொடூரமான முறையில் காட்சியளிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

சம்பவம் நடைபெற்ற இடம் மிகவும் குக்கிராமம் என்பதாலும், அப்பகுதிக்குச் செல்லும் தொலைபேசி இணைப்புகள் சில நாட்களாக துண்டிக்கப்பட்டிருந்ததாலும் இச்சம்பவம் பற்றிய தகவல் தாமதமாக வெளியிடப் படுவதாகவும் அவர் கூறினார்.

(அ-2)

# அயல் நாடுகளுடன் ஒத்துப்போனால் நாடு அபிவிருத்தி அடைந்து விடும்

## ஆசிப் அலி சர்தாரி அறிவுரை



இந்தியா-பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு இடையிலான உறவுகளை மேம்படுத்துவதற்கு பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பதுதான் ஒரே வழி என பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் புதிய ஜனாதிபதியாக மம்னூன் ஹுசேன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து ஜனாதிபதி சர்தாரி எதிர்வரும் செப்டெம்பர் 8ஆம் திகதி பதவி விலகவுள்ள நிலையில் விருந்தளிப்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியா, பாகிஸ்தான் இடையிலான உறவுகளை மேம்படுத்த இரு நாடுகளுக்கும் இடையே இடைநிறுத்தப்பட்ட பேச்சுவார்த்தையை விரைவில் ஆரம்பிப்பதுதான் வழியாகும். நிலுவையில் உள்ள பல்வேறு பிரச்சினைகளைத் தீர்ப்பதன் மூலம் இந்தியாவுடனான இரு தரப்பு உறவுகளையும் நட்பு மற்றும் ஒத்துழைப்பு ரீதியிலான தோழமையாக மாற்ற பாகிஸ்தான் விரும்புகிறது.

எனினும், எல்லைப் பகுதியில் அண்மைக் காலமாக நிகழ்ந்துவரும் சம்பவங்களால் அமைதியை ஏற்படுத்தும் முயற்சிகள் பாதிக்கப்படாமல் இருப்பதை இரு தரப்புகளும் உறுதிப் படுத்த வேண்டும்.

இந்தியாவுடன் அமைதியான உறவுகளைக் கொண்டிருக்க பிரதமர் நவாஸ் ஷெரீப் உறுதிபூண்டுள்ளார்.

தமது அரசு தொடர்ந்து கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ளும் என்று அவர் தெரிவித்துள்ளார். அண்டை நாடுகளுடன் அமைதியை ஏற்படுத்தினால் மட்டுமே பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பின் பலன்களைப் பெற முடியும்.

ஆப்கானிஸ்தானில் இருந்து



வெளிநாட்டுப் படைகள் வெளியேற உள்ள நிலையில், அந்நாட்டில் மேற்கொள்ளப்படும் ஆட்சி மாற்ற நடவடிக்கைகளை பாகிஸ்தான் ஆதரிக்கும். ஆப்கானில் நல்லிணக்கம் ஏற்படுவதற்கு நம்மாலான அனைத்து ஆதரவையும் அளிப்போம்.

பாகிஸ்தானில் ஜனநாயகம் தழைத்தோங்கி வருகிறது. இங்கு முதன் முறையாக, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஜனாதிபதியிடமிருந்து, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றொரு ஜனாதிபதி பதவிப் பொறுப்புகளைப் பெற்றுக் கொள்ளவிருக்கிறார் என்றார்.

(அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கு வந்தும் எம்மால் தகவல் சேகரிக்க முடியும்

## இதை நிரூபிக்கவே நவிபிள்ளை வந்துள்ளார் என்கிறார் அநுரகுமார எம்.பி.

(கொழும்பு)

**ஐக்கிய நாடுகள் சபை என்பது ஒரு பக்கச்சார்பான நிறுவனம் என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபை அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட மேற்குலக நாடுகளின் நிகழ்ச்சி நிரல்களுக்கு ஏற்ப செயற்படுவதாக மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.**

பத்தரமுல்ல, பெலவத்த கட்சி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் கட்சி அலுவலகத்தில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நவநீதம்பிள்ளை இலங்கை வந்துள்ளமையின் காரணமாக இன்று இலங்கையில் ஒருவிவாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அதனோடு இணைந்த அனைத்து உலக அமைப்புக் களுடன் இணைந்து செயற்பட வேண்டும் என்ற கொள்கையை நாம் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் ஐக்கிய நாடுகள் சபை பக்கச்சார்பாக செயற்படுகிறது.

இதனையே நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் ஐ.நா. சபை செய்யும் என்பதற்கு பல உதாரணங்கள் உள்ளன. அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் மற்றும் இந்தியா போன்ற நாடுகளின் நிகழ்ச்சி நிரல்களை செயற்படுத்தும் வகையில் தற்போதைய அரசாங்கம் செயற்படுகிறது.

தங்களுடைய அதிகாரத்தை பெற்றுக் கொண்டு அதற்காக மனித உரிமை, ஜனநாயகம்போன்றவற்றிற்கு கடும் அச்சுறுத்தல்களை ஏற்படுத்தல் என்பன நடைபெறுகின்றன.

கடந்த காலங்களில் பல ஊடகவியலாளர் கொல்லப்பட்டு ஊடக நிறுவனங்கள் எரிக்கப்பட்டு, ஊடகவியலாளர்கள்மீது கத்தி வெட்டு நடத்தப்பட்டு, பல அச்சுறுத்தல் சம்பவங்கள் நடத்தப்பட்டுள்ளன.

ஆனால் அதனுடன் தொடர்புடைய நபர்கள் கைது செய்யப்படவோ தண்டிக்கப்படவோ இல்லை. அதற்கான காரணம் அரசாங்கத்தின்பின்புல ஆலோசனையிலேயே இவை இடம்பெற்றுள்ளமை ஆகும்.

அரசியல்வாதிகளுக்கு அழுத்தம், எச்சரிக்கை விடுக்கப்படுகின்றது. வடக்கிற்கு சென்று அரசியல் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அரசியல் செய்த லலித், குகன் கடத்தப்பட்டனர். இரண்டு வருடங்களாகியும் இதுவரை தகவல்கள் இல்லை.

அசாத்சாலி கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டதன் பின்னணியிலும் அரசாங்கத்தின் அரசியல் தேவையுள்ளது. அது மட்டுமல்லாது ஜனநாயக ரீதியில் நாட்டில் ஆர்ப்பாட்டம் செய்வதற்கு கூட இடமில்லை. இராணுவத்தினர் , பொலிஸார் தாக்குகின்றனர். துப்பாக்கி சூடு நடத்துகின்றனர்.

இந்த அரசாங்கம் மனித உரிமை, ஜனநாயகம் என்பவற்றை கட்டியெழுப்புவதற்கு பதிலாக ஏகாதிபத்திய ஆட்சியை நடத்துகிறது.

தன்னை ஏகாதிபதி என சொல்வது ஏன் என மஹிந்த ராஜபக்ஷ கேட்கிறார். நல்ல குழந்தை போல அவர் பேசுகின்றார்.

ஊடகங்களுக்கு தீ வைப்பதென்றால் ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்படுகிறார்கள் என்றால் மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்படுகின்றது என்றால் சிவில் செயற்பட்டாளர்கள் கடத்தப்படுகின்றார்கள் என்றால் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது தாக்குதல் நடத்துவது என்றால் கனவு அமைச்சரவை உருவாக்கி இருக்கிறார்கள் என்றால் ஊடகவியலாளர்கள் எழுத முடியாதளவிற்கு பயப்பட்டுள்ளனர் என்றால் இங்கு நடப்பது ஏகாதிபத்திய ஆட்சி தான்.

ஊடகவியலாளர் மந்தனா ஸ்மைல் வீட்டின் மீது இடம்பெற்றது கொள்ளைச் சம்பவமா என்பதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. கொள்ளைச் சம்பவம் இடம்பெறுவதற்கு முன்னரும் கொள்ளைச்சம்பவம் இடம்பெறும் போதும் அங்கு நடைபெற்ற விடயங்கள் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளன.

இது குறித்து தெளிவுபடுத்த வேண்டியது அரசாங்கத்தின் கடமை ஆகும்.

நவநீதம்பிள்ளை இலங்கை வரும்போது மஹிந்த ராஜபக்ஷ வெளிநாடு சென்றுள்ளார். இதன்மூலம் அரசாங்கம் பயாஸ்கோப் காட்டுகிறது.

சில சண்டியர்கள் எதிரிகள் வரும் போது மறைந்திருப்பர். பின்னர் முகங் காட்டுவர். இது இராஜதந்திர நடவடிக்கை அல்ல. மெதமுலன நபரின் வைராக்கியத்தை போன்ற பயாஸ்கோப் அதனை மக்கள் விளங்கிக் கொள்வர்.

நாட்டில் மனித உரிமை மீறல்கள் நடந்துள்ளன என நாங்கள் நினைக்கிறோம். அரசாங்கம் அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ள எடுத்த சில நடவடிக்கைகள் மூலம் அது நடந்துள்ளது.

நவநீதம்பிள்ளை இலங்கைக்கு வந்து அனைத்து தகவல்களையும் திரட்டிச் செல்வார் என நினைத்தால் அது தவறு. இலங்கை வர முன்பே அவரிடம் பல தகவல்கள் உள்ளன.

தகவல் பெற்றுக் கொள்ளும் வலையமைப்பு அவரிடம் உள்ளது. அங்கிருந்து மட்டுமல்ல இங்கு வந்தும் தகவல் சேகரிப்போம் என்பதை காட்டுவதற்கே அவர் இங்கு வந்துள்ளார்.

ரத்துபஸ்வல சம்பவம், ஊடகவியலாளர் தாக்கப்படுவது ,வடக்கு நிலைமை என அனைத்து தகவல்களையும் ஒரு வாரத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

இலங்கை நிறுவனங்களிடம் உள்ள தகவல்களை விடவும் அதிகமான தகவல்களை அவர் வைத்திருக்கிறார் என அநுர குமார திஸாநாயக்க மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# நேர்மையான பிரதிநிதிகளுக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும்

## ஐ.தே.க. முதன்மை வேட்பாளர் துவாரகேஸ்வரன் தெரிவிப்பு



வடக்கு மக்களுக்கு இன்றும் அடக்கு முறை நிலவி வருகின்றது. நாம் வாக்களிக்கும் பிரதிநிதிகள் நேர்மையானவர்களாகவும் கண்ணியமிக்கவர்களாகவும் இருக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் வடக்கு மாகாண சபை முதன்மை வேட்பாளர் தியாகராஜா துவாரகேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எவருடைய அழுத்தத்திற்காகவும் நாம் இத்தேர்தலில் போட்டியிடவில்லை. எமது மக்களின் விடிவிற்காகவே போட்டியிடுகின்றோம். வடக்கில் இன்றும் அடக்குமுறை நிலவி வருகின்றது.

நாம் வாக்களிக்க யோசிக்கின்ற பிரநிதிகள் நேர்மையானவர்களாகவும் கண்ணியமுடையவர்களாகவும் இருக்க வேண்டும். யாழ்ப்பாணம் என்றால் கொழும்பில் தனியொரு மதிப்பு உண்டு.

மறைந்த ரவிராஜ், மகேஸ்வரன் போன்று தமிழ்மக்களுக்காக உழைத்தவர்களை வடக்கு மக்கள் தெரிவு செய்ய வேண்டும்.கடந்த கால வரலாறுத் தவறுகளை இம்முறையும் தமிழ் மக்கள் விடமாட்டார்கள் என நான் நம்புகின்றேன்.

எமது நிலங்களுக்கு சென்று சுதந்திரமாக பிரசாரம் செய்ய முடியாத நிலையில் நாம் உள்ளோம்.

யாருடைய கட்சிக்கும் நான் சேறு பூசவில்லை. உண்மையைதான் நான் கூறுகின்றேன். எதிர்வரும் திங்கட்கிழமை வடக்கில் தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்வதற்காக டி.எம்.சுவாமிநாதன், ரவிகருணாநாயக்க ஆகியோர் வருகைதரவுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார். (அ-4)

# சிறைச்சாலை உத்தியோகத்தருக்கு பற்றாக்குறை நிலவுகின்றது

(கொழும்பு)

சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை காரணமாக, வழக்கு விசாரணைகளுக்காக நீதிமன்றங்களில் சந்தேக நபர்களை ஆஜர்படுத்துவதில் தடை ஏற்பட் டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் குறிப்பிடுகின்றது.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் வழக்கு விசாரணைகளை ஒத்திவைக்க நேரிடுவதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் சந்ரரத்ன பல்லேகம தெரிவித்தார்.

இது தொடர்பில் நீதிவான்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் தமக்கு முறைப்பாடு செய்துள்ளதாக அவர் கூறினார்.

சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் 785 பேருக்கு பற்றாக்குறை நிலவுவதாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் சுட்டிக்காட்டினார்.

சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு பற்றாக்குறை காணப்படுவதால் கைதிகளை சிறைச்சாலைகளில் இருந்து வெளியே அழைத்துச் செல்லும் போது பாதுகாப்பு தொடர்பில் சிக்கல் ஏற்படுவதாகவும் சந்ரரத்ன பல்லேகம மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# வர்த்தக உறவுகளை வலுப்படுத்த பெலரஸ் பறந்தார் மஹிந்த

ஜனாதிபதி மகிந்த மகிந்த ராஜபக்ச நேற்று காலை பெலாரஸ் நாட்டுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்தள்ளது.

ஐ.நா மனிதவுரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை நேற்று காலை இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட நிலையில் அவர் அதற்கு முன்னதாக பெலாரஸ் நாட்டுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மூன்று நாட்கள் பெலாரசில் தங்கியிருப்பார். இதன்போது அந்நாட்டின் ஜனாதிபதி அலெக்சாண்டர்லுகாசென்கோ, பிரதமர்மிகையில்மியாஸ்னிகோவிச், பெலாரஸ் தேசிய சட்டசபையின் தலைவர் அனரோலி ருபினோவ் உள்ளிட்டோரைச் சந்தித்து இருதரப்புப் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

முன்னாள் சோவியத் குடியரசான பெலாரஸ் ஜனாதிபதி உள்ளிட்ட எதிர்க்கட்சி செயற்பாட்டாளர்களை சிறையில் அடைத்தல் மற்றும் மாற்றுக் கருத்தரையோருக்கு எதிராக மேற்கொள்ளும் நடவடிக்கைகளால் பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் அதன் மீது தடைகளை விதிக்க வலியுறுத்தி வருகின்றன.

ஐரோப்பிய நாடுகளின் தடைகளை எதிர்கொண்டுள்ள பெலாரஸ் நாட்டுடன் வர்த்தக உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளவே மஹிந்த ராஜபக்ச இந்த பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

நவநீதம்பிள்ளைக்கும் மஹிந்த ராஜபக்சவு க்கும் இடையிலான சந்திப்பு எதிர்வரும் 30ஆம் திகதி இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# நீதிமன்ற உத்தரவு கிடைத்ததும் சந்தேக நபர்கள் கைதாவர்

(கொழும்பு)

வெலிவேரிய பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூடு, மூவர் உயிரிழப்பு மற்றும் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையோர் எனக் கருதப்படும் சந்தேக நபர்களைக் கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டால் அவர்களைக் கைது செய்து நீதிமன்றத்தின் முன்னிறுத்த பொலிஸார் தயாராகவுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

சுத்தமான குடிநீர் கேட்டு குறித்த பிரதேசவாசிகள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் மூவர் உயிரிழந்ததுடன் பலர் காயமடைந்திருந்தனர்.

இதேவேளை பொது மக்கள் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளுமாறு உத்தரவிட்ட இலங்கை இராணுவத்தின் பிரிகேடியர் தரத்தைச் சேர்ந்த ஒருவர் குறித்தும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட இராணுவ வீரர்கள் தொடர்பிலும் தற்போது தகவல்கள் திரட்டப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது தங்களால் நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாமல் பொலிஸாரே இராணுவத்தினரை அழைத்தனரா என்பது குறித்த விசாரணைகளும் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன.

இது இவ்வாறிருக்க கம்பஹா பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு தெரியாத நிலையிலேயே இராணுவத்தினர் சம்பவ இடத்துக்கு சென்றனர் எனக் கூறப்படுகிறது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானாலய நூலக திறப்பும் கண்காட்சியும்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை விநாயகர் முதலியார் வீதியில் புதிதாக 90 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட ஞானாலயம் நூலகம் திறப்பு விழாவும் கண்காட்சியும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ்விழாவின் ஆசியுரைகளை வல்வெட்டித்துறை சிவன்கோயில் பிரதமகுரு சிவ ஸ்ரீ பரமேஸ்வர மனோகரக் குருக்கள், பருத்தித்துறை அஞ்சலியக் அருட்தந்தை சூ.டேமியன் அடிகளார், பருத்தித்துறைப் பள்ளிவாசல் மௌலவி முகமட் அஜ்மல் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து வாழ்த்துரைகளை வடமா காண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன், வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் க.ஜெயசீலன், வைத்திய கலாநிதி எம்.கே.முருகானந்தம், வாழ்வகத் தலைவர் ஆ.ரவீந்திரன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

சிறப்புரைகளை உளநல மருத்துவ நிபுணர் எஸ்.சிவதாஸ் மகிழ்வுடன் வாழ்வு எனும் பொருளிலும் பேராசிரியர் மா.நடராஜசுந்தரம் காலமும் வாழ்வும் எனும் பொருளிலும் பேராசிரியர் நா.ஞானகுமரன் தியானமும் வாழ்வும் எனும் பொருளிலும் ஓய்வு பெற்ற நூலகர் க.சௌந்தரராஜன் நூலகமும் வாழ்வும் எனும் பொருளிலும் பா.அகிலன் கலையும் வாழ்வும் எனும் பொருளிலும் உரைகளை ஆற்றவுள்ளனர். (அ-19)




# இ.போ.ச.நடத்துநர் மீது யாழில் தாக்குதல்; நடத்துநர்கள், சாரதிகள் பணிப்புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

**இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்து ஒன்றின் நடத்துநர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தையடுத்து அரசாங்க பேருந்துக்களின் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

இதனால் யாழ்.மாவட்டத்திலிருந்து வெளி மாவட்டத்திற்கு பயணங்களை மேற்கொள்வதற்காக வருகை தந்திருந்த பயணிகள் பல மணிநேரம் காத்திருந்துவிட்டு ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

இந்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அக்கரைப்பற்றிலிருந்து யாழ்.மாவட்டத்திற்கு பயணித்து யாழ்.பேருந்து நிலையத்தில் தரித்து நின்ற இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்தில் உறங்கி கொண்டிருந்த நடத்துநர் ஒருவர் மீது சுமார் 5 பேர் கொண்ட குழு நேற்று அதிகாலை 5.30 மணியளவில் யாழ். பேருந்து நிலையத்தில் வைத்து தாக்குதலை மேற்கொண்டது.

இதன்போது யாழ்.பேருந்து நிலையத்திற்கு வருகை தந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தாக்குதலை தடுக்க முற்பட்டார்.

இதனையடுத்து தாக்குதலை மேற்கொண்ட குழுவினர் தப்பித்து சென்றுள்ளனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தையடுத்து அரச பேருந்து சாரதிகள் மற்றும் நடத்துநர்கள், பணியாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் படியும் நடத்துநர் மீது தாக்குதல் மேற்கொண்ட குழுவினரை கைது செய்யுமாறு வலியுறுத்தியும் அரச பேருந்துக்களின் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள், பணியாளர்கள் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.



அரச பேருந்துக்களை பேருந்து நிலையத்தின் பிரதான வாயில் (வெளியில் செல்லும்) ஒன்றன் பின் ஒன்றாக நிறுத்தி வைத்தும் பேருந்துக்களில் பயணிகள் ஏறி அமர்ந்திருக்கவிடாமல் கதவுகளைப் பூட்டியும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இதுதவிர யாழ்.பேருந்து நிலையத்தில் ஒன்று கூடிய பணியாளர்கள் தாக்குதல் தாரிகளை கைது செய்யும் வரை போராட்டம் தொடரும் எனவும் எச்சரிக்கை விடுத்தனர்.

இதனால் நேற்று அதிகாலை முதல் நண்பகல் வரை வெளி மாவட்டங்களுக்கு செல்வதற்காக காத்திருந்த பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

இதேவேளை, மேற்படி தாக்குதல் சம்பவம் தனியார் பேருந்து துறைச்சார்ந்தவர்களின் திட்டமிட்ட தாக்குதல் எனவும் குறித்த நடத்துநர் மீது தாக்குதல் மேற்கொண்டவர்களில் சிலர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் தாக்குதலுக்குள்ளான இணுவிலைச் சேர்ந்த ஆர்.இரத்னராஜ் என்பவர் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ-6)




# தன்னார்வ தொண்டர்களை இணையுமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கை கொடுக்கும் நண்பர்கள் அமைப்பு வட பகுதியில் தொடர்ந்து அதிகரித்துவரும் தற்கொலைகளைக் கருத்தில் கொண்டு தனது நடவடிக்கைகளை விரிவாக்கத் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய வாரத்தில் ஒரு நாள் நான்கு மணி நேரம் சம்பளமின்றி பணியாற்ற முன்வரும் தன்னார்வத் தொண்டர்கள் யாழ். நகரில் நான்காம் குறுக்குத் தெரு 104 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள பணிமனையுடன் தொடர்பு கொள்ளலாம் என வடக்கு இணைப்பாளர் கே.கமலநாதன் அறிவித்துள்ளார்.

பாரிய மனக் கவலை,தளர்ச்சி, மன உளைச்சல், விரக்தி போன்ற பாதிப்புக்களுக்கு உள்ளாவோருக்கு இப் பணிமனையின் தன்னார்வத் தொண்டர்கள் உணர்வு ரீதியான ஆதரவை வழங்குகின்றனர். இவ் அமைப்பில் பணியாற்ற முன்வரும் தன்னார்வத் தொண்டர்கள் 021 2228117, 0773355173 என்னும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

புதிய தொண்டர்களுக்கான பயிற்சி நெறி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 6,7,8 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிகளை கொழும்பு சுமித்திரையோ நிலையத்திலிருந்து வருகை தரும் பயிற்றுநர்கள் மேற்கொள்வார்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-20)

## மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் காயம்!

(காரைநகர்)

காரைநகர் வலந்தலை சந்தியில் மோட்டார் சைக்கிள் துவிச்சக்கர வண்டியுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. காரைநகரிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் வலந்தலை சந்தியினால் திரும்பமுற்பட்ட துவிச்சக்கர வண்டியுடன் மோதியுள்ளது.

இதில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த ஆ.சிதம்பரநாதன் (வயது 38) என்பவர் காயங்களுக்குள்ளாகி காரைநகர் கிராமிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ-9-246)

# குஞ்சர்கடை பகுதி வீதியோரத்தில் வடிகான்களை அமைத்துத் தருக

(கரணவாய்)

கரணவாய் வாய்க்கால் தெருவில் அமைந்திருந்த வடிகான்கள் வீதி புனரமைப்பின் போது மூடப்பட்டதனால் கழிவுநீர் குடிமனைகளுக்குள் புகுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

முன்னர் மூத்தவிநாயகர் வீதியிலிருந்து குஞ்சர்கடைப் பகுதிவரை வீதியின் இரு மருங்கிலும் வடிகான்கள் அமைக்கப்படிருந்தன.

இவ் வடிகான்கள் வீதி அகலமாக்கப்பட்ட நிலையில் மூடப்பட்டுள்ளன.

ஆயினும் செப்பனிடப்பட்ட வீதியின் மருங்குகளில் வடிகான்கள் அமைக்கப்படவில்லை. இதனால் கழிவு நீரும் மழை நீரும் வழிந்தோடமுடியாமல் வீடுகள், பாடசாலைகள், ஆலயங்கள் போன்ற இடங்களுக்குள் பாய்கின்றன.

எனவே, மேற்படி பகுதிக்கு வடிகான்கள் அவசியமாகவுள்ளதனால் விரைவில் அமைத்து தருமாறு மக்கள் வேண்டுகோள்விடுத்துள்ளனர். (அ-9-60)

# அல்லாரை வீதியை புனரமைக்குக!

(சாவகச்சேரி)

மீசாலை பிரசேதத்திலுள்ள அல்லாரை வீதி நீண்டகாலமாக புனரமைப்புச் செய்யப்படவில்லையென பிரதேச மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

ஏ-9 வீதியிலிருந்து மீசாலை-கச்சாய் ஊடாக கொடிகாமம், மிருசுவில் போன்ற இடங்களுக்குச் செல்வதற்கான பிரதான வீதியாக அல்லாரை வீதி காணப்படுகின்றது.

சுமார் 3 கிலோ மீற்றர் தூரத்தை கொண்ட இவ்வீதி சாவகச்சேரி நகர சபைக்கும் பிரதேச சபைக்கும் சொந்தமானது.

இந்நிலையில், வீதி குன்றும் குழியுமாக போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையில் உள்ளதனால், வீதியைப் புனரமைக்குமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பருவ மழைகாலம் ஆரம்பிக்கவுள்ளதால், அதற்கு முன்னர் மேற்படி வீதியை செப்பனீடப்படாவிடின் போக்குவரத்து சிக்கல் ஏற்ப டும் என்பது சுட்டிக்காட்டத்தக்கது. (அ-9-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்கம் உள்ளவனாகவும் நல்லவனாகவும் உள்ளவன் எதைப்பற்றியும் கவலையோ அச்சமோ கொள்ளத் தேவையில்லை.

- கன்ஃபூஷியஸ்

வலம்புரி
T.P: 021 567 1530
website : www.valampurii.lk

# நல்லூர்க் கந்தனை சந்தித்தேன்

நல்லூர் கந்தப்பெருமானின் பெருந்திருவிழாவில் ஏகப்பட்ட அடியார் கூட்டம். காந்தம் இருக்குமிடம் நோக்கி இரும்பு கவரப்படுவது போல கந்தப் பெருமானின் திருவருள் பாயும் நல்லையம்பதியில் அடியார் கூட்டத்திற்கு குறையேதுமில்லை.

அதிலும் இந்த வருடம் எங்கள் இளைஞர்கள் முடிந்த அளவில், ஆலயச் சூழலில் ஆசாரத்தைப் பேணுவது கண்டு அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

எங்கள் இளைஞர்கள் மிகவும் நல்லவர்கள். பக்தி நிலைப்பட்டவர்கள். அவர்களுக்கான வழிப் படுத்தல்களும் ஒழுங்குபடுத்தல்களும் மந்தமாக இருக்கும்போது அவர்கள்தான் என்ன செய்ய முடியும்?

எங்கள் இளைஞர்களை உரிய முறையில் வழிப்படுத்தினால் - ஆலோசனை கூறினால் அவர்கள் அதனை செவ்வனே கடைப்பிடித்து ஒழுகுவார்கள் என்பதில் இரண்டாம் கருத்துக்கு இடமில்லை. அந்த வகையில் இந்த வருடம் நல்லூர் மஹோற்சவக் காலத்தில் எங்கள் இளைஞர்களின் பண்பாட்டுக்கோலங்கள் கண்டு பரவசமடையாமல் இருக்க முடியாது.

அந்த அளவிற்கு அவர்கள் பெருந்தன்மையோடு நடந்து கொள்கிறார்கள். நல்லதை பாராட்டுவதில் நாம் காட்டும் பின்னடிப்பும் எங்கள் இனத்தின் பலவீனங்களில் ஒன்று.

எனவே பலவீனக் கலைப்பு முக்கியமானது. அதன் அடிப்படையில் எங்கள் இளைஞர்கள் தொடர்ந்து ஆசாரத்தைப் பேணி, எங்கள் நல்லைக் கந்தனின் தெய்வீகச் சூழலுக்கு உதவவேண்டும் என்று கேட்டுக்கொள்வதுடன் அவர்களைப் பாராட்டிப் போற்றுவோம்.

அதே நேரம், நேற்றைய தினம் நல்லூர்க் கந்தப் பெருமானைச் சந்தித்தேன். என்னை அதட்டலாகப் பார்த்தான். கண்டறியாத தலையங்கமா எழுது கின்றாய் என்பதுபோல இருந்தது அந்தப் பார்வை யின் அர்த்தம்.

தயவோடு அவனை நோக்கினேன். அவன் சில குறிப்புக்களை உணர்த்தினான். அதிலொன்று,

நல்லூர்க் கந்தனின் ஆலயச் சூழலில் கையடக்கத் தொலைபேசியில் கதைத்துக்கொண்டே திரிவது தெய்வீகத்தன்மைக்கு அழகல்ல. கந்தனை வந்தனை செய்கின்ற ஒருசில மணித்தியாலங் களுக்கேனும் கையடக்க தொலைபேசியை கட் பண்ண முடியாத அளவில், நிலைமை இருக்குமா யின் மன அமைதி எங்ஙனம் ஏற்படும்?

எனவே ஆலயச் சூழலில் கையடக்கத் தொலை பேசியில் கதைப்பதை - கதைத்த வண்ணம் நடப்பதை கைவிடுங்கள் என்பதை அவன் பார்வையின் ஒரு கருத்து.

மற்றையது, ஆலயச் சூழலில் கதாப்பிரசங்கம், இசைக்கச்சேரி, கண்காட்சி,சொற்பொழிவு எனப் பல்வேறு சமய நிகழ்வுகள் நடைபெறுகின்றன. எங்கள் மண்ணின் கலைஞர்கள், அறிஞர்கள் தரும் இந்த அற்புதமான நிகழ்வுகளை காண்பதையும் கேட்பதையும் தவிர்த்துக் ஈர மண்ணிலிருந்து வீண்கதை கதைப்பது நியாயம் அல்லவல்லவோ? எனவே ஆலயச் சூழலில் நடைபெறும் இந் நிகழ்வு களை காண்பது எமது சிறார்களையும் திறமைப் படுத்தும்.

ஆகவே, நல்லூர் வரும் அடியார்களை இந்த நிகழ்ச்சிகளைப் பார்க்கும்படி கூறு என்பது முருகனின் பார்வையின் இரண்டாவது அர்த்தம்.

கந்தனைச் சந்தித்தபோது அவன் கூறியதை உங்களிடம் ஒப்புவித்துவிட்டேன். இனி நீங்களாச்சு - அவனாச்சு.

# ஆவணங்களைப் பரிசோதித்த அதிசயமான கொள்ளையர்கள்

## ஜே.வி.பி. கிண்டல்

ஊடகவியலாளர் மந்தனா இஸ்மையில் அபேவிக்ரமவின் வீட்டில் கொள்ளையிட சென்றதாக கூறப்படும் கொள்ளையர்கள் அதிசய மானவர்கள் என்று ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனை கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த கொள்ளையர்கள் அதிசய மான கொள்ளையர்கள். ஊடகவியலாளரின் வரலாற்றை தேடி, சான்றிதழ் களை பரிசோதித்து, ஆவணங்களை ஆராய்ந்து பார்த்துள்ளனர். அந்த இடம் கொள்ளையடிக்க பொருத்தமான இடமா என்பதை அறிய அவர்கள் அப்படி செய்திருக்கலாம்.

இந்தச் சம்பவம் தொடர்பில், அது வரிசைப்படுத்தப்பட்ட விதம், சம்பவத்தின் முன்னர் இடம்பெற்ற சம்பவங்கள் என்பன நியாயமான சந்தேகத்தை ஏற்படுத்துகிறது என்பதனால் அந்த சந்தேகத்தை நிவர்த்திக்கும் பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளது.

அதேபோன்று மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையை வருமாறு அழைக்கின்றனர். மறுபுறம் அரசாங்கத்தின் அடிவருடிகள் அவர் வருகிறார் என்று கூக்குரலிடுகின்றனர்.

இலங்கைக்கு நேற்று வந்த நவநீதம்பிள்ளை தொடர்பில் பெரும் வாத, விவாதங்கள் ஏற்பட்டுள்ளன. ஐக்கிய நாடுகள் அமைப்பு அதனை சார்ந்த ஏனைய அமைப்புகளும் உலகத்தில் அவசியமானவை என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.

நாடுகளுடான பிணைப்பு, நிலைப் பாடு, நிலவும் பிரச்சினைகளை தீர்ப்பது, நாடுகளில் நியாயத்தை கட்டியெழுப்பு வது போன்ற நடவடிக்கைகளுக்கு இந்த அமைப்புகள் தேவைப்படுவதாக நாங் கள் எண்ணுகிறோம்.

எனினும் தற்போது இந்த அமைப்பு இந்த எதிர்பார்ப்புகளின்படி செயற்படு வதில்லை. நாடுகள் இடையில் சம உரிமைகள், நியாயம், இறையாண் மையை பாதுகாப்பதில்லை.

அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகளின் அரசியல், யுத்தம் தொடர் பான நிகழ்ச்சி நிரலை செயற்படு வதற்காகவே ஐக்கிய நாடுகள் அமைப்பு குரல் கொடுத்து வருகிறது.

கடந்த காலத்திலும் நிகழ்காலத் திலும் எதிர்காலத்திலும் நாடுகள் இடையில் உள்ள சுதந்திரம், இறை யாண்மையை பாதுகாக்கும் முனைப்பு களை ஐக்கிய நாடுகள் அமைப்பு மேற்கொள்ளாது என்பதற்கான பல உதாரணங்கள் இருக்கின்றன.

இலங்கையில் அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் மற்றும் இந்தியா தமது அரசியல் நிகழ்ச்சி நிரல்களை அரங்கேற்ற தற்போதைய அரசாங் கமே உதவி வருகிறது.

தமது அதிகாரத்தை பாதுகாத்து கொள்ளவும் அதிகாரத்தை கைப்பற்ற வும் மனித உரிமைகள், ஜனநாயகம் ஆகியவற்றின் மீது பாரதூரமான அச் சுறுத்தலை விடுத்து வருகிறது.

கடந்த காலங்களில் ஊடகவிய லாளர் பலர் கொலை செய்யப்பட்டனர். பல ஊடக நிறுவனங்கள் தீவைக்கப் பட்டன. ஊடகவியலாளர்கள் தாக்கப் பட்டனர். சவரக்கத்திகளை கொண்டு வெட்டு காயங்களை ஏற்படுத்தினர்.

எனினும் குற்றவாளிகள் எவரும் கைது செய்யப்படவோ, விசாரணை களை நடத்தவோ, தண்டனைகளை வழங்கவோ அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை. இந்த சம்பவங்களில் பின்னணியில் அரசாங்கம் இருப்பதை இது உறுதிப்படுத்தியுள்ளது.

எந்த குற்றவாளிகள் தொடர்பில் விசாரணை நடத்தவும் குற்றவாளிகளை கைது செய்யவும் பொலிஸ் திணைக் களத்திற்கு முடியும். இந்த சம்பவங்களு டன் தொடர்புடைய நபர்கள் கைது செய்யப்படாமல் இருப்பதானது அர சாங்கத்தின் ஆலோசனை இதன் பின்னணியில் இருப்பது தெரிகிறது என்றார். (எ-8)

# இலங்கை அகதிகளின் குழந்தைகளுக்கு நடிகர் கருணாஸ் நிதியுதவி!

தமிழகத்தில் ஆயிரம் மதிப்பெண் களுக்கு மேல் வாங்கும் இலங்கை அகதிகள் குழந்தைகளின் உயர் கல்விக்கு நான் உதவுகிறேன் என நகைச்சுவை நடிகர் கருணாஸ் தெரி வித்தார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை சேலத்தில் அகில இந்திய தேவர் பேரவை சார் பாக பெரியார் பல்கலைக்கழக துணை வேந்தர் டாக்டர் கி. முத்துச்செழிய னுக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண் டார்.

அதன் பின்னர் அவர் செய்தியா ளர்களிடம் பேசியபோது,

இது எங்கள் தேவர் சமுதாயத்தின் குடும்பவிழா. எங்கள் தேவர்கள் குடும்ப விழா. எங்கள் முக்குலத்தோர் புலிப்படை அமைப்பு மூலம் தமிழக முழுக்க உள்ள தேவர் குடும்பங்களை ஒரே குடும்பமாக இணைத்து வருகிறோம்.

தமிழகத்தில் ஆயிரம் மதிப்பெண் களுக்கு மேல் வாங்கும் இலங்கை அகதிகள் குழந்தைகளின் உயர்கல் விக்கு நான் உதவுகிறேன்.

அவர்கள் பி.இ, எம்.பி.ஏ. போன்ற உயர்படிப்பு படிக்க அனைத்துவித உதவி யும் செய்து வருகிறேன்.

இதில் நூற்றுக்கணக்கான குழந்தை கள் பயன்பெற்றுள்ளனர். இனியும் தொடர்ந்து செய்வேன்.

எனவே படிக்க ஆர்வம் இருந்தும், பொருளாதார சூழல் இடம் கொடுக்க வில்லை என்றால் தயங்காமல் கருணாஸை வந்து பார்க்கலாம். அவர் களுக்காக என் வீட்டு கதவு திறந்தே இருக்கும் என்றார் நகைச்சுவை நடிகர் கருணாஸ். (எ-8)

# சிறுவர்களுக்கான மாபெரும் போட்டி

## இந்துவாக வாழ்வோம்

நல்லைக் கந்தப்பெருமான் உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வழங்கும் கேள்வி பதில்கள்

25.08.2013க்கான வினாவும் விடையும்:-

வினா:-இந்து தர்மத்தில் வாழ்க்கையின் நான்கு நிலைகளும் எவை?

விடை: பிரம்மச்சர்யம் (மாணவநிலை)
கிருஹஸ்தம் (குடும்ப வாழ்க்கை)
வனப்ரஸ்தம் (குடும்ப வாழ்க்கையை துறத்தல் அல்லது துறவுக்கு தயாராதல்)
சந்நியாசம் (துறவு வாழ்க்கை)

26.08.2013: வினா:- மூட நம்பிக்கைகள் என்றால் என்ன?

விடை நாளை...

மேலே தரப்பட்டுள்ள கேள்வி விடைகளை ஒரு அப்பியாசப் புத்தகத்தில் ஒட்டி அல்லது எழுதி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி (01.09.2013) நண்பகல் 12 மணிமுதல் பிற்பகல் 4 மணிக்கு இடைப்பட்ட நேரத்தில் நல்லூர் மகேஸ்வரன் மணி மண்டபத்தில் கையளிக்கும் போது துணுக்குகளில் வரும் கேள்விகளுக்கு சரியான பதிலைச் சொல்லும் அனைவருக்கும் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும். 18 வயதிற்குட்பட்டவர்கள் மட்டும் பங்குபற்றலாம்.

சின்மயா மிஷன்
யாழ்ப்பாணம்

இல.9, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர்.

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## உயர்புகழ்



எப்படியும் புகழ் பெறலாம், இருக்கலாம், எப்படி வேண்டுமானாலும் பெறலாம் என்பது முறையன்று. நல்ல உயர் புகழ் உலகத்துக்கு நன்மையான காரியங்களையே செய்து அதனாலே மக்கள் மனம் ஒரு நிறைவு பெற்று அவர்கள் வாழ்க்கையிலே துன்பங்கள் நீங்கி இன்பம் மலரக் காணும் பொழுது அந்த மக்களால் அளிக்கக் கூடிய ஒரு வாழ்த்து, ஒரு மனநிறைவுதான் புகழ்.

ஆகவே, புகழ் என்பது தான் விரும்பிப் பெறுவதோ தானே ஏதேனும் ஒன்றைச் செய்து அதன்மூலமாக வரவேண்டும் என்று நினைப்பதோ சரியன்று. தன் செயலின்மூலமாக மக்கள் காட்டும் மனநிலைதான் புகழாக இருக்கும். அதுவே உயர் புகழாகவும் இருக்கும்.

நல்ல முறையில் ஆற்றும் கடமையின் மூலமாக எத்தனையோ பேருடைய வாழ்க்கை செழிப்புறும். அவர்களுடைய உள்ளங்கள் மலரும். நிறைவு பெறும். அதுவே அந்த வாழ்த்தே, அந்த நினைவேதான் ஒரு மனிதனுக்குப் புகழ் என்று கூறப்படுகிறது. அத்தகைய புகழ்தான் உயர் புகழ் ஆகும்.

# கசூரினா கடலில் முதியவர் மரணம்

காரைநகர் கசூரினா கடலில் மூழ்கி முதியவர் ஒருவர் உயிரிழந்தார். இச் சம்பவம்நேற்றுமதியம் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் யாழ்ப்பாணம் அரியாலை நாவலடியைச் சேர்ந்த சண்முகம் பொன்னுத்துரை (வயது 70) என்பவரே மரணமானவர் ஆவார்.

மரணமானவரின் உடல் உடனடியாக காரைநகர் கிராமிய வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. பின்னர் மரண விசாரணைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப் பப்பட்டது. இது தொடர்பாக ஊர்காவற் துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (எ-246)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒட்டுசுட்டான் பண்டாரவன்னியன்

# ஓட்டுத்தொழிற்சாலையை புனரமைக்குக



(மல்லாவி)

**முல்லை.மாவட்டத்தில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட ஒட்டு சுட்டான் பண்டாரவன்னியன் ஓட்டுத் தொழிற்சாலை யுத்தம் காரணமாக அழிவடைந்த நிலையில் மக்கள் மீள்குடியேற்றத்தின் பின் மீள ஆரம்பிப்பதில் இழுபறி நிலை காணப் படுவதால் இத் தொழிற்சாலையை நம்பியுள்ள பல நூற்றுக்கணக் கான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

இது தொடர்பில் தெரிய வருவது,

கடந்த 1968 ஆம் ஆண்டு 13 ஏக்கர் காணியில் 33 தொழிலாளர்களுடனும் பாரிய இயந்திரங்களின் உதவியுடனும் தனது செயற்பாட்டை ஆரம்பித்தது. மேற்குறித்த தொழிற்சாலையானது தினசரி நாள் ஒன்றுக்கு 3 ஆயிரம் ஓடுகளும் 2 ஆயிரம் செங்கற்கள் உட்பட பல்வேறு வகையான தரை ஓடுகள்,கிறில், கற்கள் என்பவற்றை உற்பத்தி செய்ததுடன் 140 குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பையும் வழங்கியுள்ளது.

1996 ஆம் ஆண்டு யுத்தத்தினால் சேதமடைந்த இத் தொழிற்சாலை தனது செயற்பாட்டை முற்றாக இழந்தது.

ஆரம்பத்தில் இத் தொழிற்சாலைக்குரிய காணி உரிமை இலங்கை செரமிக் கூட்டுத்தாபனத்தின் கீழ் இருந்துள்ளது. தற்போது இத் தொழிற்சாலைக் காணியை அரச வளங்கள் மற்றும் கைத்தொழில் கூட்டுத்தாபனம் உரிமை கோருகின்றமையினாலேயே முல்லை. மாவட்ட சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தினால் 2 கோடியே 40 இலட்சம் ரூபா செலவில் பாரிய இயந்திரங்கள் மற்றும் பல நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் ஆகியவற்றுடன் இயக்க எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது. தற்போது 30 மனித வலுக்கள் மட்டுமே செயற்படுகின்ற நிலை காணப்படுகின்றது.

இத்தொழிற்சாலையினை முல்லை. மாவட்ட சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கங்களின் சமாசத்திற்கே பெற்றுக் கொடுப்பதற்கான கலந்துரையாடல் கடந்த 21 ஆம் திகதி புதன் கிழமை காலை 10 மணியளவில் தொழிற்சாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் இலங்கை செரமிக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளருடன் ஜனாதிபதியின் முல்லை.மாவட்ட இணைப்பாளர் ச.கனகரத்தினம், வணிக மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு பிரதேசங்களின் இணைப்பாளர் த.நவநீதன் மற்றும் இத் தொழிற்சாலையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் இம்மானுவேல் ஜோசப் ஸ்ராலின், இராணுவ பொறுப்பதிகாரிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துரையாடலை நடத்தினர்.

இதன்போது சில முடிவுகள் மட்டும் இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளதால் மீளவும் பேச்சுவார்த்தைகள் தொடரப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எது எப்படி இருப்பினும் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கும் மற்றும் குறைந்த விலையில் இப்பிரதேச மக்கள் வீடமைப்பு பொருட்களை பெற்றுக் கொள்வதற்கு துறைசார்ந்த அனைவரும் துரித முயற்சி எடுத்து உதவவேண்டும் என மக்களும் சமூக ஆர்வலர்களும் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-15)

## தேர்தல் சுவரொட்டி ஒட்டியவர்கள் கைது

(பூந்தோட்டம்)

வவுனியா ஈச்சங்குளம் பகுதியில் தேர்தல் சட்டத்திற்கு முரணாக சுவரொட்டிகளை ஒட்டியவர்கள் ஈச்சங்குளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை தமிழ் தேசியக்கூட்டமைப்பின் சுவரொட்டிகளை ஈச்சங்குளம் பகுதியில் ஒட்டிக்கொண்டிருந்த மூவரே இவ்வாறு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கடந்த வாரம் கனகராயன் குளம் பகுதியில் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வேட்பாளர் எம். எம். ரதனின் சுவரொட்டிகளுடன் சென்ற வாகனம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதுடன் அதில் பயணித்தவர்களும் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-266)

## அடிப்படை வசதிகளின்றி பரந்தன் பொதுச்சந்தை



(புளியம்பொக்கணை)

கிளிநொச்சி மாவட்ட கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிலுள்ள பரந்தன் பொதுச்சந்தை அடிப்படை வசதிகளின்றி காணப்படுவதாக வியாபாரிகளும் நுகர்வோரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

இச்சந்தையில் நான்கு மலசலகூடங்கள் உள்ளபோதும் ஒரு மலசலகூடமே பாவனையில் உள்ளது. மற்றையவை புனரமைப்பிற்காக மூடப்பட்டுள்ளன.

சுற்றுவேலி அமைக்கப்படாமையால் கால்நடைகள் சந்தையை அசுத்தம் செய்கின்றன. இச் சந்தையில் தினமும் 50 வியாபாரிகள் வியாபாரம் செய்வதோடு 500 இற்கு மேற்பட்டோர் பொருட்களை கொள்வனவு செய்கின்றனர்.

கரைச்சி பிரதேச சபையால் வழங்கப்படுகின்ற நீர் போதாமையால் நீர்ப்பற்றாக் குறை காணப்படுகின்றது.

எனவே, இச் சந்தையில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தரவேண்டுமென வியாபாரிகள் மற்றும் நுகர்வோர் வேண்டுகோள் ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-263)




## வவுனியாவில் இரு குறும்படங்கள் வெளியீடு

(பூந்தோட்டம்)

அரங்காலயாவின் ஏற்பாட்டில் நானும் ஒரு தாய், செக் நெட் ஆகிய இரு குறும்படங்கள் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு வவுனியா நகரசபை பழைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அரங்காலயா இயக்குநர் அ. சத்தியானந்தன் தலைமையில் தென்னிந்திய திரைப்பட இயக்குநர் பாலுமகேந்திராவின் சினிமா பட்டறையை சேர்ந்த கோவர்த்தனன் இயக்கியுள்ள இக் குறும்பட வெளியீட்டில் அறிமுக உரையினை சிவராசா பிரதீப் வழங்கவுள்ளார். (ம-266)

## வீதியை புனரமைத்து தருமாறு கோரிக்கை

(குருமன்காடு)

வவுனியா உப்புளாங்குள வீதி புனரமைக்கப்படாமையால் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்

இவ்வீதி குன்றும் குழியுமாக காணப்படுவதால் பயணிப்போர் விபத்துக்களை எதிர்கொள்ள வேண்டிய நிலையுள்ளது.

இவ்வீதியால் தினமும் பாடசாலை மாணவர்கள் உட்பட பல நூற்றுக்கணக்கானோர் பயணிக்கின்ற நிலையில் புனரமைத்து தருமாறு பலதடவைகள் உரியவர்களிடம் முறையிட்டும் எது விதமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை.

எனவே, இவ்விடயம் தொடர்பாக உரிய தரப்பினர் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பயணிகளும் அப்பகுதி மக்களும் வேண்டுகோள் ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-250)



பூநகரி நகர் பகுதியில் இருந்து நாகதேவன்துறை வரையான 2கிலோமீற்றர் நீளமான வீதி புனரமைக்கப்பட்டு நான்கு மாதங்களில் வெடித்து பிளந்து காணப்படுவதை படத்தில் காணலாம். (படம்:-பூநகரிச் செய்தியாளர்)

## புனரமைக்கப்படாத நிலையில் பூநகரி பொதுமயானம்



(பூநகரி)

பூநகரி நகரப்பகுதியில் இருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள பூநகரி பொது மயானம் காட்டுப் பகுதியில் இருப்பதுடன் 40 வருட காலமாக புனரமைக்கப்படாத நிலையில் பற்றைகள் நிறைந்து காணப்படுவதால் இறுதி கிரியைக்கு மயானம் செல்வோர் பெரும் அசௌகரியங்களை சந்திப்பதாக பொது அமைப்புக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இம்மயானத்தில் மடம், சுற்றுவேலி என்பன அமைக்கப்படவில்லை.

குறிப்பாக கிணறு அமைக்கப்படாமையால் தகனக்கிரியைகளுக்கு அருகில் உள்ள சிறுகுளத்தில் நீரைப் பெறவேண்டிய நிலையுள்ளது.

கோடை காலத்தில் குளநீர் வற்றியுள்ள நிலையில் வீட்டிலிருந்து நீரை எடுத்துச் செல்ல வேண்டிய அவல நிலையும் உள்ளது.

மயானத்திற்கு செல்லும் மணற் பாதை பற்றைக் காடாக காணப்படுவதால் மயானத்திற்கு செல்வோர் பற்றைகளை வெட்டி அப்புறப்படுத்தி விட்டே செல்வதை அவதானிக்க முடிகின்றது.

அத்துடன் வாகனங்கள் எதுவுமே மயானத்திற்கு செல்ல முடியாத நிலையுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக உரியவர்களிடம் பல தடவை முறையிட்டும் எதுவிதமான நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை என சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவித்துள்ளதுடன் இவ்விடயத்தில் கவனமெடுக்குமாறு உரிய தரப்பினருக்கு கோரிக்கை ஒன்றையும் முன்வைத்துள்ளனர். (ம-84)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஷஸ் மழையால் பாதிப்பு



இங்கிலாந்திற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்ரேலிய அணிக்கும், இங்கிலாந்து அணிக்குமிடையிலான ஆஷஷ் தொடரின் 5வதும், இறுதியுமான டெஸ்ற் போட்டியின் 4ம் நாள் ஆட்டம் மழையால் முழுமையாகக் கைவிடப்பட்டுள்ளது.

இடைவிடாத மழையின் காரணமாக 4ம் நாளில் ஒரு பந்து தானும் வீசப்படாத போட்டி கைவிடப்பட்டது. இத்தொடரில் இங்கிலாந்து அணி 3-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கும் நிலையில், இத்தொடரில் ஒரு போட்டியில் தானும் வெற்றிபெறும் வாய்ப்பு அவுஸ்ரேலிய அணிக்கு மேலும் அருகியுள்ளது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலிய அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 492 ஓட்டங்களைப் பெற்றுத் தனது இனிங்ஸை இடைநிறுத்தியதோடு, இங்கிலாந்து அணி 3ம் நாள் முடிவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 247 ஓட்டங்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஜனாதிபதி மஹிந்த ராஜபகஷ 3 நாட்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்று பெலாரஸிற்கு சென்றுள்ளார். பெலாராஸ் நாட்டை சென்ற ஜனாதிபதிக்கு வரவேற்பளிக்கப்படுவதை படத்தில் காணலாம்

# தமிழ் மக்களின் ஒற்றுமையை....

மேடைகளில் இதுகாறும் உங்களைச் சந்தித்த விக்னேஸ்வரன் இன்று உங்களை அரசியல் மேடையில் சந்திககிறான்.

உனக்கேன் இந்தக் கரிசினை என்று பலர் கேட்டுள்ளார்கள். ஒரேயொரு முக்கிய காரணத்தைத்தான் என்னால் கூற முடிந்தது.

அன்றாட அரசியலை சந்திக்கக்கூடிய அன்பர்கள் பலர் இருக்கிறார்கள். ஆனால் இந்த அகன்ற உலகின்பால்பட்ட திண்டாட்ட அரசியலுக்கு முகம்கொடுக்கக் கூடிய சகோதர சகோதரிகள் எம்முன்னே குறைந்து கொண்டே வருகிறார்கள்.

புதியதொரு பரிமாணத்தில் எமது போராட்டத்தை எடுத்துச் செல்ல வல்லவர்கள் நாங்கள் என்பதை ஊரறிய உலகறிய செய்ய ஒரு சந்தர்ப்பம் எங்களுக்குக் கிடைத்துள், ளது. அடுத்த மாதம் 21ஆம் திகதி நடக்கப் போகும் வட மாகாண சபைத் தேர்தல் வட இலங்கை தமிழ் பேசும் மக்களின் வாழ்வில் ஒரு முக்கியமான மைல்கல்.

முதல்முதலாக வடக்கின் தமிழ்ப் பேசும் மக்கள் அனைவரும் ஒரு அலகாக நின்று தமது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கப் போகிறார்கள்.

இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம், பௌத்த என்ற பாகுபாடுகளை மறந்து மாவட்ட, பிரதேச எல்லைகளைக் கடந்து நாம் யாவரும் வட மாகாண மக்களே, ஈழத்து தமிழ்த் தாயின் செல்வக் குழந்தைகளே என்று மார்தட்டும் விதத்தில் ஒற்றுமையாக எமது பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

அதாவது, இருகாறும் பிரிந்திருந்த தமிழ் பேசும் மக்கள் வட மாகாணம் என்ற அலகின் கீழ் ஒன்று சேர்ந்து ஒருமித்து தமது ஒற்றுமையை உலகறிகச் செய்ய ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

தெருக்கள் போட்டார்களே! அவசரம் அவசரமாக போட்டார்களே! இது யார் பணத்தில் ? பாதிக்கப்பட்ட எம் மக்களின் அல்லல்களை பார்த்துப் பரிதாபப்பட்டு அண்டை நாடுகள் எமக்கு அனுப்பிய பணத்தைப் போட்டல்லவா தெருக்கள் அமைத்தார்கள்?

அங்கு வேலை வாய்ப்பு கிடைத்தது யாருக்கு? எம்மவருக்கா அல்லது தெற்கிலிருந்து வந்த சிங்கள மக்களுக்கா?

1956ஆம் ஆண்டில் இருந்து 2009ஆம் ஆண்டுவரை இந்தப் பக்கம் தலைவைத்துப் பார்க்காத ஆட்சியாளர்கள் தெருக்களை ஏன் போட்டார்கள்?

வீடிழந்து வேலையிழந்து உற்றார் உறவினர்களை பறிகொடுத்து தமது பாரம்பரிய காணிகளுக்குச் செல்ல முடியாது இராணுவக் கெடுபிடிகளுக்குள் அல்லலுறும் எம் மக்களுக்காகவா தெருக்கள் அமைத்தார்கள்?

இல்லவே இல்லை! தமது இராணுவத்தினர் வட மாகாணத்தின் எந்தப் பகுதியையும் உடனேயே சென்றடைய வேண்டும். அங்கு வசிக்கும் தமிழ் பேசும் மக்களை அடக்கி ஒடுக்கி வைக்க வேண்டும் எனற எண்ணத்திலேயே தெருக்களை அமைத்தார்கள்.

வீடுகள் செய்து தந்துள்ளோம் என்பவர்கள் ஏன் தெற்கிலிருந்து தென்னவர்களைக் கொண்டு வந்து அந்த வீடுகளில் குடியிருத்தியிருக்கிறார்கள்.

ஏதாவது தகுதியடிப்படையில் வீடுகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தரப்பட்டுள்ளனவா அல்லது லஞ்சமும் ஊழலும் தலைவிரித்தாடுகின்றனவா? இப்பேர்ப்பட்ட கேள்விகளை எம் சகோதர சகோதரியரிடம் நாங்கள் கேட்க வேணடும். அவர்களும் இந்த முறை எமக்கே வாக்களிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

டக்ளசுக்கும் தவராசாவுக்கும் அங்கஜனுக்கும், அவர்களிடையே விருப்பு வாக்குகளின் அடிப்படையிலேயே போரும் போராட்டங்களும் நடைபெற்றால் கூட மூவருமே எங்கள் சகோதரர்கள். தமிழ் பேசும் சகோதரர்கள்.

தமிழ்ப் பேசும் எம் மக்களின் வருங் காலத்தில் க்ரிசனை உடையவர்கள் அவர்கள் என்று நான் கருதுகிறேன். ஆனால் அவர்கள் போகும் பாதை பிழை என்பது என் கருத்து.

தற்போது தான்தோன்றித்தனமாக பலருக்கு வேலைவாய்ப்புகளும் சலுகைகளும் திடீரென்று கிடைப்பதை அவதானிக்கலாம். ஆனால் இவை எந்த நேரத்திலும் வாபஸ் பெறப்படலாம். சட்டமுறையற்றவை என்று நீதிமன்றங்களால் பிரகடனப்படுத்தப்படலாம். வேறு பல விதங்களில் பறிபோகலாம்.

எமது நோக்கு இருமுனை நோக்குக் கொண்டது. ஒன்று தூர நோக்கு மற்றையது கிட்டைய நோக்கு.

நாடு சுதந்திரமடைந்தது முதலில் நாங்கள் படிப்படியாக எமக்கென வகுத்திருக்கும் தூர நோக்கு தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய வசிப்பிடங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அவற்றில் வாழ் மக்கள் ஒரு தேசிய அலகு என்பதை உலகம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவற்றின் அடிப்படையில் எம்மை நாமே ஆள எமக்குச் சுயநிர்ணய உரித்து நாட்டின் எல்லைக்குள் வழங்கப்பட வேண்டும் என்பதுடன் அதனுள் தமிழ் பேசும் முஸ்லிம் மக்களின் தனித்துவம் பாதுகாக்கப்பட்டு அவர்களின் அபிலாஷைகள் உள்ளடக்கப்பட வேண்டும் என்பன. இந்தத் தூர நோக்கில் எமக்கு எந்தவித சந்தேகமும் இல்லை அதை அடைந்தே தீருவோம்.

இதற்கு நாங்கள் மத்திய அரசாங்கத்துடன் நம்பிக்கைய வளர்க்கும் பணிகளில் ஈடுபட வேண்டும். இன்று சந்தேகத்துடனேயே இரு இனங்களும் ஒருவரை ஒருவர் நோக்குகின்றனர். எங்கே நாங்கள் பிரிந்து சென்றுவிடுவோமே இந்தியா அதற்கு உதவி புரிந்துவிடுமோ என்று நினைத்து அரசாங்கம் சீன வலைக்குள் அகப்படப்பார்க்கின்றது, அல்லது அகப்பட்டுவிட்டதென்றே கூறலாம் இது ஒரு சிக்கலான விடயம் இதுபற்றி எம்மை வழிநடத்தப் போகும் பாரிய பலமாக அமையப் போவது உங்கள் வாக்கே. செப்டெம்பர் 21ஆம் திகதி நீங்கள் இடும் அந்தப் புள்ளியே எம்மை புதியதொரு போராட்டத்தில் ஈடுபட எமக்கு உறுதுணையாக இல்லை -ஒரே துணையாக அமையப் போகிறது. உங்கள் வாக்கு இல்லை என்றால். எமது கனவுகள் நனவாகாது. உங்கள் வாக்கு எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாக கிடைக்கிறதோ அந்தளவுக்கு எமது செயற்திறனும் சிறக்கும். எம்மேலான மறந்தவர்களின் கணிப்பும் மேம்படும்.

ஆகவே இது காறும் தேர்தல்களில் சிரத்தை காட்டாது இருந்து வந்த எம் மக்கள் இம்முறை மிக்க உணர்ச்சி வேகத்துடன் செயற்படவேண்டும். எமது வடமாகாணத்திற்கு தமிழ் பேசும் எம்மவரால் அரசு ஒன்று நிறுவப்படவேண்டும் என்பதில் நீங்கள் ஒவ்வொருவரும் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும்.

எம்மை வெறுமனே வெல்ல வைத்தால் போதாது. 36இல் 30 ஆசனங்களையாவது வெல்ல நீங்கள் பாடுபடவேண்டும்.

வீட்டில் உள்ள, அயலில் உள்ள வயோதிபர், வருத்தக்காரர், வலது குறைந்தவர்கள் என்று எல்லோரையும் அழைத்துச் சென்று வாக்களிக்க வேண்டும். இதற்காகப் பாடுபட்டும் நீங்கள் ஒவ்வொருவருமே போராளிகள் என்பதை மறந்து விடாதீர்கள். புதியதோர் போராட்டத்தில் நீங்கள் யாவருமே பங்குதாரர்கள்.

ஜனநாயக அடிப்படையில் பேசித்தீர்ப்பதும், முடியாவிட்டால் உலக அரங்கில் எமது இன்னல்களை எடுத்துரைத்து அவர்களின் நல்லெண்ண செயற்பாடுகளுக்கு வழி அமைப்பதுமே எமது குறிக்கோள். அவற்றில் நாங்கள் கணிசமான முன்னேற்றம் காண வேண்டுமானால் நீங்கள் யாவரும் ஒன்று சேர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்கவேண்டும்.

வாழ்க தமிழ், வாழ்க தமிழர் தாயகம், வளமுடன் வாழ்க எம் தமிழ் மக்கள் என்றாா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர் சி.வி.விக்னேஸ்வரன். (எ-6)

# இலங்கை வந்தார்...

இலங்கை வந்துள்ளார்.

தனது விஜயத்தின் முடிவில் ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணையத்திற்கு நவிபிள்ளை அறிக்கையொன்றையும் சமர்ப்பிக்கவுள்ளார்.

இதேவளை, ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோரையும் நவிபிள்ளை சந்தித்துப் பேசசுவார்த்தை நடத்துவார்.

நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம், தலைமை நீதியரசர் மொஹான் பீரிஸ், சட்டமா அதிபர் பாலித்த பெர்ணான்டோ ஆகியோரையும் ஐ.நாவின் மனித உரிமைகள் கவுன்சில் ஆணையர் சந்தித்துப் பேசுவார்.

போர்க்காலத்தில் காணாமல்போனவர்களின் உறவினர்களையும் ஊடக அமைப்புகளின் பிரதிநிதிகளையும் அவர் சந்திப்பார்.

உள்நாட்டுப் போரின் இறுதிக் காலப் பகுதியில் சுமார் 40 ஆயிரம் பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளதாக ஐநா அறிக்கை ஒன்று கூறுகிறது.

ஆனால், இந்தக் குற்றங்களுக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்கள் மீது விசாரணை நடத்த அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்ற விமர்சனங்கள் உள்ளன.

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை முழுமையான விசாரணைகளை நடத்த முன்வராவிட்டால், எதிர்வரும் நவம்பரில் நடக்கவுள்ள பொதுநலவாய மாநாட்டை இலங்கையில் நடத்த அனுமதிக்கக் கூடாது என்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புகள் கோரிக்கை விடுத்து வந்துள்ளன. (எ-8)

# ஜனாதிபதி...

வேட்பாளர்களான நீங்கள்தான் மக்களிடம் எடுத்துச் சொல்லவேண்டும். ஆளும் கட்சி வேட்பாளர்கள் மீது மக்கள் நம்பிக்கை கொள்ளச் செய்ய வேண்டும். அப்போதுதான் நாம் தேர்தலில் வெற்றிபெற முடியும் என்றார்.

மேலும் ஜனாதிபதி எதிர்வரும் 14ஆம் திகதி முல்லைத்தீவு மக்களை நேரில் சந்தித்து தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடவுள்ளார். புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் மைதானத்தில் பிற்பகல் 2 மணிககு பிரமாண்டமான முறையில் தேர்தல் பிரசார ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. (எ-267)

# ஒக்ரோபரில்...

திட்டமிட்டுள்ளார்.

கொழும்பில் எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள பொதுநலவாய அரசியல் தலைவர்களின் மாநாட்டில் பங்கேற்பது தொடர்பில் முடிவு செய்வதற்கு இவரின் இலங்கைக்கான பயணத்தை இந்திய மத்திய அரசு பயன்படுத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே, பொதுநலவாய அரசியல் தலைவர்களின் மாநாட்டில் இந்தியா பங்கேற்பது குறித்து இதுவரை அதிகாரபூர்வமாக முடிவு செய்யப்படவில்லை என புது டில்லியில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களுக்கு சல்மான் குர்ஷித் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் கொழும்பில் இடம்பெறவுள்ள இம்மாநாடு தொடர்பிலான தமிழக அரசியல் கட்சிகளின் உணர்வுகள் மற்றும் பல்வேறு அம்சங்களையும் ஆராய்ந்தே இது தொடர்பில் மத்திய அரசு முடிவு செய்யும் என சல்மான் குர்ஷித் செய்தியாளர்களிடம் மேலும் தெரிவித்துள்ளார்.(எ-8)

# இலங்கையை...

மனித உரிமைகளின் நிலைமைகள் குறித்து ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அறிக்கையிடுவேன்.

என்னுடைய தனிப்பட்ட கருத்துக்களை நான் முன்வைக்கப் போவதில்லை. இலங்கை உட்பட சர்வதேச நாடுகளில் மனித உரிமைகளின் தரத்தினை ஆராய்ந்து அதன் அடிப்படையிலேயே நான் செயற்பட்டு வருகிறேன்.

மேலும், தனிப்பட்ட விஜயமாக 1973ம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்திருக்கின்றேன். மனித உரிமைகள் ஆணையாளராக, இது இலங்கைக்கான முதல் விஜயமாகும் என்றார்.

நேற்று கொழும்பு வந்தடைந்த நவநீதம் பிள்ளை கொழும்பில் உள்ள விடுதியொன்றில் ஐக்கிய நாடுகளின் பணியாளர்களை சந்திப்பதற்கு முன்னர் ஊடகவியலாளர்களை சந்தித்தார். (எ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். போதனா வைத்தியசாலையின் 91 மருத்துவர்களுக்கு திடீர் இடமாற்றம்!

## வைத்தியசாலைப் பணிகள் ஸ்தம்பிக்கும் அவலம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் மருத்துவர்களில் 91 பேருக்கு இடம்மாற்றம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

,ஏற்கெனவே 170 மருத்துவர்களுக்குப் பற்றாக்குறை இருக்கும்போது, எதுவித பதிலீடுகளும் இன்றி அவசர அவசரமாக 91 மருத்துவர்களுக்கு இடமாற்றம் வழங்கும் நடவடிக்கை யாழ்.போதனா வைத்தியசாலையின் இயங்குநிலையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என அஞ்சப்படுகிறது.

வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர், இத்தகைய இடமாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படுவது தேர்தல் சட்டத்திற்கு முரணாக இருந்த போதிலும், 91 மருத்துவர்களை இடமாற்ற வேண்டும் என்பதில் சிலர் உறுதியாக இருப்பதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை மயக்க மருந்தேற்றல் பிரிவிற்கு 45 மருத்துவர்கள் தேவையாகவுள்ள போதிலும் 24 மருத்துவர்களே இப்பிரிவில் கடமையாற்றுவதாகவும் இதில் ஒரு மருத்துவருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

தேர்தல் காலத்தில் எந்தவிதமான பதிலீட்டு ஏற்பாடுகளுமின்றி 91 மருத்துவர்கள் இடமாற்றப்பட்டால் யாழ்.போதனா வைத்தியசாலையின் இயங்கு நிலையில் பெரும பாதிப்பு ஏற்படுமென அஞ்சப்படுகிறது.(ரு)

# அல்லைப்பிட்டியில் வெளிப்படும் மனித மண்டை ஓடுகள்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.அல்லைப்பிட்டி பகுதியில் மனித எலும்புக் கூடுகள் காணப்படுவதாக பிரதேச மக்கள் தெரிவித்ததோடு நேற்றையதினம் அப்பகுதியிலுள்ள கிடங்கொன்றிலிருந்து மண்டை ஓடுகளை எடுத்துச் சிறுவர்கள் கற்களினால் உடைத்துள்ளனர் எனவும் தெரியவந்துள்ளது.

கடந்த 2006ஆம் ஆணடு குறித்த பகுதியில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக பலர் உயிரிழந்துள்ளதாகவும் அவ்வாறு உயிரிழந்தவர்களின் எலும்பு எச்சங்களே தற்போது வெளிப்படுவதாகவும் இன்னும் பல ருடைய எலும்புக் கூடுகள் வெளிப்படலாம் எனவும் பிரதேச மக்கள் தெரிவித்ததோடு தமது அச்சத்தினை யும் வெளியிட்டுள்ளனர்.

அல்லைப்பிட்டி சந்திக்கு அருகிலுள்ள ஆலயம் ஒன்றினை அண்மித்த பகுதியிலேயே இந்த மண்டை யோடுகளை சிறுவர்கள் நேற்று எடுத்து உடைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6)



சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட பிரதான அமைப்பாளர் ஆகிய
**திரு. அங்கஜன் இராமநாதன்** ஏற்பாட்டில்
மக்கள் குறை தீர்க்கும் நடமாடும் சேவை
இடம்பெற உள்ளது.
இன்று 26.08.2013 திங்கட்கிழமை காலை
10.30 மணி தொடங்கி 12.30 மணிவரை
**அங்கஜன் இராமநாதனின்**
சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தெல்லிப்பளை கிளை
அலுவலகத்தில் இடம் பெறும் இந்த நடமாடும்
சேவையில் சிறு ஏற்றுமதி பயிர் ஊக்குவிப்பு
**கௌரவ அமைச்சர் றெயி நொட்குறே**
கலந்து கொள்ள உள்ளார். தொடர்ந்து
மாலை 6.00 மணி முதல் 9.00 மணிவரை
நெல்லியடி கொடிகாமம் வீதியில் அமைந்துள்ள
**அங்கஜன் இராமநாதனின்**
சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் அலுவலகத்தில்
இவ் நடமாடும் சேவை இடம்பெற உள்ளது.
இந்த நடமாடும் சேவையில் கலந்து கொண்டு
தமது குறைகளை அமைச்சிடம் தெரிவித்து
தீர்வுகளை பெற்றுக் கொள்ளுமாறு
சிறீலங்கா சுதந்திரக் கட்சியின்
யாழ். மாவட்ட பிரதான அமைப்பாளர்
**திரு. அங்கஜன் இராமநாதன்**
கேட்டுக் கொள்கிறார். (C-4468)

## சிற்றூர்திகள்....

முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து தனியார் சிற்றூர்திச் சங்கத்தினர் மீது குற்றஞ்சாட்டி போக்குவரத்துச் சபையினர் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் சந்திப்பு நடைபெற்றது. எனினும் அதில் உரிய முடிவு எடுக்கப்படவில்லை.

இந்நிலையில் இன்று முற்பகல் 11 மணிக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் சந்திப்பொன்று நடைபெறவுள்ளது. அதில் சாதக முடிவு கிடைக்கும் வரை நாம் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை வெளிமாவட்டங்களுக்கான சேவைகள் வழமை போன்று நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.(எ-1)

உடன் தேவை
பத்திரிகை மடிப்பவர்கள்
ஆர்வம் உள்ளவர்கள் உடன் நேரில் வரவும்
(ஆண்கள் மட்டும்)
மேலதிக விபரங்களுக்கு:
முகாமையாளர்
வலம்புரி
இல. 3, 2ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

Media & Education
சிகரம்
கல்வி-தொழில் வழிகாட்டி
உற்சவகால விசேட அலுவலகம்
இன்று மாலை 4.00 மணிக்கு நல்லூர் ஆலய முன்வீதியில் திறந்து வைப்பு
உள்நாட்டு, வெளிநாட்டு கல்வி–தொழில் வழிகாட்டி சேவை
வெளிநாட்டு நட்சத்திர விடுதிகள் மற்றும் அமெரிக்கக் கப்பல்களில் வேலைவாய்ப்புக்கள்
UK, Australia, New Zealand, Canada, America & Malaysia பல்கலைக்கழக அனுமதிகள்
சிகரம் தொழில் வங்கி
உடனே சென்று பதிவுகளை மேற்கொண்டு கல்வி – தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்
நல்லூர் ஆலய முன்வீதியில்
505/1 பருத்தித்துறை வீதி, நல்லூர்
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

Digital
விஷேட கட்டண சலுகைகள்
இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ்
பொதி விநியோக சேவை

- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுபப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
(C-4455)
WESTERN UNION
MONEY TRANSFER
மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்
62/16 ஸ்ரான்லி வீதி
(சம்பத்வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு -
0212224040 / 0772931062

வெளிநாடுகளிற்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
உலகின் முதற்தர பொதிகள் சேவை நிறுவனங்களின் நேரடி முகவர்
- முன்னணி பொதிகள் சேவை நிறுவனங்களின் கூட்டிணைவுடன் அதி விரைவு சேவை
- 3–4 நாட்களில் உலகின் எப்பாகத்திற்கும் ஒப்படைக்கும் சேவை.
- USA, மற்றும் Australia நாடுகளுக்கும் எம்மூடாக உணவுப் பொருட்களை அனுப்பிக் கொள்ளலாம்.
அதிவிரைவு – பாதுகாப்பு – நம்பகத்தன்மை
ஸ்கைவே எக்ஸ்பிரஸ்
வாடிக்கையாளரின் வசதிக்கேற்ப கட்டணத்தெரிவுகள்.
மிக குறைந்த கட்டணத்தில் அதி விரைவு சேவை எம்மிடம் மட்டுமே
Sky Way Express
International Courier & Cargo Service
355A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். Tel: 021 221 9792

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.08.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.